563

தங்கமம்

சர்வதாரி
மாசி
அணா 8.

1949
198932.



ஐ. மா. கவர்னர் ஸ்ரீமதி சரோஜினி நாயுடு.

லக்ஞோவில் நடந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியடைந்தவர்கள் பரிசுகளைப் பெற்றுக் கொண்டபின் கவியரசிக்கு மரியாதை செலுத்தும் காட்சி.

கிரி சூர்ணம்.

நாள் பட்ட மலச்சிக்கலைப் போக்கும். ஆரோக்யத்தை உண்டாக்கும்.

அவுன்ஸ் விலை 12 அணுதான்.

ராஜாம்ருத தைலம்.

கண்களுக்குக் குளிர்ச்சி யளித்து தலை வலியை நீக்கி, கூந்தலை பளப்பளப்பாக வளரச் செய்யும்.

அவுன்ஸ் விலை 12 அணு தான்.

வி. பி. இடையாது. முன் பணம் அனுப்பவேண்டும்.

டாக்டர் குமாரி நாமகிரி

51, ஸர் உஸ்மான் ரோடு

தி. நகர் : : சென்னை

அல்பான்ஸோ டாடே

எழுதிய சிறுகதைகள்

பிரஞ்சு மூலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவர்

ஸ்ரீமதி எஸ். விசாலாக்ஷி

விலை ரூபாய் ஒன்று.

கிடைக்குமிடம்

"குங்குமம்" காரியாலயம்

மதராஸ் 10.

VISIT

MEERANS

for Textiles of every description.

Distributors of Buckingham & Carnatic Mill goods, Mettur Mill goods, Bombay & Ahmedabad goods.

STOCKISTS OF:

TWEEDS—
FURNISHING
FABRICS—
HOSIERY—
FOREIGN
IMPORTED
GOODS.

S. MEERA SAHIB & BROS.,

38, EVENING BAZAAR ROAD,
MADRAS



நேரு கபே

142, தேவராஜ முதலி தெரு

மதருஸ் 3

எல்லாவிதமான தித்திப்பு பக்ஷணங்களுக்கு
நேர்த்தியான விடுதி

உயர்ந்த இந்திய சிற்றுண்டிகளை
விநியோகிப்பவர்கள்

குளிர்ந்த பானங்களும், பழ ரஸங்களும் விசேஷம்

It's Recognised

V. T. STORES

Direct Importers of :

Branded Grocery, Standard Provisions, Patent Medicines Toilet Wares, Paris Perfumeries, Smoking Requisites, Confectionery and Presentation Novelties and everything that the home needs.

Always Shop at :

V. T. ABDUR RAHMAN & CO.

The Well Known Grocers, General Merchants and Mess Purveyors

275—A, CHINA BAZAR ROAD, G. T., MADRAS

E. A. WATCH CO., MADRAS

Telephone : 3659 Telegram : ZINNACO

ESTABLISHED 1916

P. Alli Mohamed Zinna & Co.,

67/68 Rattan Bazaar Road,
P. T., MADRAS-3

Direct Importers & Distributors of :—

Coffee Grinders
Hurricane Lanterns
Thermos Flasks
Glassware
Grocery
Cutlery

Petromax Lamps and Spare parts
Stoves & Blow Lamps & parts

Telegram : "PERFEX" Telephone : 3879

F. X. PEREIRA & SONS

Estd. 1889.

99, GODOWN STREET, MADRAS 1.

INDENT DEPARTMENT: Representing many well-known manufacturers and exporters throughout the world. All classes of goods handled.

Agents :

THE CHINA MERCHANTS STEAM NAVIGATION CO. SHANGHAI.

THE CHANDBALI STEAMER SERVICE COMPANY LTD. CALCUTTA.

Air Booking Agents :

DECCAN AIRWAYS LTD.

STEVEDORES, SHIP CHANDLERS AND CONTRACTORS.

EXCELLENT BANK REFERENCES

குடந்தை

கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்

நீங்கள் பூரண திருப்தியுடன் அணிந்து கொள்ளும் நவநாகரீகமான கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள் நிறைந்த எங்கள் (ஷோ ரூம்) கடைக்கு விஜயம் செய்யுங்கள். நீங்கள் விரும்பும் ஆடைகளை வாங்கிக் கொள்ளலாம்.

அறிவிப்பு—எந்தவிதமான ஆர்டர் சேலைகளையும் குறித்த காலத்தில் தயார் செய்து கொடுப்போம்.

உங்கள் ஆதரவைக் கோரும்:

கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்,

கொள்ளேகால் பட்டுச் சேலைகள் தயாரிப்பவர்கள்.

99 (மாடி) பெரிய தெரு, கும்பகோணம்

Props. S. K. G. & SONS.

அரசாங்கம், நகர பரிபாலன சபைகள், ரயில்வே முதலிய ஸ்தாபனங்களுக்கு உயர்தரமான மரச் சாமான்கள் சப்ளை செய்பவரான

கே. எஸ். வெங்கடேஸ்வரா

அண்டு பிரதர்ஸ்

[10, பிராட்வே, சென்னை.]

உங்கள் வீடுகளை சுகமான ஆசனங்களாலும் அழகிய சாமான்களாலும் நிரப்ப காத்துக்கொண்டிருக்கிறார்கள்.



குங்குமம்

ஆசிரியை : எஸ். விசாலாக்ஷி

சர்வதாரி—மாசி

சிமிழ் 1. திலகம் 5

"குங்குமம்" காரியாலயம்

'முரளி'

பச்சையப்பன் ஹாஸ்டல் ரோடு,

சென்னை 10.

பொருளடக்கம்

பக்கம்

அட்டைப்படம் : ஸ்ரீமதி மீரு மாதா ...
1. தலையங்கம்—அன்னை கஸ்தூர்பா ... 9
2. ஸ்ரீ மீரு மாதா—சங்கு ஸ்ரீ சுப்ரமணியன் ... 13
3. தாலாட்டும் தவம்—ஸ்ரீ திருப்புகழ் மணி ... 17
4. பெற்ற தாயின் மகிமை—
ஸ்ரீ எஸ். கணபதி சுப்ரமண்யம் ... 20
5. ஸ்ரீ நாராயண தீர்த்த யதீந்திரர்—
ஸ்ரீ டி. வி. சீதாராமய்யர் ... 23
6. கற்பனை யுலகில்—ஸ்ரீமதி பாலாம்பிகை ... 27
7. திருந்திய நாட்டுப்பெண்—"மாலினி" ... 33
8. கற்பனையும் வாஸ்தவமும்—ஸ்ரீமதி என். பத்மா ... 39
9. சக்தி சாதனங்களின் நன்மையும் தீமையும்—
ஸ்ரீமதி சுந்தரம்மாள் ராகவாச்சாரி ... 44
10. குடும்பவாழ்க்கை—ஸ்ரீமதி ஜானகி கிருஷ்ணன் ... 47
11. சுகாதாரக் கல்வி—த. ந. ஸ்ரீ. ராகவாச்சாரி ... 50
12. பெண்களின் சமூக அந்தஸ்து—"தராசு" ... 53
13. குற்றவாளியின் உள்ளம்—ஸ்ரீமதி ராஜம் நரஸிம்மன் ... 62
14. அவனிப் பூந்தோட்டத்து ஞானி—
சாது ஸ்ரீ முருகதாஸ் ... 65
15. சரளாவின் பொக்கிஷம்—ஸ்ரீமதி செம்பகமணி ... 68
16. ஈரல் குலைக்கட்டி—"கல்பனு" ... 77
17. தேள்கடி சிகிச்சை—குமாரி சியாமளா ... 81

விசேஷ பகுதிகள் : பெண்கள் பார்லிமெண்ட், கேள்வி பதில், அழகுக் குறிப்புகள், சமையல், கடிதங்கள், சிறுவர்பகுதி.

அன்னை கஸ்தூர்பா

சிவராத்திரி நோன்பு

அன்னை கஸ்தூர்பாவின் அஸ்திகளைத் திரிவேணி சங்கமத்தில் சேர்க்க எடுத்துச் செல்லும்போது, காந்திஜி இந்த சோதனையை எப்படி சகித்துக்கொண்டார் என்பதை ஸ்ரீ தேவதாஸ் வர்ணிக்கிறார். "அவர் (காந்திஜி) மிகவும் அயர்ந்து காணப்பட்டார். தனது ஜீவியத்தில் ஏற்பட்ட துயரம் நிறைந்த இந்த சம்பவத்திற்காக காந்திஜி துக்கிக்கிறார். ஏனெனில் அவர் இன்றிருக்கும் (மகாத்மாவாக இருக்கும்) நிலைக்கு அவள் (அன்னை கஸ்தூர்பா) அநேகமாக பொறுப்பாளியாக இருந்தாள்," என்று எழுதுகிறார்.

அன்னை கஸ்தூர்பா தன்னை அண்ணல் மகாத்மாவோடு ஐக்கியப் படுத்திக்கொண்டு அன்பு, சேவை, த்யாகம் முதலிய நற்குணங்களுக்காக ஒத்துழைத்ததின் விளைவுதான் நம்தேசம் இன்று சுயராஜ்ய பேரொளியாகப் பிரகாசிக்கிறது.

"கற்பெனப் படுவது சொற்றிரம்பாமை" என்னும் வியாக்கியானத்திற்குக் கஸ்தூர்பா உதாரண மானதினாலேயே அவர் அனுசூயா, நளாயனி, அருந்ததி போன்ற புராண இதிகாசங்களின் கற்பரசிகள் கூட்டத்தில் கலந்துவிட்டார்.

அன்னை கலாசாலைப் படிப்பும், பட்டமும், பதவியும் பெறவில்லை. ஆனால் உலகத்தின் மாபெருந் தலைவரும், அவதார புருஷருமாகிய காந்தியடிகளை உருவாக்க உடைந்தையாயிருந்தார்.

அன்னையின் பொறுமையையும், சகிப்புத் தன்மையையும், ஸத்யாகிரஹத்தின் தத்துவத்தைதான் அன்னையிடமிருந்து கற்றுக்கொண்டதையும் காந்திஜி தன்னுடைய 'சத்திய சோதனை'யில் விவரிக்கிறார்.

அன்னை பாரத தேசத்துப் பதிவிரதைகளின் அணிவகுப்பில் முன் வரிசையில் தலைவராக நிற்கிறார்.

அன்று சாவித்திரி யமனிடமிருந்து சத்தியவானை மீட்டதாகப் புராணம் கூறுகிறது. நமது சகாப்தத்தில் அன்னை கஸ்தூர்பா அவர்கள் தமது தவ வன்மையால் 1924ம் ஆண்டில் காந்திஜி ஹிந்து முஸ்லிம் ஐக்கியத்திற்காக 21 நாட்கள்

MYSORE PREMIER METAL FACTORY · H.K.S. · SUN · MADE IN INDIA

சூரியன் மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்

எமது ஆதரவாளர்கள், நண்பர்கள், அபிமானிகள் அனைவருக்கும் நல்வாழ்த்துக் கூறுவதுடன் புது வருஷத்தில் சுபிக்ஷமும் சந்தோஷமும் நிறைந்திருக்குமாறு பிரார்த்திக்கிறோம்.

மைசூர் ப்ரிமியர் மெட்டல் பாக்டரி

ஆபீஸ்:
போன் 2535

தந்தி:
SUNBRAND

பாக்டரி தொழில்,
போன் 3177.

&

ஹிந்துஸ்தான் மெட்டல் ரிபைனரி & ரோலிங் மில்ஸ்

தந்தி:
"ROLLINGMILLS"

ஆபீஸ்:
போன் 4777.

பாக்டரி தொழில்:
போன் 3177.

மானேஜிங் பார்ட்னர்:

கேசவ்லால் கே. ஷா.

ஆபீஸ்: 124, தங்கசாலை தெரு, மதராஸ்.

தொழிற்சாலை:—தண்டையார்பேட்டை

உபவாசம் மேற்கொண்டபோது தமது கணவனை மிருத்யு பாசத்தினின்றும் மீட்டதைக் கண்கூடாகக் கண்டோம். பாரத பெண்களுக்கு அன்னை ஒரு இலக்ஷ்யம்.

1922ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் காந்திஜி கைது செய்யப்பட்டு ஆறு வருட சிறைவாசத் தண்டனை பெற்றவுடன் இணையற்ற தைரியத்துடன் கஸ்தூர்பா முன் வந்து தேசத்திற்கு ஒரு ஆவேசம் மிகுந்த அறிக்கையை விடுத்து காங்கிரஸ் நிர்மாண திட்டத்தை நிறைவேற்றி வைக்கத் தூண்டினார். சிறை வாசத்தையும், இன்னும் பல இன்னல்களையும் தமது வாழ்க்கை துணைவருடைய லக்ஷ்யம் ஈடேறுவதற்காக சகிப்புத் தன்மையோடு சந்தோஷமாகவே மேற்கொண்டார். அவரது வாழ்க்கை நமக்கு ஒரு வழிகாட்டி. பதியே கதியென்று போற்றிய ஸதியாகிய அவர், வெளிப் பகட்டில் மோகங் கொண்டு வாழ்க்கையை வீணாக்காது நலம் பெற நமக்கு ஓர் உதாரணமாவர்.

கஸ்தூர்பா ஜகன் மாதா பராசக்தியுடன் ஐக்கியமானது சிவராத்திரியன்று. அன்றுதான் கிருஸ்துவர்களுக்கும் நாற்பது நாட்கள் தபசாகிய 'சாம்பல் புதன்' (Ash Wednesday) என்ற நன்னாளின் ஆரம்ப தினம். நமக்கும் புனிதமான நோன்பு தினம். ஆகாகான் மாளிகையில் விபூதியாக அமர்ந்திருக்கும் அன்னை இந்தியப் பெண்களையும், உலகத்து மாந்தர்களையும் அன்பு, தியாகம், சேவை என்னும் பாதைகளில் செல்ல நல்வழியை எப்போதும் காட்டிக் கொண்டிருப்பார் என்பது திண்ணம்.

அமரத்வம் படைத்து அண்ணல் காந்திடிகளுடன் ஸ்வர்க்க சிம்ஹாசனத்தில் வீற்றிருக்கும் அன்னையவர்கள் பாரதப் பெண்மணிகளுடைய வாழ்க்கை தம்முடையதேபோல் புனிதம் பெற்றிருக்க அருள்வாராக!

வாழ்க கஸ்தூர்பா !!

வாழ்க மகாத்மா !!!

ஸ்ரீ மீனு மாதா

சங்கு சுப்பிரமணியன்

சம்சார வாழ்வு இன்பமும் துன்பமும் கலந்தது என்பது யாவரும் அறிந்தததுதான். ஆனால் அவை நிகழுங்கால் நிதான புத்தியோடு அவைகளை ஏற்றுக்கொள்பவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். 'ஸ்தித ப்ரக்ஞர்கள்' என்ற அந்த அற்புத நிலையை அடைந்த தெய்வீக ஜீவன்களிலே ஒருவர் 1926ம்ஸூ பிப்ரவரி மாதம் வரை நம் சென்னையில் வாழ்ந்த ஸ்ரீ மீனு மாதா ஆவர்.

குந்தி தேவி ஸ்ரீ கிருஷ்ணனை ஒரு தடவை வேண்டிக் கொண்டாளாம். "அப்பா கிருஷ்ணு! எனக்கு நீ சோதனைகளையே அவ்வப்போது தந்து கொண்டிரு. ஏனெனில் அந்த சமயங்களில்தான் உன்னை நான் மனதார நினைக்க நேரிடும். நீயும் ஆறுதல் கூற உடனே ஓடி வருவாயல்லவா?" என்றுளாம். தேசத்துக்கெல்லாம் மாதாவாக இருந்த கஸ்தூரிபாய் காந்தி பாரத நாட்டையே தமது குடும்பமாகப் பாவித்தார். ஸ்ரீ மீனு மாதா தமது குடும்பத்தையும் சூழலையும் தேசமாகப் பாவித்தார். ஆகவே மீனு மாதாவின் செயல்களையும் குணங்களையும் தெரிவிக்கும் சில சம்பவங்கள் இங்கு தரப்படுகின்றன.

தேச சேவை

காந்திஜியின் சத்யாக்ரக இயக்கம் இந்தியாவில் புஷ்பித்தவுடன் அதன் புனிதத்தை உணர்ந்து கொண்டவர் ஸ்ரீ மாதா. வாயினால் பகவந்நாமாவை உச்சரித்துக் கொண்டு நூல் நூற்பதிலே மாதாவுக்கு தனி ஆனந்தம். கதர்ப்பிரசாரத்திலே ஒரு அலாதி சிரத்தை. ஏழை எளியவரிடம் முக்கியமாக தோட்டிகள், ரிக்ஷாக்காரர், ஹரிஜனங்கள் இவர்களிடம் அபார கருணை கொண்டவர் ஸ்ரீ மாதா. அநேக ஏழைக் குடும்பங்களுக்கு உபதேசியார்போல மாதா இருந்து வந்தார்கள்.

மிருகங்களிடம் அன்பு

ஏழைகளிடம் அன்பு பாராட்டுவதுபோல மிருகங்களிடமும் மாதாவுக்கு ஒரு பிரியம். மாடுகள், குதிரைகள், நாய்

கள், குரங்குகள், பட்சிகள் இவைகளை மாதா வளர்த்த கதைகளை அவர்களுடன் இருந்தவர்கள் நன்கறிவர். அவரது திறனைச் சோதிப்பதற்காக அவரது கணவர் ஒரு அடங்காப் பிடாரியான குதிரையை ஒரு தடவை கொண்டு வந்துவிட்டார். சில நாட்களில் அதைப்பழக்கி அதன் மீது சவாரி செய்தும், அதை வண்டியில் பூட்டி ஓட்டியும் மாதா பழக்கப்படுத்தி விட்டார். காஷ்மீரத்துப் பெண்மணிகளைப் போல குதிரைகளின் உள்ளங்களின் மீது மீனு மாதாவுக்கு ஒரு ஆதிக்கம் இருந்ததை ஒரு தனிச் சக்தியென்றே சொல்லவேண்டும். தென்னிந்தியப் பெண்மணிகள் ஸைகிள் விடுவது, மோட்டார் ஓட்டுவது முதலிய காரியங்களைச் செய்ய இலஜ்ஜை கொள்ளக் கூடாது என்பது அந்த மாதா உபதேசித்து வந்த பண்பு. "தைர்யமே நமக்குத்துணை" என்று அவர் தன்னைச் சுற்றியுள்ள பெண்மணிகளுக்குப் புகட்டி வந்தது குறிப்பிடத் தக்கது.

தைர்ய லட்சுமி

பிற்காலத்தில் தேசீயப் போராட்டத்தில் தளராது நிற்கும் ஒரு தைர்யத்தை எனக்கும் என் தோழர் சிலருக்கும் புகட்டியது மாதாதான். ஸ்ரீ பாரதியாரை மாதாவுக்கு நன்கு தெரியும். அவரது ஸாகஸ உபதேசங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமென மாதா கூறுவார். மாதாவுக்கு சிறு வயதினின்றே ஸாகஸ காரியங்களில் சாதனை உண்டென்று அவரது பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். தென்னை ஏறுதல், காவிரியில் நீந்துதல் ஆகிய செயல்கள் சிறு வயதிலிருந்தே மாதாவுக்கு உண்டு. வடக்கே பெல்காமுக்கருகே காடுகளின் நடுவே மாதா தனது குடும்பத்தோடு வாழ நேர்ந்தபோது பல தடவை யானைகளும், புலிகளும் சஞ்சரிக்கும் அந்த நடுகாட்டில் சீயக்காய் பறிக்கவும், பஞ்சு சேகரிக்கவும் போய்விடுவார்கள். எத்தனையோ தடவை சிறுத்தைகளைச் சந்தித்து மரங்களில் ஏறி அவர் தப்பித்துக் கொண்டதுண்டு. தைர்ய புத்தியோடு உடன் சேர்வது சுதந்திர வாழ்வு. சுதந்திரமென்பதை தப்பிதமாக அர்த்தம் செய்து கொள்ளாமல் தனது கடமைகளைச் சிறிதும் தவறாது ஆற்றி வந்தவர் ஸ்ரீ மாதா. "சாதம் படைக்கவும் செய்திடுவோம்-தெய்வச்சாதி படைக்கவும் செய்திடுவோம்" என்பதே மாதாவின் குறிக்கோள்.

கடமை எண்ணம்

பற்றற்ற மனமுடைய ஆண்மகனை சம்சார பந்தத்தினின்றும் விலகிக்கொள்ள ஹிந்து சமூகம் இடம் கொடுக்கின்றது. சந்யாசி யாகிறவர்களும் உண்டு. கடமைகளையும் கஷ்டங்களையும் கடவுளின் பிரசாதமென்று ஏற்று வாழ்க்கைக் குளத்தில் நீந்தி வெற்றி காட்டுபவர்கள் ஹிந்துப் பெண்மணிகள் தான். இல்லறத்திலிருந்து கொண்டு சகல காரியங்களையும் செய்து கொண்டு ஆனால் பற்றற்ற ஒரு திருவாழ்வைக் கொண்டிருந்தவர் மீரா மாதா.

விநயம் மிகுந்த ஒரு மனைவிக்குத்தான் தனது கணவனுக்கு உத்தரவிடும் பெருமை உண்டு. அதை ஹிந்து சமூகத்தில் தான் பார்க்கலாம். ஒரு தடவை மீரா மாதா தனது புருஷனிடம் சொன்னாள். "நமக்கு மூன்று பெண் குழந்தைகளும் ஒரு பையனும் இருக்கின்றார்கள். இவர்களையெல்லாம் நன்றாய்ப் படிக்க வைக்க உங்களுக்கு நிறைய வருமானம் வேண்டும். ஆகவே திரைகடலோடுங்கள். திரவியம் தேடுங்கள்" என்று முடுக்கிவிட்டாள். கணவனும் அதற்காக அபிஸீனியா எங்கே, ஆப்ரிக்கா எங்கே என்று ஓடத் தலைப்பட்டு விட்டார். தன் புருஷன் சென்றிருந்த விலாசமே தெரியாதிருந்த மூன்று வருஷ காலத்தில் தனது குழந்தைகளை மானமாக ரட்சிப்பதற்காக மாதா கைத்தொழில்கள் பலவற்றைச் செய்து வந்தாள். ஹாம்மக், பாட்மிண்டன்-நெட்பின்னுதல், புஷ்பம் கட்டி விற்றல், துணி மணிகள் தைத்தல், ஈயம் பூசித் தருதல் ஆகிய பல தொழில்களைச் செய்து தாய்மை எனும் தனது கடமையை ஆற்றி வந்தார்கள்.

பெருஞ் செல்வம்

இத்தகைய தைர்யமும் உழைப்பும் வாய்த்திருந்ததற்கு அவர்களது நாவில் இடைவிடாது பகவந் நாமம் இருந்ததே காரணமென்கிறார்கள். நாடோடியாக இருந்த புருஷனோடு சுற்றியதால் மாதாவுக்கு தெலுங்கு, கன்னடம், மகாராஷ்டிரம், ஹிந்தி ஆகிய பாஷைகளில் ஒரு பரிச்சியமும் அவைகளில் உள்ள நாமசங்கீர்த்தனங்களில் ஓரளவு பாண்டித்யமும் வாய்ந்திருந்தது. கடலங்குடி ஸ்ரீ பஞ்சநதஸ்வாமிகளின் புத்திரியாதலால் சிறுவயதிலேயே மாதா அவர்களுக்கு பகவத் பக்தி

இருந்தது. வாழ்க்கையின் இளம் பொழுதிலே குடும்ப காலட்சேப காலத்திலே மனதோடு மட்டும் வைத்து ஆதரிக்கப்பட்டு வந்த ஸ்ரீ கிருஷ்ணன், மாதாவின் பிற்காலத்திலே அவரை ஒரு பிரசாரக் கருவியாக ஆட்கொண்டு விட்டான். அதன் பயனாக ஸாது ஸங்க ஸேவை ஏற்பட்டது. மீரா தாஸி ஸ்ரீ வெங்கட்ரமண அய்யர் (அரணி), திருவல்லிக்கேணி ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி முதலியவர்களின் ஆசியால் மாதாவின் பக்திச் செல்வம் பெருக்கெடுத்தது. ஜனபாயைப்போல, மீராமாதா போல மீனாமாதாவும் பகவந் நாமத்தையே ஜீவனாகக் கொண்டார்கள்.

மாசிமாதத்து சுக்ல சஷ்டி மீனா மாதாவின் சிரார்த்த தினம். அன்று அவள் வயிற்றில் உதித்த (குங்குமம் ஆசிரியை உள்பட) குழந்தைகளோடு அவளை அறிந்திருந்த இதரர்களும் கூடி நாம சங்கீர்த்தனமும், சத்காலட்சேபமும் நடத்துவது அழகான வைபவங்களில் ஒன்றாக இன்றைக்கு மிருக்கிறது. உலகத்தில் வாழ்ந்தபோது இடைவிடாது பிறருக்குத் தொண்டு செய்துவந்த மகத்தான ஆத்மாவாதலால் இன்றைக்கும் அந்த ஆத்மா ஓய்வெடுத்துக் கொண்டிராமல் 'நமக்குத் துணையாக வரும்' என்று நினைக்கிறவர்கள் இன்றைக்கும் அநேகர் இருக்கிறார்கள். அவர்கள் எந்த நல்ல காரியம் தொடங்குவதற்கும் பிள்ளையார் பூஜைசெய்வதுபோல மீனா மாதாவின் படத்தை ஆராதித்து தியானித்து அதனால் நல்ல பயனையு மடைகிறார்கள்.

அட்டைப் படம்: **ஸ்ரீ மீனா மாதா**

முகத்தில் சோர்வு. ஆனால் கண்களில் வீசும் கனிந்த பார்வை எல்லா மக்களையும் தன் குழந்தைகளைப் போலவே மீனா மாதா கருதிவந்ததைக் காட்டுகிறது.

தாலாட்டும் தவம்

[திருப்புகழ் மணி]

விண் என்னும் உத்தரத்தில் அன்பெனும் தாம்பிட்டு மண் என்னும் தொட்டிலிட்டு எண்ணடங்கா ஜீவன்களாகிய குழந்தைகளை ஏற்றி, 'கண்வளராய்' என்று ஆட்டும் தாய் பக்கத்திலேயே நிற்க, கவலையேன்! ஆயினும் குழந்தைகள் இயல்பு கொஞ்சம் அழத்தான் அழும். செல்லமுழுகையுமுண்டு, கள்ளமுழுகையுமுண்டு, நிஜஅழுகையுமுண்டு. ஏமாற்றமோ, நோவோ, எவற்றினாலாயினும் குழந்தைகள் மனமுறிந்தால் அம்மாவிடத்தில் சொல்லியழுதால்தான் ஆறுதல். இந்த ஆறுதலுக்கு இணங்காத வருத்தம் குழந்தைகளுக்குக் கிடையாது. "யாராரடித்தாளோ அடித்தாரைச்சொல்லியழு." எனப்பாடுவள் தாய். நொந்தமனம் அம்மாவிடம் சொல்லி அழுதுவிட்டால் சரியாய்ப்போய்விடும். இதையறிந்த தாய் குழந்தையழ அதை தொட்டிலிவிட்டு பக்கத்தில் நின்று பாடிடுவாள்.

தாயின் மனம் குழந்தையிடம்தான். அவள் குழந்தையையா ஆட்டுகின்றாள்? இல்லை! தன் மனத்தையும் அத்தொட்டிலிலிட்டு ஆட்டுகின்றாள். தன் மனம் பூரிக்கின்றது. நெகிழ்ந்த மிடறினின்று பெருகும் மகிழ்ந்த இசைகள்; அவிழ்ந்த அன்பின் உணர்ச்சி; செந்தமிழ் அமுது பொழிகின்றது. குழந்தையின் கண்கள் தாயின் முகத்தினையே நோக்கி நிற்கின்றன. அவள் புன்சிரிப்பை நுகர்ந்து நுகர்ந்து அந்த போதையினால் கொஞ்சம் கொஞ்சமாக உடம்பின் உணர்வழிந்து தாயின் முலையருந்துவது போல் கனவில் மாறி தாய் நினைவில் தூக்கம் உறுகின்றது. யார்தான் இதை அறியமாட்டார்.

நாள் முழுதும் வேலை. சரீரம் மிக அலுப்புக்கொண்டது. சேயைப்பார்த்து பாடிப்பாடி தொட்டில் கயிற்றில் தன் உடம்பின் பளுவை ஒருபக்கமாய் சாய்த்து, குழந்தை துயில் கொண்டதா, துயில் கொண்டதா

வென்று பார்த்தவண்ணமாய் தாயும் தன்னை மறக்கின்ருள். சேயும் தாயாகி தாயும் சேயானல் எய்தும் நிலை யாதோ? சமாதி.

தாயின் வயிற்றில் அவதரித்துப் பிரிந்த சுகம், தாயுடன் சமாதியில் கூடும் சுகம்தான். மக்கள் பிரிய வேண்டும், பிரியவும் பிரிகின்ருர்கள். பிரிந்த பலன் சேர்க்கைக்கன்ருே? யோக சமாதியையல்லவோ தாலாட்டும் தாய் போதிக்கின்ருள்?

இந்த சுகத்தை அனுபவிக்க நினைந்தாள் பராசக்தி. முருகனைப்பெற்ருள். "பெற்றும் உகந்ததுமுருகனையே."

சுடர் ஜோதியாய் உதித்த முருகனுக்கு வெப்பத்தின் சாந்தமாக சரவணத்தில் செந்தாமரைப் புஷ்பமாக தொட்டில் சமைத்திட்டாளாம். அருணகிரியார் திருப்புகழால் தாலாட்டுவார் போலும்:

"முக்கணர் மெச்சிய பாலா சீலா
சித்தஜன் மைத்துன வேளே தோளார்
மொய்த்த மணத்துழாபோன் மாயோன் மருகோனே
முத்தமிழ் வித்வ விநோதா கீதா
மற்றவர் ஒப்பில ரூபா தீபா
முக்திகொடுத்தடியார் மேல் மாமால் முருகோனே."

முருகன் அழுதாராம். "ஏன் அழுகின்ருய் கண்ணு?" என்ருள் பார்வதி. மறுபடியும் முருகன் நீண்டு அழுதவுடன் குறிப்பாய் கவனித்தாள். வேறு அழுகைக் குரல்கள் கேட்டனவாம். மாயையின் அழுகைக்குரல் கேட்டதாம். சூரன் அழுகை, சமுசார சமுத்திரத்தின் அழுகையோசை இவற்றுக்கு ஒத்து முருகன் அழுகைக் குரலும் கேட்டதாம். முருகன் குறும்புக் குழந்தையல்லவா?

யாராவது அழுதுகொண்டிருந்தால், குழந்தைகளுக்குப் பிடிக்காது. அழுகையின் அழுகை பரிகசிப்பது போல் தானும் கள்ளத்தனமாய் அழுதுவிட்டு ஓடிவிடும். இது குழந்தையின் இயல்பு. க்ரௌஞ்சக்குன்று, சூரன்,

சம்சாரசமுத்திரம் இம்மூன்றும் கெட்டுபோகக் காலம் வந்ததால் அவை அழும் அழுகைக்கு ஒத்து ஒரு ஸ்ருதி யாய் தானும் அழுது காண்பித்தானும் முருகன். பராசக்தி ஆனந்தித்தாள். இதைச் சித்திரிக்கின்றார் அருணகிரி.

திருந்தப்புவனங்களீன்ற பொற்பாவை திருமுலைப்பாலருந்தி
சரவணபூந்தொட்டிலேறி அறுவர் கொங்கை விரும்பி
சூரழ கடலழ குன்றழ விம்மியழும் குருந்தைக் குருஞ்சி
கிழவனென்றோதும் குவலயமே.

இது கந்தரலங்காரச்சித்திரம்.

கண்ணனை தொட்டிலிட்டாரோ?
அவனை யாரென ஆராய்ந்தாரோ?
தன்னை மறந்தாரோ?
உணர்ந்தவகை யாரறிவார்?

சடகோபாழ்வார் பாடுகின்றார்,

"ஒளிமணி வண்ணனென்கோ ஒருவனென்று ஏத்தநின்ற
நளிர்மதிச் சடையனென்கோ நான்முகக்கடவுளென்கோ
அளிமகிழ்ந்து உலகமெல்லாம் படைத்தவை ஏற்ற நின்ற
களிமலர் துளவனென்கோ எம்மான் கண்ணனை மாயனையே!

"கண்ணனை மாயன் தன்னை கடல்கடைந்தமுதம் கொண்ட
அண்ணலை அச்சுதனை அனந்தனை அனந்தன் தன்மேல்
நண்ணி நன் குறைகின்றானை ஞாலமுண்டுமிழ்ந்த மாலை
எண்ணுமாறறியமாட்டேன் யாவையும் அவருந்தானே."

உலகுக்கெல்லாம் ஒப்பற்ற சேயாய், சொந்தமாய் எடுப்போர்க்கெல்லாம் குழந்தையாய், நம் குருவாய் தாவிவரும் முரளிமுருகனை தாலாட்டக்கற்ற அன்பர்கள், உலகில் இருக்கும் ஜீவன்களை தம் குழந்தைகளாகவும், மங்கையர்களை தாய்மார்களாகவும் கருதி, பட்டினத்தார் உபதேசத்துக்கு ஒப்ப பேரின்பம் அடைவர் என்பதில் ஐயமுண்டோ? இல்லை என்கிறான் முரளி முருகன்.

கையரவிந்தந் தன்னால் காலரவிந்தம் பற்றி
மொய்யரவிந்தஞ் சூழ்ந்த முகாரவிந்தமோந்து
பையரவிந்தவாலிற் பள்ளிகொள் பரமனென்றன்
மெய்யர விந்தத் துள்ளே விளங்குவ னுளங்குளிர்ந்தே!

பெற்ற தாயின் மகிமை

[ஸ்ரீ புரபோஸர் எஸ். கணபதி சுப்ரமண்யம்]

'தாயினடி,' 'தாய் தந்த செல்வம்' என்ற தத்வார்த்தம் நிறைந்துள்ள வியாசங்களை மிகவும் ஊக்கத்துடனும் ஆனந்தத்துடனும் படித்தேன். மூன்றாவது மலரில் எனது அளவிலா ஆனந்தத்திற்கு ஏற்ப 'ஆனந்தாஸ்ரமம்' என்ற வியாசத்தைப் படித்தேன். தாய்மையின் மகத்வத்தைப்பற்றி எழுதியிருந்தது. மானிடப் பிறப்புவாய்ந்த, பெற்ற தாயின் பெருமையைப்பற்றிச் சிறிது எழுதலாம் என்று நினைத்தேன்.

பாரதியார் எழுதிய அறுபத்தாறில் 'தாய்மாண்பு' என்ற தலைப்பின்கீழ் பின்வருமாறு பாடியிருக்கிறார்:

"உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவ ளென்றறியீரோ? உணர்ச்சிகெட்டீர்!
பண்டாய்ச்சி ஔவை:—'அன்னையும் பிதாவும்'
பாரிடை 'முன்னறி தெய்வ' மென்றாளன்றோ?
தாய்க்கு மேலிங்கே யோர் தெய்வமுண்டோ?"

'தாயைப்போல பிள்ளை' யென்று முன்னோர் வாக்குளதன்றோ?

'தாய்க்குத் தலைப்பிள்ளை' என்று உலகத்தில் சொல்லுகிறார்களே யொழிய தகப்பனுக்குத் தலைப் பிள்ளையென்று சொல்வதில்லை.

திருவள்ளுவர்,

'ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும்
சான்றோன் எனக் கேட்ட தாய்,' என்றார்.

தாயினுடைய மனமார்ந்த சந்தோஷத்துக்கு ஈடு உண்டோ?

ஸ்ரீமத் வால்மிகி இராமாயணத்தில் பாலகாண்டத்தில் விசுவாமித்திரமுனி ராமனை காலையில் எழுப்பும்

போது, 'கௌஸல்யா சுப்ரஜா ராமா........' என்றழைக்கிறார்.

ஸுந்தரகாண்டத்தில், சுக்ரீவன் இராமனிடத்தில் 'கௌஸல்யா ஸுப்ரஜா ராமா ஸமாச்வ ஷிஹிஸுவ்ரத த்ருஷ்டாதேவி நஸந்தேஹோ நசாந்யேன ஹனுமதா.'

அதாவது 'கௌஸல்யை நல்ல பிள்ளையைப் பெற்றாள். அவனுடைய ஸீதையானவள் ஆஞ்சநேயனால் பார்க்கப்பட்டாள்' என்கிறான். மேலும் பலவிடங்களில் 'கௌஸல்யா நந்தவர்த்தனன்' என்று சொல்லியிருக்கிறது. பரதனைப்பற்றி குறிக்கும்போது இரண்டே இடங்களில்தான் 'கைகேயா நந்தவர்த்தனன்' என்று கூறியிருக்கிறது—பரதனைப்பற்றி கம்பநாட்டார் ஆயிரம் ராமன் ஒரு பரதனுக்கு ஸமமாகுமோ என்கிறார். இது வேறு.

கிஷ்கிந்தா காண்டத்தில் 150 ஸ்லோகங்ளடங்கிய முதல் ஸர்க்கத்தில் பம்பாஸரஸைக்கண்டு மனம் நொந்த ராமர், லட்சுமணனை அடிக்கடி விளிக்கும் போது 'ஸௌமித்ரே' என்ற வசனம் சுமார் 16 தடவை உபயோகிக்கிறார். சுமித்திரையின் மகிமையே மகிமை! 'மாம்வித்தி ஜனகாத்மஜாம்' என்பவை பெற்ற தாயின் வாக்கல்லவோ!

பட்டினத்தார் 'பெற்றதாய்க்கோ தீ மூட்டுவேன்' என்று அலறியிருக்கிறார்.

'மாத்ருதேவோபவ பிதுருதேவோபவ, ஆசார்ய தேவோபவ' என்ற இடத்தில் தாய்மைக்கு முதன்மை அளிக்கப்பட்டிருக்கிறது.

உலகத்தைத் துறந்த சந்நியாசியும் மாதாவை மாத்திரம் வணங்கவேண்டும்.

ஆங்கில கவிஞர் 'கௌபர்' என்பவர் 'தனது தாய்ப் படம்' (மை மதர்ஸ் பிக்சர்) என்று எழுதிய செய்யுளில் பெற்ற தாயைப்பற்றி அபூர்வமாக கல்லும் கரையும்படி எழுதியுள்ளார்!

பெற்ற மக்களுக்காக தாயின் தியாகச் செய்கை களைப்பற்றி கேள்விப் பட்டிருக்கிறோம். இப்பவும் கேள்விப்படுகிறோம்.

இந்த பாரதநாட்டில் தாயினுடைய தியாகத்தை யும் பெருமையையும் என்னென்று புகழ்வது.

ஒற்றைக் குடும்பந்தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை;
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்த்திடச் செய்பவ ளன்னை,

என்கிறார் பாரதியார்.

"யார் யாரோ யாரறிரோ"

"யார் யாரோ யாரறிரோ, நீ யாரோ, நான் யாரோ, யார் பெற்ற செல்வமோ........" என்று தமிழ்த்தாய் தாலாட்டுப் பாடுகிறாள். ஆனால் அவள் தன் தாலாட்டுப் பாட்டில் பொதிந்து கிடக்கும் தத்வார்த்த போதனையை உணர்ந்தே பாடுகிறாள் எனக்கூற முடியாது. ஐம்புலன் களின் உபயோகத்தை அறிந்து கொண்டு வரும் சிசுவின் செவியின் மூலம் இந்த உபநிஷத்து சாரம் சென்று, மூளையில் பதிகிறது. அறிவுச்சுடர் ஜோதி ஒளி வீசும் போது இந்தத் தத்வார்த்தம் உபதேசமாக வெளித்திகழ் கின்றது.

காதே காந்த : கஸ்தே புத்ர :
சம்சாரோய மதிவவி சித்ர :
கஸ்யத்வம்வா குத ஆயாத :
ஸ்தத்தம் சிந்தய ததிஹா ப்ராத :

என்று லோககுரு ஸ்ரீமத் சங்கராச்சாரியர் அருளிய வாக்கு ஆதாரம். அவர் சிசுவாயிருக்கும் போது அவர் தாய் தாலாட்டின் மூலம் போதித்ததாகவே இருக்குமோ?

ஸ்ரீ நாராயண தீர்த்த யதீந்திரர்

[ஸ்ரீமான் டி. வி. சீதாராமய்யர்]

ஸங்கீதமும், நிர்த்தனமும் தெய்வப் புலமை வாய்ந்த ஸ்ரீ ஜயதேவர் காலத்திற்குப்பிறகு, ஸ்ரீ தீர்த்த நாராயண ஸ்வாமிகள் நிர்த்தியத்தோடு நாடக ரூபமாய் ஸங்கீதத்தை பக்தி பரவசப்படுத்தி ஸ்ரீ க்ருஷ்ணலீலா தரங்கிணியை இயற்றி அருளினர். இப்பெரியார் சுமார் முன்னூற்றைம்பது வருஷத்திற்கு முன் காசிக்கடுத்த ஒரு கிராமத்தில், ஆந்திர ப்ரம்ம குலத்தில், ஸ்ரீ திருப்பதி வேங்கடேசனருளால் பிறந்து, வளர்ந்து, ஸகல ஸாஸ்திர நிபுணராய், ஸ்ரீ சிவராம தீர்த்தர் என்ற பெரியாரின் உபதேசம் பெற்று, க்ருஷ்ண பக்தியில் மூழ்கிக் கிடந்தார். சோள தேசங்களில் க்ஷேத்திராடனம் செய்துகொண்டு வரும்போது தஞ்சை ஜில்லாவில் பிரயாணம் செய்து வந்தபொழுது ஈஸ்வர ஸங்கல்பத்தால் தீரா வயிற்று வலியால் கஷ்டப்பட்டு, அஸ்தமன வேளையில் நடுக்காவேரி என்னும் கிராமம் வந்து சேர்ந்து, ஒரு கோயிலில் கொஞ்சம் களைப்பாறினர். நித்திரையில் பெருமாள் ப்ரஸன்னமாகி, "அன்பனே, நாளைக் காலையில் நீ ஒரு வராஹத்தைக் காண்பாய். அதைத் தொடர்ந்து சென்று அது மறையுமிடத்தே நீ தங்கி என்னை ஸ்தோத்திரம் செய்ய நோய் தீர்ந்து ஸுகப்படுவாய்" என்று அருளி மறைந்தார். அவ்வண்ணமே பன்றி ஒன்று காலையில் தோன்றி மூன்று மைலுக் கப்பாலுள்ள பூபதிராஜபுரம் என்னும் ஊரின் கோயிலிற்குள் சென்று மறைந்தது. தீர்த்த நாராயணரும் ஸ்ரீ வேங்கடரமணரைத் தொழுது ஸ்ரீ பகவத் சங்கல்பத்தைக் கண்டு வியந்தார். பிறகு அவ்வூரார் தக்க மரியாதையுடன் ஸ்வாமிகளை வரவேற்று உபசரித்தார்கள். ஸ்ரீமத் ஸ்வாமிகளும் பகவான் கட்டளைப்படி பலஷிதமாய் ஸ்தோத்திரம் செய்தார். இவ்வித நிகழ்ச்சியின் காரணமாக வராஹாபுரி (வரகூர்) என்று இவ்வூர் பெயர் வழங்கலாயிற்று. யதீந்திரரும் வெகுநாள் இவ்வூரில் தங்கி சௌக்கியமடைந்து பரம தெய்வத் தன்மை பொருந்திய இந்த க்ருஷ்ணலீலா தரங்

கத்தை இயற்றலானார். ஸ்ரீ க்ருஷ்ண பகவானையே இப் பிரபந்தத்திற்கு வழிகாட்டியாக அடைந்து, ஸ்ரீ பாகவதத்தின் தசம ஸ்கந்தத்தை நாடக ரூபமாய் இயற்றி, தானே இக் கீர்த்தனங்களைப் பாடி, பக்க வாத்தியங்களோடு ஸ்ரீ வேங்கடேச பெருமாள் சன்னிதியில் நிர்த்தனம் செய்தார். இன்றும் பகவத் பக்தியில் ஈடுபட்டோர்கள் க்ருஷ்ணோத்சவங்களிலும் பஜனைகளிலும் பாடி ஆனந்தமடைகிறார்கள். வரகூரிலும் வருஷா வருஷம் ஸ்ரீ க்ருஷ்ணோத்சவம் மிகவும் சிறப்பாய் நடைபெறுகிறது.

பிறகு தஞ்சாவூரை ஆண்டுவந்த அமரசிம்மன் [1788—1799] திருப்பூன்துருத்தியில் சிஷ்யர்களோடு பஜனை செய்துகொண்டிருக்கும் இப் பெரியாரைப் பற்றி கேள்வியுற்று, பெரியாரைத் தக்க மரியாதைகளுடன் வரவேற்று ஒரு ஆச்ரமத்தை நியமித்து கொடுத்து, அங்கு சிஷ்ய கோடிகளுடன் விஜயம் செய்யும்படி வேண்டினான். ஸ்வாமிகள் அரசன் கோரிக்கைக்கிணங்கி அவ்விடமே வாஸம் செய்து வந்தார். அநேக விதமான ஆச்சர்ய தெய்வ நிகழ்ச்சிகள் அங்கு நடந்தனவாம். ஸ்ரீ ஸ்வாமிகள் அவ்விடமே நிர்விகல்ப சமாதியை அடைந்து ஜீவன் முக்தராய் இன்னும் விளங்குகிறார். ஸமாதியின் பேரில் ஒரு கோயில் நிர்மாணிக்கப்பட்டு ப்ரதி வருஷம் மாசிமாதம், சுக்ல பக்ஷம், அஷ்டமி திதியன்று, வெகு விமரிசையாய் குதூகலத்துடன் சிஷ்ய கோடிகளால் உத்சவம் கொண்டாடப் படுகிறது.

நாமும் "குங்குமம்" என்கிற அரிய தமிழ்த்தேன் கூட்டில் பிரதி மாதம் காணப்படும் ஸ்ரீ க்ருஷ்ணலீலா தரங்க கீர்த்தனங்களாகிய மதுவை பக்தியுடன் பருகி இன்புற்று வாழ்வோமாக. ஒவ்வொரு திலகத்திலும் ஒரு கீர்த்தனத்தை ஸ்வரப்படுத்திக் கொடுக்கப்படும்.

விநாயகர் வணக்கம்

ச்லோகம்

கிரிராஜ ஸுதாஸூனு: கரிராஜவரானந:
பரிபந்தி கணத்வம்ஸீ சுரஸேவ்யோ விராஜதே.

பல்லவி :

ராகம் மோகனம். தாளம் சாபு

த ஸா தா பா	க ரீ ஸா ரீ
ஜ ய ஜ ய	ஸ்வா மி ன்
க கா தா பா	க ரீ ஸா ;
ஜ ய ஜ ...	யா . . . .

அ. ப.

ப கா பா தா	ஸ ஸ்ா ஸ ஸ்ா
ஜ ய ஜ ய	ஜி த வை ரி
ஸ் தா ரீ ஸ்ா	த பா தா ;
வ . . ர்க3 ப் ர	சு ண் ட3 . .
த தா ரீ ஸ்ா	த ஸ்ா தா பா
ஜ ய ஜ ய	க3 ஜ மு க3
க கா தா பா	க பா தா ஸா
ஜ ய வ க் ர	துண் ட3 . .

சரணம் :

கா, கா கா	கா, கா ரீ
மூ - ஷ க	வா, ஹ ன
ரி கா பா கா	பா, பா ;
மு னி க3 ண	வங் த்3 ய
க கா தா பா	க ரீ ஸா ரீ
தோ3 . ஷ ர	ஹி த து3 ரி
க பா கா ரீ	ஸா, ஸா ;
தா . . ஸு ர	ப்3ருங் தா3 ;

சேஷ பூ3ஷண சைவ வாரிதி4சங்த்3ரா
போஷித பரிஜன—புண்யைககங்த3—(ஜய

(2) அத்3ரி ஸுதாஸுத—ஜனவத்4யசரித—
ப4த்3ரப4க்தப4வ—ப4யஹரமுதி3த—

ருத்3ரோதி3த—ருஜாமஸ்தகஸஹித—
ஸத்3ரூபஸாஸிஜ—ஸமுதி3தவிஞுத—(ஜய)

லம்போ3த4ரதீ4ர—லாவண்யஸார—
கம்பு4ஸாதா4நிதி4—கர்ப்பூரகௌ3ர—
ஸாம்ப3சதா3சிவ—ஸத்க்ருதிசதுர—
ஸாமவேத3கீ3த—ஸகலாதா4ர—(ஜய)

சக்ராதி3ஸாரக3ண—ஸன்னுதசரண—
சாதகும்ப4மணீ—தி3வ்யாப4ரண—
தி4க்ருதக4னவிக்4ன—திமிராவரண—
தீ4ரநாராயண—தீர்த்தசுகருண—(ஜய)

(1) க, — (கலை) (2) க்க2 — (முகம்) (3) க3 — (கானம்) (4) க4: (கனம்)

[ஸ்வரப் படுத்தியவர் ஸ்ரீமான் டி. எஸ். வாசுதேவன், பி. ஏ., மியூஸிக் டிப்ளோமா.]

செருப்புகள் கால்களுக்கு பாதுகாப்பு அளிப்பதுடன், அழகையும் கொடுக்கின்றன.

கண்களைக் கவரும் வனப்பும், நீண்டகால உழைப்பும் ஒருங்கே அமைந்த செருப்புகளும், உத்திரவாதமுள்ள தோல் பைகளும், பெட்டிகளும் கிடைக்குமிடம்:—

பண்ட் அண்டு கம்பெனி

பிராட்வே, சென்னை.

கற்பனையுலகில்!

[ஸ்ரீமதி பாலாம்பிகை]

['அண்ணா ஆளப்பிறந்தான், அவனுடன் பிறந்தாள் அழப் பிறந்தாள்' என்ற வசைச் சொல் மறைந்துவரும் இந் நாளிலே ஔவைப்பாட்டியை தோற்கடிக்கும் காவியங்களையும், கற்பனை கட்டுரைகளையும் உலகத்தோர் திகைக்கும்படி ஆக்கும் சக்திவாய்ந்தவர்கள் நமது பெண்கள் என்பதை வெளிக் காட்டுகிறது இக்கற்பனைக் கட்டுரை.]

"எனக்கு வெகு நாட்களாக ஒரே ஒரு ஆசை. அதென்ன தெரியுமா? நான் ஒரு சிறந்த கவியாக வேண்டுமென்பதே. அதுவும் எப்படி? கம்பனையும் காளிதாசனையும் போல. அதெப்படி முடியும்? அரை வயிற்றுக் கஞ்சிக்காக அல்லும் பகலுமுழைக்கும், எனக்குச் சிந்திக்கத்தான் நேரமேது? சிந்தித்தெழுதினாலும் உலகோர் அதைச் சிறப்பிப்பார்களா? ஏனெனில் நான்தான் அடுப்பூதும் பெண்ணாயிற்றே; பேதைப்பெண் என்ற பட்டமும்தான் வேரூன்றி விட்டதே; பாழும் பிரமன் என்னை ஏன் பெண்ணாய்ப் பிறப்பித்தான்! அவனுக்கேது மூளை. பானை பண்ணும் குயவனைப் போல, தனக்குத் தோன்றியபடி உடம்புகளைப் பண்ணிக்கொண்டிருக்கிறான். பணக்காரனுக்கு ஒரு குழந்தைகூட கொடுக்கமாட்டான். பரம ஏழைக்குப் பத்து குழந்தைகளைக் கொடுப்பான். அவர்கள் பட்டினியால் தவிப்பது அவனுக்கு வேடிக்கை போலும்!

"அந்த நான்முகனை மாத்திரம் நான் நேரில் பார்த்தால், 'அற்ற தலை போக அறாத தலை நான்கினையும் பற்றித் திருகியெறிவேன்!' ஆனால் அவனைப் பார்ப்பதெப்படி? முற்காலததில் அவன் சிலர் நினைத்தபொழுது முன் வந்ததுண்டு. பரமசிவனிடத்தில் மாத்திரம் கொஞ்சம் பயம். ஏனெனில் அவன் அந்த பிரமனுடைய தலையோட்டில், பிச்சையெடுக்கிறான் அல்லவா? இப்பொழுதோ எல்லோரும் வாயில் சுருட்டுப் புகையும்,

வயிற்றில் பசியும் கொண்டு எட்டு அவுன்ஸ் அரிசியை, ரேஷனதிகாரிகளிடம் பிச்சை யெடுக்கிறார்களல்லவா? அவர்களெல்லாரும் பரமசிவனென்று நினைத்து வரவே மாட்டான்,'' என்று யோசித்துக்கொண்டே என் அறையில் படுத்திருந்தேன். வெகு நேரம் வரையில் தூக்கம் வரவில்லை.

அன்று பௌர்ணமி. பால்போன்ற நிலவு இரவைப் பட்டம் பகலாக்கியது. வியவஸ்தை கெட்ட சந்திரனுக்கு, ஏழை பணக்காரரென்ற வித்தியாச மேது? வானளாவிய மாளிகையுடன் பாழடைந்த பொன்னன் வீட்டுக் குடிசையைக்கூட வெள்ளியாக்கி விட்டான். மரஞ் செடிகளின் இலைகளும், பளபள வென்றொளி வீசின. சிந்தனை யுலகத்திலிருந்த எனக்கு மரத்தின் மேலுறங்கிக் கொண்டிருந்த கன்னங்கரே லென்ற காக்கைகளும், வெள்ளை நிறம் பெற்று விளங்கின. இதென்ன அதிசயம்? வெள்ளைக் காக்கைகளும் உண்டோ வென்று வானத்தைப் பார்த்தபடி படுத்துக் கொண்டிருந்தேன்.

அவ்வானத்திலிருந்து, முக்காடிட்டுக் கொண்ட உருவமொன்றிறங்கியது. என் முன் வந்து நின்றது. நான் திருடனோ வென்று நினைத்துத் திடுக்கிட்டேன்.

அவ்வுருவம், "ஏன் பயப்படுகிறாய்? நான்தான் உன்னைப் படைத்த பிரமன். நீ அழைத்ததினால்தான் வந்தேன்'' என்றது.

"ஆ, பிரமனா நீர்; ஒரு முகம்தானே இருக்கிறது. மற்ற முகங்களெங்கே?'' என்றேன்.

"எதற்கு கேட்கிறாய்? பற்றித் திருகி யெறிவதற்கா? ஔவைதான் என் அல்லல்களை யறியாமல் அறிவு கெட்டுப் பாடிவிட்டா ளென்றால், நீயும் அதை விடாது சொல்லிக் கொண்டிருக்கிறாய்? போதாக் குறைக்கு இப்பொழுதைய அரசாங்கத்தார்தான், 'உன் நாலுவாய்க்கும் அரிசி கொடுத்துவிட்டால், எல்லாருக்கும் பங்கிடுவதெப்படி? அதனால் ஒரு முகத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு, மற்ற முகங்களை எடுத்து

விடு. இல்லாவிடில், அபராதம் கட்டவேண்டும்' என்றனர். அதற்குப் பயந்துதான் முகங்களை மூடிக்கொண்டு திரிகிறேன்'' என்றார்.

நான் சிரித்து, "எங்களைக் கண்டபடி படைத்து திண்டாட வைக்கிறீரல்லவா? உமக்கு நன்றாய் வேண்டும்'' என்றேன்.

"நான் திண்டாடுவது உனக்கென்ன தெரியும்?"

"உலகமே உங்கள் கையிலிருக்கிறதே, உமக்கென்ன திண்டாட்டமாம்?"

"ஓய்வென்பதில்லாமல், வேலை செய்கிறேன். உங்கள் வினைக்குத்தக்க உடம்புகளைத்தான் படைக்கிறேன். ஆனால் என்னை வையாதவரில்லை. அதனால்தான் எனக்கெங்கும் தலைகாட்ட முடிவதில்லை. செய்தும் பேரில்லை. இதைவிடத் துன்பம் வேறென்ன வேண்டும்."

"பின், என்னை ஏன் பெண்ணாய் பிறப்பித்தீராம்?"

"பைத்தியமே! பெண் பிறப்பு எவ்வளவு புனிதமானது. இவ்வளவு படித்தும் உனக்கேனது தெரியவில்லை. உலகத்தை யீன்று வளர்ப்பவள் பெண்தானே. பெண்ணில்லாவிட்டால், எனக்குத்தான் வேலை யேது? அதிருக்கட்டும். ஆணாய்ப் பிறந்த ஆள்வார்களும், நாயன்மார்களும், தாங்கள் பெண்ணாய்ப் பிறக்கவில்லையே என்று ஏங்கித் தவித்து, பிறகு தங்களைப் பெண்ணாக நினைத்துப் பாடியிருப்பதை நீ படித்ததில்லையா? அப்படியிருந்தும் அவர்கள் எளிதில் ஆண்டவனை யடைந்ததாகத் தெரியவில்லையே? பெண்ணாய் பிறந்த ஆண்டாளும், மீராவும், எவ்வளவு எளிதில் பகவானை தம் மணவாளனாகவே யடைந்தனர். இதனால், ஈசுவரனை யடைவதற்குரிய பிறப்பு, பெண்பிறப்புதானென்று தெரிகிறதல்லவா?"

"இருந்தாலும், பெண்கள் உலகத்தார் கண்களுக்கு உயர்வாகத் தோன்றுவதில்லை. அவர்கள் எவ்வளவு

படித்திருந்தாலும், பேதை என்ற பட்டந்தான் முன் வந்து நிற்கிறது.''

"நீ நினைப்பது தவறு. சங்க இலக்கியங்களில் காக்கை பாடினி, நச்செள்ளை முதலிய நாற்பத்தொன்பது பெண்களின் கவிகளைக் காணவில்லையா? அவர்கள் ஆண்களுக்கு சரியான சிறப்படையவில்லையா என்ன? உலகம் புகழும் ஔவையின் கவியை நீ யறியாயா? அவளைப் போற்றுதார் யார்?''

"அந்த ஔவைதானே, 'பேதைமை யென்பது மாதர்க்கணிகலம்' என்று கூறி எங்களை அறிவற்றவர்களென்று, உலகம் அவமதிக்கச் செய்தவள்.''

"அதற்குப் பொருள், அறியாமையா யிருக்காது. சிறந்த பொருள் வேறிருக்கலாம் அதைப்பற்றி ஔவையையே கேட்டுத் தெரிந்துகொள். எனக்கு நேரமாகிறது. உன்னுடன் பேசிய நேரத்தில், எத்தனையோ உடல்களை உண்டுபண்ணி யிருப்பேன். நான் போய்வருகிறேன்.''

"சரி, போய்வாருங்கள். நமஸ்காரம். ஔவையைப் பார்த்தால் முழுச் சந்தேகமும் நீங்கும். அவள் எப்படி யிருப்பாள்,'' என்று நினைப்பதற்குள், இருமல் சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தேன். நரைத்த தலை, வெள்ளைப் புடவை, கூன் முதுகுடன், கோலேந்திய பாட்டி யொருவள் என் முன்வந்து நின்றாள். நான் யாரோவென்று திடுக்கிட்டெழுந்தேன்.

அவள் தன் பொக்கைவாய் புன்னகையுடன் என் முகத்தை தடவிக்கொடுத்து, "குழந்தாய்! ஏன் பயப்படுகிறாய்? நான்தான் ஔவை. என்னை ஏன் கூப்பிட்டாயாம்'' என்றாள்.

"பாட்டி! வாருங்கள்! நமஸ்காரம். உட்காருங்கள். எனக்கு ஒரே ஒரு சந்தேகம். உங்கள் பாட்டுக்களையெல்லாம் நான் படித்திருக்கிறேன். ஒவ்வொன்றும் எளிய நடையில் எவ்வளவு அழகாக அமைந்திருக்கின்றன. அறிவில்லாவிட்டால், அப்படி பாடமுடியுமா? அப்படியிருந்தும், 'பேதமையென்பது மாதர்க்

கணிகலம்,' என்று கூறி, உங்களினத்தையே நீங்கள் குறைத்துக் கொள்ளலாமா? பெண்கள் அறிவற்றவர் களென்பதா தங்கள் எண்ணம்?"

"அடி அசடே! நீ அப்படியா அர்த்தம் செய்து கொண்டாய், அணிகலமென் றிருப்பதை நீ கவனிக்க வில்லையா? பெண்களுக்கு எல்லாவற்றையும் விட அழகிய ஆபரணங்களின் மேல்தான் அதிக ஆசை. அறியாமையானது இருக்கும் அழகையும் குலைத்து விடுமே! அதை யாராவது ஆபரணமாக ஏற்றுக்கொள் வார்களா? நீ தொல்காப்பியமென்னும் நூலைப்பற்றி கேள்விப்பட்டதுண்டா?"

"ஏன், படித்துக்கூடத்தான் இருக்கிறேன்."

"அப்படியானால் அவர் பேதமை என்பதற்கு 'கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை,' என்று பொருள்கூறி யிருக்கிறாரே அதை நீ படித்ததில்லையா!"

"படித்திருக்கிறேன்; ஆனால் சரியாய்ப் புரிய வில்லை."

"சொல்லுகிறேன் கேள், அறிவுடையோர் கூறு வதை ஒன்றுவிடாமல் கவனமாய்க் கேட்டு மனதில் வைத்துக்கொண்டு அவ்வாறு தான் கற்றுக்கொண்ட விஷயங்களை வெளியாருக்குக் காட்டாமல் அடக்கமா யிருப்பதே அதன் பொருள். அடக்கத்தைத்தான் பெண்களுக்கு ஆபரணம் என்று கூறினேன். ஏனெ னில், அது தெய்வத்தன்மையை தருமல்லவா? 'அடக் கம் அமரருள் உய்க்கும்,' என்று என் தம்பி திருவள்ளு வன்கூடக் கூறியிருக்கிறானே. தேவப் பெண்களெல் லாம் ரொம்ப அழகா யிருப்பார்களென்று கேள்விப் பட்டதில்லையா? அவர்களுக்கு அடக்கம்தான், அழகைக் கொடுத்திருக்கிறது. இனிமேலாவது இதைப் போல் விபரீதமான அர்த்தம் செய்துகொண்டு, என்னை சந்தியிலிழுத்து விடாதீர்கள்."

"பாட்டீ! இப்பொழுது நன்றாய்ப்புரிந்துக்கொண் டேன். இந்தப் 'பேதைமை,' என்ற சொல்தான் வெகு

நாளாய் என் மனதையறுத்துக் கொண்டிருந்தது. எனக்குக்கூட கவிபாட வேண்டுமென்று வெகுநாட்களாக ஆசை. ஆனால் ஓயாதவேலை. சற்றும் ஒழிவில்லை. அப்படித்தான் பாடினாலும் 'யாரோ ஒரு பெண்ணும், என்னமோ சுமாராய்ப் பாடியிக்கிறாள்,' என்பார்களே தவிர யார் லக்ஷ்யம் செய்வார்கள்."

"நான் என்ன உட்கார்ந்துகொண்டா இருந்தேன். யாராவது சண்டை போட்டுக் கொண்டால் சமாதானம் செய்ய நான்தான் போகவேண்டும். தங்கள் பிள்ளைகள் தவறி நடந்தால் பெற்றோர்கள் என்னைத்தானழைப்பார்கள் சின்ன சின்ன வார்த்தைகளைக் கூறி, அவர்களைச் சீர்திருத்துவேன். அதற்காகப் பாடியதுதான் ஆத்திச்சூடியும், கொன்றைவேந்தனும். அரசர்களுக்குப் பொழுது போகாவிட்டால் என்னைக்கூப்பிட்டனுப்பி விடுவார்கள். கலியாணம் செய்து வைப்பதும் நான். தூதுநடப்பதும் நான். இத்தனை வேலைகளுக்கிடையில் எனக்கு ஓய்வெங்கே கிடைத்திருக்கும் என்று நீயே யோசித்துப் பார். மலையிலும், காட்டிலும், வயலிலுமாக ஓடிக்கொண்டேதான் இருந்தேன். கிடைக்கும் நேரத்தில்தான் எதற்கும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். நீ பெண்களின் கவிகளை மதிக்க மாட்டார்களென்று சொன்னாயே, அது வெகு தவறு. பழங்காலத்திலேயே, என்னுடைய கவியைக்கேட்டு மூவேந்தர்களும் ஓடி வந்தார்களென்றால் இந்தக்காலத்தில் கேட்பானேன். அதுவும் இந்த நவயுகத்தில் பெண்களுக்குத்தானே மதிப்பதிகம். சரோஜினி தேவியின் கவியை உலகமே கொண்டாடவில்லையா? ஒன்று மட்டும் சொல்லுவேன். இக்காலத்தில் செய்யுளைப்படித்துப் புரிந்து கொள்ளும் திறமையும் பொறுமையும் நூற்றில் தொண்ணூற்றொன்பது பேருக்குக் கிடையாது. பத்திரிகைகள் தான் எங்கும் பறந்துக் கொண்டிருக்கின்றனவே. அதற்குக் கட்டுரைகள் எழுதேன்".

"குங்குமமென்று ஒரு பத்திரிகை வந்திருக்கிறதே. அதற்குக் கட்டுரை எழுதேன் அதில் என்னையும் ஒரு சந்தாதாரராகச் சேர்த்துக்கொள்ளச் சொல்லு."

திருந்திய நாட்டுப்பெண்

"மாலினி"

கூடத்துச் சுவரிலிருந்த மணி 'டாண், டாண்' என்று நான்கு தடவை நீட்டி முழக்கி அடித்தது. வீட்டின் உள்ளறையின் வாசலருகில் படுத்திருந்த ராஜேஸ்வரி கண்ணை விழித்தாள். படுத்தவாறே ஜன்னல் வழியாக வெளியே நோக்கினாள். வெயில் ஓடுவரை ஏறியிருந்தது. எழுந்திருந்து ஆடைகளைச் சீர்படுத்தி, புழைக்கடைக்குப் போனாள். 'ஸோப்பு'ப்போட்டு முகத்தை நன்றாகக் கழுவிக் கொண்டாள். விவரிப்பானேன்? தற்கால நவநாகரிக மங்கையர்கள் தினமும் மாலை வேளையில் அரைமணி நேரத்தைச் செலவழிப்பார்களே அதேமாதிரி ராஜேஸ்வரி வீட்டிலும் நடந்தது. மல்லிகை மலரைத் தொடுத்துக் கொண்டையில் சொருகிக் கொண்டாள். நிலைக்கண்ணாடியின் முன் சிறிது நேரம் நின்று, விட்டுப்போன அழகையெல்லாம் சேர்த்தாள். இடையே வாசலுக்கும் அடிக்கடி வந்து யாரையோ எதிர்பார்த்தாள்.

கும்பகோணத்தில் கிட்டாவய்யர் பெரிய பண்ணையார். ஏகப்பட்ட நிலங்களும் சொத்துகளும் இருந்தன. அவருக்கு நான்கு பெண் குழந்தைகள்; இரண்டு ஆண் பிள்ளைகள். செளக்கியமான குடும்பம். வயிறு வாடாமல் எல்லோரும் சுபிட்சமாக இருந்தார்கள். ராஜேஸ்வரி பெண்களில் கடைக்குட்டி. ஆறாம் பாரம் வரை படித்தாள். ரொம்ப துடுக்குக்காரி. எதற்கெடுத்தாலும் 'வெடுக், வெடுக்' என்று பேசிவிடுவாள். மற்ற மூன்று பெண்களையும் வயது வந்ததும் தாமதமின்றி மணம் செய்து வைத்தார் கிட்டாவய்யர். பெரிய பையன் பி. ஏ. படித்துக் கொண்டிருந்தான். சின்னவன் ஆறாம் பாரத்துடன் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டான். தான் காலேஜில் படிக்கப் போவதில்லை என்று சொல்லிவிட்டு எழுத்தாளத் தொழிலில் இறங்கி விட்டான். அவனைப் பார்த்து ராஜேஸ்வரி, "ஏண்டா! கடைசியிலே பொய்யும், புளுகுகளையும்தானா தலையில் தூக்கி வைத்துக் கொண்டாய்?" என்று ஏளனம் செய்வாள். அவன், "சரிதாண்டி, உன் ஊத்த வாயை மூடிக்கொண்டு போ! 'கிரிடிக்' மாதிரி வத்துட்டா! போ, போ" என்று எரிந்து விழுவான். "'ஊசிக் காற்றா'ம், புனைப்பெயரைப் பார்க்கலை, புனைப்பெயரை!" என்று சிரித்துவிட்டு அறையை விட்டு வெளியேறி விடுவாள், ராஜேஸ்வரி. இல்லாவிட்டால் தான் குட்டு 'ணங்'கென்று விழுந்து விடுமே!

ராஜேஸ்வரி பதினாறாவது வயதை எட்டிப் பிடித்தாள். வீட்டிலே கல்யாணப் பேச்சு ஆரம்ப மாயிற்று. கல்யாணம் என்பதைக் கேட்டவுடன் ராஜேஸ்வரியின் துடுதுடுப்புத் தனமெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்தது. அறையை விட்டு அதிகமாக வெளி வருவதேயில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தை 'எழுத்தாளன்' பயன்படுத்திக் கொள்வான். "அடியம்மா! உனக்குக் கல்யாணமாமே? போகட்டும்! உனக்குப் புருஷனு வருபவன் என்னைப்போல் எழுத்தாளனுக இருக்கணும்! அப்போது நான் பார்ப்பேன், வேடிக்கையை!" என்று சொல்லி விட்டுக் 'கட, கட' வென்று சிரிப்பான். "போடா, மண்டுப் பயலே!" என்பாள், குங்குமம் போல் சிவந்த முகத்துடன். வரன் நல்ல வரன்தான். பணக்காரக் குடும்பத்துப் பிள்ளை. பெயர் ராகவன். பி. ஏ. பாஸ் செய்து விட்டுப் பெரிய உத்தியோகத்தில் இருந்தான். மாதச்சம்பளம் முன்னூறு. நல்ல சுபதினத்தில் ஸ்ரீமதி ராஜேஸ்வரிக்கும், ஸ்ரீமான் ராகவனுக்கும் திருமணம் நடந்தது.

மணம் புரிந்த மூன்றும் மாதம் ராகவன் பெண்ணை அழைத்துக் கொண்டுபோக வந்தான். ராஜேஸ்வரி எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டாள். சின்னவனிடமும் கேட்க வேண்டுமென்று போனுள். அவன் அறை காலியாக இருந்தது. என்ன இருந்தாலும் மனசு கேட்கிறதா? குதிரை வண்டியில் ஏறும்போது, வாசற்படியில் நின்ற அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தாள் ராஜேஸ்வரி. அவள் கண்களில் இரண்டு சொட்டுக் கண்ணீர் வந்தது. வண்டி சீக்கிரமே ஸ்டேஷனை அடைந்தது. ரயில் வண்டியில் கலங்கிய கண்களுடன் உட்கார்ந்திருந்தாள் ராஜேஸ்வரி. திடீரென்று எங்கிருந்தோ சின்னவன் தோன்றினுன். "என்ன அக்கா! ஊருக்குப் போகிருயோ?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான். ஆனுலும் அவன் மனதில் இத்தனை நாள் நம்முடனே இருந்து விட்டுப் போகிருளே என்று வருத்தம் தான். "ஆமாண்டா! என்னை மறந்துடாதே! அடிக்கடி கடுதாசு போடு என்ன?" என்று கேட்டாள். குரல் கம்மியிருந்தது. "ஓ! ஜோராப் போடுறேன். கடிதம் எழுதாவிட்டாலும், "பேனுமுனை" பத்திரிகையை வாங்கிப் பாரு! வாரா வாரம் அதில் என் கதை வரும்!" என்று பெருமிதத்துடன் சொன்னுன்.

பட்டணத்தில் வந்திறங்கினுர்கள் புதுத்தம்பதிகள். பின்பு ஒரு டாக்ஸியில் ஏறி ஒரு பெரிய பங்களா முன் வந்து நின்றுர்கள். பங்களாவைப் பார்த்ததும் மூக்கின்மேல் விரலை வைத்தாள். பங்களாவிற்கு முன் சிறிய 'கேட்' இருந்தது. அதைத் தாண்டினதும் பலவகையான புஷ்பச் செடிகள். மலர்களின் வாசனை ராஜேஸ்வரியைத் திகைக்க வைத்தன. "அடேயப்பா! இவைகளைப்பார்த்தே இப்படி மயங்கினுல், ஹாலுக்குள் நுழைந்தால் என்ன செய்வாயோ?" என்றுன் ராகவன் புன்சிரிப்புடன். பங்களா திறந்து கிடந்தது. வாசலருகில் தன்கையிலிருந்த கூஜாவை வைத்துவிட்டு உள்ளறையை நோக்கி "அம்மா!" என்று கூப்பிட்டான் ராகவன். உள்ளே சமையலறையில் கறிகாய் நறுக்கிக் கொண்டிருந்த செல்லம்மாள் புடவையைச் சரிப்படுத்திக்கொண்டு வாசலை நோக்கி ஓடோடியும் வந்தாள். "இன்றைக்கு வருகிறேன் என்று கடுதாசு போடப்படாதோ? வாம்மா, வா," என்று பிள்ளையைப் பார்த்துச் சொல்லிவிட்டு,

ராஜேஸ்வரியின் கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டாள். ராஜேஸ்வரியின் முகம் சுருங்கியது. ஏன்? செல்லம்மாள்தான் அன்பாகவே வரவேற்றுளே! காரணம் ராஜேஸ்வரிக்கே புலப்பட வில்லை. மாமியாரைப் பார்த்தவுடன் ஒரு வெறுப்பு!

இந்த வெறுப்பு நாளடைவில் வேரூன்ற ஆரம்பித்தது. பாருங் கள், அவளது துர் அதிஷ்டத்தை! சும்மாவே இருந்த மாமியார்மீது கோபம், வெறுப்பு. செல்லம்மாளிடம் பல நாளாகச் சரியாக முகங் கொடுத்துப் பேசவில்லை. எத்தனை தடவை கூப்பிட்டாலும் காது கேளாதது போலவே இருந்து விடுவாள். பிறகு ''நீங்கள் கூப்பிட்டது காதில் விழவே யில்லையே, மாமி!'' என்று ஏய்த்து விடுவாள். இப்படியே மாமியாரின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டாள். காலையில் ஒரு கடிதம் வந்தது. ''ரகு தான் எழுதியிருக்கிறுனே?'' என்று ஆவலுடன், கடிதத்தை எடுத்துப் பார்த்தாள். கையெழுத்து வேறுமாதிரியிருந்தது. ''யாருக்குடி?'' என்று கேட்டுக் கொண்டே வந்த ராகவனிடம், கடிதத்தைக் கொடுத்து விட்டாள். அரை நொடி யில் அதைப்பிரித்து வாசித்தான். வாசித்து விட்டு, ''அம்மா! உன்னை அத்தை வரச்சொல்லி எழுதியிருக்கா'' என்றுன். செல்லம்மாள் வந்து, ''எந்த அத்தை?'' என்று கேட்டாள். ''ராஜம் அத்தை, அம்மா! அவளுக்கு உடம்பு கொஞ்சம் அசௌக்யமாய் இருக்காம்! நீ வந்தால் கொஞ்சம் ஒத்தாசையாய் இருக்கும் என்று எழுதி யிருக்கா'' என்று விளக்கினுன்.

மறுநாள் காலையில் மாமியார் மூட்டை முடிச்சுகளுடன் வண்டி யில் ஏறியபோது ''அப்பாடா! விட்டது சனியன்'' என்று மனங் குளிர்ந்தாள் ராஜேஸ்வரி. மாமியார் போனதில் அவளுக்குப் பேரானந்தம். அன்று பிற்பகலில் கணவனிடம், ''சினிமாவிற்குப் போவோமா?'' என்று மெதுவாகக் கேட்டாள். அம்மா போனதி லிருந்து அவன் மனம் சரியாக இல்லை. மிகவும் வருத்தத்துடன் இருந்தான். ''இல்லை, இன்றைக்கு வேண்டாம்! அடுத்த நாள் போவோம்'' என்றுன் ராகவன். அவள் முகம் சுண்டிவிட்டது. ''ஆமாம்! இருந்திருந்து இன்றைக்குக்கூப்பிடறேன்! எத்தனை நாள் உங்களை இப்படிக் கேட்டிருக்கிறேன்?'' என்றுள். ''வேண் டாம் ராஜம்! எனக்கு மனசு சரியாக இல்லை'' என்று கொஞ்சிக் கொண்டே பதிலளித்தான். ராஜேஸ்வரிக்கு ஒரே கோபம். அன்று முழுவதும் ஒரே அழுகை தான்!

மத்தியானச் சாப்பாடு சாப்பிட்டு விட்டு அசதியாகத்தூங்கி யிருந்தாள். மணி நான்கு அடித்தவுடன் எழுந்து தன்னை அலங் கரித்துக் கொண்டாள் ராஜேஸ்வரி. அவள் வாசலில் அடிக்கடி எதிர் பார்த்தபடியே ராகவன் வந்தான். என்றுமில்லாத உவகை அவள் மனதில் குடிகொண்டது. ''சொன்ன மாதிரியே வந்து விட்டீர்களே! இதோ பாருங்கள். நான் கூட 'ரெடி' யாக எல்லாம் தயார் பண்ணிக் கொண்டேன்'' என்று குதூகலத்துடன் சொன்னுள்.

அன்று அவர்கள் இருவரும் சினிமாவிற்குப் போவதாக இருந்தது. "ஐயோ, பாவம்! உன்னுடைய சந்தோஷத்தைக் குலைக்க எனக்கு வருத்தமாக இருக்கிறது. இன்று இரவு எட்டரை மணி வண்டிக்கு அம்மா வருவதாகக் கடிதம் போட்டிருக்கிறாள். வேண்டுமானால் பார்த்துக் கொள்" என்று நிதானமாகச் சொல்லிவிட்டுப் பையி லிருந்து ஒரு கடிதத்தை எடுத்தான். அவ்வளவு தான்! ராஜேஸ் வரிக்கு அடக்க முடியாத கோபம்! சினிமா பார்ப்பது தொலைந்தது, ஒரு காரணம்! மற்றொன்று மாமியார் மறுபடியும் வருவது எப்பேர்ப் பட்ட ஏமாற்றம். வரும் அழுகையைக் கஷ்டப்பட்டு மறைத்துக் கொண்டு "நல்லவேளை" என்று ஒரே ஒரு வார்த்தை கூறினாள்.

அன்றிரவு மாமியார் வரும்போது ராஜேஸ்வரி புழக் கடையில் இருந்தாள். "வாருங்கள்" என்று சரியாகக் கூடச் சொல்லவில்லை. ராகவனோ 'அம்மா வந்து விட்டாள்' என்று ஒரே சந்தோஷத்தில் ஆழ்ந்து போனான். அடிக்கடி சமையலறைக்கு வந்து, "வற்றல் குழம்பு செய்! அதுதான் அம்மாவிற்குப்பிடிக்கும்," "நல்ல உறைப்பில்லாத ரஸம் வை, பார்க்கலாம்! அம்மாவிற்கு ஏற்றதாக இருக்கவேண்டும்" என்று கட்டளையிட்டான். ராஜேஸ் வரிக்கு அவன்மேல் கோபம் கோபமாய் வந்தது. "ஆமாம்! அம்மாவுக்கு கால் பிடியுங்கோ" என்று வாய்க்குள் முணுமுணுப் பாள்.

பழையபடியும் வெறுப்பு தலைதூக்க ஆரம்பித்தது. மறுநாள் ராகவன் போஜனத்தைமுடித்துக் கொண்டு ஆபீஸுக்குப் போயிருந் தான். ராஜேஸ்வரி, அடுத்த வீட்டு மீனாவிடம் பேசிக் கொண்டிருக் கலாம் என்றெண்ணி தலையை வாரிவிட அறைக்குள் நுழைந்தாள். அப்படியே வாயிற்படியிலே நின்று விட்டாள். கண்கள் சிவந்தன. உடனே கதவிடுக்கில் மறைந்து கொண்டு பார்த்தாள். செல்லம்மாள் குனிந்து ராஜேஸ்வரியின் மேஜை டிராயரில் எதை எதையோ புரட்டிப்பார்த்துக் கொண்டிருந்தாள். ராஜேஸ்வரிக்கு ஆத்திரம், வெறுப்பு எல்லாம் வருவதற்குக் கேட்கவாவேண்டும்? மறுமடியும் சந்தடி செய்யாமல் போய்விட்டாள். பிறகு என்ன? மறைமுகமாக யாரையோ திட்டினாற்போல் நன்றாக வைய ஆரம்பித்தாள். அந்த மாமியாரும் ஒன்றையும் புரிந்து கொள்ளாமல் பேசாமலேயிருந்தாள். மாலையில் ராகவன் வந்ததும் ஏசுவது இன்னும் அதிகமாயிற்று. ராகவனோ கையில் "பேனாமுனை" பத்திரிகையைக் கொண்டுவந் திருந்தான். அதைக்கண்டதும் அவளுக்குத் தன் தமையன் ஞாபகம் வந்தது. அவசரமாகப் புரட்டிப் பார்த்தாள்.

"ஊசிக்காற்று" எழுதிய "பாவம், லலிதா!" என்ற கதையை வாசித்தாள். அவளுடைய கடின மனதையும் அக்கதை உருக்கி விட்டது. "அடடா! நம்ம ரகுவா இப்படி எழுதியிருக்கிறான்? என்றால் நம்பவே முடியவில்லையே! அந்த லலிதா தன் மாமியாரை என்ன பாடுபடுத்துகிறாள்? என்னைச் சுட்டிக் காட்டத்தான் இப்படி

எழுதியிருக்கிருளு?......... நான் ஏன் என் மாமியாரை வெறுக்கலாகாது? அவள் என்னறைக்குள் நுழைந்து திருடலாம், டிராயரைத்திறந்து பார்க்கலாம்; நான் அதை கண்ணெதிரே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்! நல்ல வழக்கு!..........." இப்படியாக எண்ணினள், ராஜேஸ்வரி. அந்தக்கதை இன்னும் முடியவில்லை. 'அடுத்த இதழில் முடிவுறும்' என்று கீழே அச்சிடப்பட்டிருந்தது. "அதன் முடிவைத்தான் பார்ப்போமே!" என்று நினைத்தாள்.

ஒருவாரம் கழிந்தது. நாட்டுப்பெண்ணுக்கும் மாமியாருக்கு மிடையே பேச்சு வார்த்தைகிடையாது. "சாதுவான நாட்டுப்பெண்" என்று எண்ணிக் கொண்டாள் அந்த அப்பாவி மாமியார்! ராஜேஸ்வரி வாய்க்குள் முணுமுணுப்பதையும், கழுத்தை 'வெட்,வெட்' டென்று திருப்புவதையும் நிறுத்தவில்லை. ராகவன் தானுண்டு தன் வேலையுண்டு என்றிருந்தான்.

அன்று வெள்ளிக்கிழமை. மிற்பகல். செல்லம்மாள் சாப்பிட்டு விட்டுத் தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்தாள். ராஜேஸ்வரி சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். மாமியார் சாப்பிட்டபின், உட்காருவது தான் அவள் வழக்கம். எங்கே கண் பட்டு விடுகிருளோ என்று பயமோ, என்னவோ? மணி இரண்டு அடிப்பதற்கும் கையலம்புவதற்கும் சரியாக இருந்தது. அலம்பிவிட்டு அறைக்குள் வந்தாள். வெளியே நின்று கொண்டு மெதுவாக எட்டிப் பார்த்தாள், மாமியார் இன்னும் திருடுகிருளோ என்று! அது எப்படி அவளுக்கு மறந்து போகும்? மாமியாரைப் பார்க்கும் போதெல்லாம், அந்த நினைவு தான் அவளுக்கு. தாழ்வாரத்தில் செல்லம்மாளின் பேச்சுக்குரல் கேட்டது.

உள்ளறையின் கதவின் அருகில் நின்ருள். அவள் மனம்; "அவளை மாத்திரம் 'திருடி, திருடி!' என்று பட்டம் கட்டினுயே! நீ ஒட்டுக் கேட்கலாமா?" என்றது. "நான் ஒன்றும் திருடப் போகவில்லை" என்று ஏளனமாக, மாமியாரைக் குத்திக் காட்டிய வண்ணம் முணு முணுத்தாள். பேச்சைக் கவனிக்கலானுள். முதலில் மாமியாருடன் பேசுவது யார் என்று கதவிடுக்கின் வழியாகப் பார்த்தாள். 'கோள்ச் சொல்லி' சீதா தான்.

"ஏன் மாமி! உங்க நாட்டுப் பெண் "ஊமைக்கோட்டான்" மாதிரி இருக்கிருள்? உங்களோடு பேசுகிறதேயில்லையோ?" என்று கேட்டாள் சீதா. கதவின் பின்னல் நின்ற ராஜேஸ்வரி, "அட ஆந்தைக் கண்ணு! கோள்ச்சொல்லி!" என்று மனதுக்குள் திட்டினுள்.

"போடி, சீதா! உனக்கென்ன தெரியும்? அவள் ரொம்ப சமத்துடி! யாரண்டையும் அதிகமாகப் பேசமாட்டாள். கணவனையும் படுத்துகிறதே கிடையாது........."

ராஜேஸ்வரி விழித்தாள். "இதென்ன! வேணுமென்றுதான் பொய் சொல்லுகிருளோ?" என்று எண்ணினாள். உற்றுக் கேட்கலானாள்.

"ஆனால், சீதா! நான் ஒரு பெரிய தப்பு பண்ணிவிட்டேனடி! அதை ஒருத்தரிடமும் சொல்லவில்லே. அதுதான் என் நாட்டுப் பெண்ணிற்கு வருத்தமாக இருக்கிறதோ என்னவோ? அன்றி விருந்து அவள் முகம் வாடி வதங்கிப் போச்சு. பிசகு என்மேலேதான், ஆமாம்!"

"சீக்கிரம் விஷயத்தைச் சொல்லுங்கோ, மாமி!" என்று தூண்டினாள், சீதா.

"ஒண்ணுமில்லே! போனவாரம் ஊரிலேருந்து வந்தேன். பிரயாண அலுப்பாக இருந்தது. மூட்டுக்கு மூட்டு வேதனை தாங்க முடியவில்லே. கொஞ்சம் கஷாயம் போட்டுக் குடிக்கலாம் என்று சுக்கு தேடினேன். சமயலறையில் பூராவும் பார்த்தேன். காணவில்லே. பிறகு என் நாட்டுப் பெண்ணிடமே நான் கேட்டிருக்கப் படாதோ? நான் தான் முட்டாளாச்சே! பேசாமல் அவளறையில் நுழைந்து டிராயரை எல்லாம் திறந்து பார்த்தேன். என்ன இருந்தாலும் பிறத்தியாருடைய சாமானைத் தொடலாமோ? அவள் அதை நேரிலே காணவிட்டாலும் சாமான்கள் கலைந்திருப்பதை அறிந்திருப்பாள். அது என் பிசகு. நானே அதை ஒப்புக் கொள்கிறேன்!"

"அடேயப்பா! தங்கக் கட்டியாக அல்லவா இந்த மாமி இருக்கிறாள்" என்றெண்ணினாள், சீதா.

மறைவில் நின்ற ராஜேஸ்வரிக்கு அதையேன் கேட்கவேண்டும். அழுகை அழுகையாக வந்தது. அப்படியே காலில் விழுந்து, "நீங்கள் தான் தெய்வம்! என்னை மன்னியுங்கள்!" என்று கதறி விடலாமா என்று தோன்றியது. எப்பேர்ப்பட்ட கொடிய பாவத்தை அவள் மேல் சுமத்தி விட்டாள்.

மாலை நாலுமணி. ராகவன் 'பேறுமுனை'யைக் கொண்டு வந்தான். சமயலறையை நோக்கி, "ராஜி! 'பாவம், லலிதா' கதையின் முடிவைப் பார்க்கவில்லையா?" என்று சாதாரணமாகக் கேட்டான். ராஜேஸ்வரி வரவில்லே. "முடிவை யெல்லாம் அறிந்து விட்டேன். இங்கேயே முடிவு நடந்து விட்டது. கடைசியில் லலிதா தன் தவறை யுணர்ந்து மாமியார் காலில் விழுகிருளோ? என்ன, அப்படித் தானே?" என்று குரல்கொடுத்தாள். தன் கதைக்கும், ரகு எழுதிய கதைக்கும் உள்ள ஒற்றுமை ராஜேஸ்வரியைத் தவிர வேறு யாருக்குத் தெரியப் போகிறது?

என்ன ஆனாலும் என்ன? ராஜேஸ்வரி திருந்தி விட்டாள். அவளுடைய மனமாற்றம் அவள் முகத்திலே பிரதி பலித்தது.

கற்பனையும் வாஸ்தவமும்!

[ஸ்ரீமதி என். பத்மா]

"மாலை ஆறு மணி இருக்கும். வீட்டு விளக்கை ஏற்றி வைத்துவிட்டு தெருத்திண்ணையில் வந்து உட்கார்ந்துகொண்டேன். தெருவில் நாற்சந்து கூடும் மூலையில் மெற்குரி விளக்கு வெகு பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. விளக்கைச் சுற்றி மொய்க்கும் பலவித பூச்சிகளின் 'கொய்ங்' என்ற சத்தத்துடன் அங்கே விளையாடிக்கொண்டிருந்த சிறுவர் சிறுமிகளின் கூக்குரல் போட்டியிட்டது. விஸ்தாரமான விளக்கு வெளிச்சத்தில் விளையாடிக்கொண்டிருந்த பலதரப்பட்ட குழந்தைகளின் நடுவில் ஐந்தே வயது நிரம்பிய எங்கள் கிரிஜா சுருண்டு தொங்கும் தன் இரண்டு பின்னலும் முன்னேயும் பின்னேயும், மாறி மாறி, விழுந்து அழகு படுத்த அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தாள். அவளுடைய கரிய விழிகள் மேலே மொய்க்கும் வண்டுகளை ஏசிக்காட்டுவன போலிருந்தன! அவளுடைய அழகில் லயித்திருந்த என் மனம் எட்டு வருஷங்களுக்கு முன்னால் தாவிச் சென்றது.

★ ★ ★

ஐந்து மாத கர்ப்பிணியாக புக்ககத்திலிருந்து வளைகாப்பிற்காக வந்திருக்கும் என் சகோதரியை நாங்கள் பலவிதத்தில் பரிகாசம் செய்து மகிழ்வித்துக் கொண்டிருந்தோம். பதினைந்து வருஷங்களாக குழந்தைகளே இல்லாத குறை தீரப்போவதை எண்ணி எங்கள் வீட்டிலேயே எல்லோரும் மிகவும் சந்துஷ்டியுடன் இருந்தோம். பிறக்கப் போகும் சிசுவைப்பற்றி பலவாறாக பேசி மகிழ்ந்தோம். எஞ்சி யிருந்த ஐந்து மாதங்களும் முடிந்து குழந்தையை என்று காணப் போகிறோம் என்ற ஆவல் எனக்கு மிகுந்திருந்தது. எனக்குப் பிறகு எங்கள் வீட்டில் நான் ஆசையுடன் வளர்க்க தம்பியோ தங்கையோ பிறக்கவில்லையாதலால் எல்லோருக்கும் மேலாக என் ஆவல் உச்சநிலையை அடைந்திருந்தது. சட்டைகள் தைத்து மீந்த புதுத் துணி துண்டுகளை சேகரித்துக்கொண்டு, "அடி அக்கா! உனக்குப் பிறக்கப்போகும்

குழந்தைக்கு சட்டை தைப்பதற்கு தான் இவையெல்லாம்! என்பேன். அவள் முகம் நாணத்தினல் சிவந்து அதில் அழகிய புன்னகை தவழும். அப்பொழுது தாய்மை ஸ்தானத்தை வகிக்கப்போகும் அவள் உள்ளம் எல்லையில்லாத உவகையிலாழ்ந்து விடும்.

நாட்கள் மெதுவாக ஊர்ந்தன........என் சிநேகிதி லீலா தன் அண்ணவின் குழந்தையை அழைத்துக் கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்திருந்தாள். குழந்தை பிரதாப் என்னிடம் 'கொஞ்சிக் கொஞ்சி' விளையாடினன். "பிரதாப், அந்த மாமியுடன் அதிகமான உறவு கொண்டாடாதே! நாளைக்கே அவர்கள் வீட்டில் ஒரு பாப்பா பிறக்கப் போகிறது! அப்பொழுது அவள் உன்னை திரும்பிக்கூட பார்க்கமாட்டாள்!" என்று பரிகாசமாக கூறினள் லீலா. அவ்வார்த்தைகளைக் கேட்ட என் மனம் வரப்போகும் அந்த இன்பத்தைக் குறித்து ஆனந்தத்தில் மூழ்கியது!

இன்னொருநாள் சில விருந்தாளிகள் எங்கள் வீட்டிற்கு விஜயம் செய்திருந்தனர். அவர்களில் ஒருத்திக்கு இரண்டு வயது மதிப்பிடத்தக்க குழந்தை ஒன்று இருந்தது. மிகவும் நோஞ்சலான உடல். முகத்தில் அவலக்ஷணம் எழுதி ஒட்டியிருந்தது. பார்ப்பதற்கு விகாரமாயிருந்த அந்தக் குழந்தை என்னிடம் தத்திநத்தி நடந்து வருவதைக் கண்டு வெறுப்பினல் முகத்தை சுளித்தேன் நான். "ஏண்டி சுந்தரி, எனக்கு இதைப்போல ஒரு பெண் பிறந்தால் அதை நீ தொடக்கூட மாட்டாயோ?" என்று என்னைக் கேட்டாள் சரளா. நான் யோசித்தேன். "தாயைப் போலத்தானே சேய், உனக்கு ஒருபோதும் அந்தமாதிரி குழந்தை பிறக்காது" என்று தீர்மானமாக பதிலளித்தேன் நான்.

அதிகம் சொல்வானேன்? ஆறு, ஏழு, எட்டு என்று முறையே ஒன்பது மாதங்களும் முடிந்து பத்தாவது மாதமும் எட்டிப் பார்த்தது...........முடிவில் நான் எதிர்பார்த்த அந்த நாள் வந்தது. பிரஸவ வேதனையால் சரளாவின் முகம் சோர்ந்தது. எங்கள் ஊர் லேடி டாக்டர் வரவழைக்கப்பட்டாள். நேரம் ஆக ஆக என் இருதயம் ஆவலினல் துடித்தது. துடிக்கும் இதயத்துடன் கதவுக்கு வெளியே நின்று கொண்டிருந்த நான் பலவித சிந்தனைகளில் ஈடுபட்டேன்.

பிறக்கப்போகும் சிசு ஆணோ, பெண்ணோ? குழந்தை எப்படி இருக்குமோ! அக்காவைப்போல் சிவப்பாயிருந்தால், அத்திம்பேரைப்போல் உயரமாயிருந்தால்!....நடுநடுவே என் சிந்தனை ஓட்டத்தைக் கலக்கும் அக்காவின் பரிதாபகரமான முனகல் குரல் கேட்டது. என் உள்ளம் கலங்கி கண்ணீர் வழிந்தது. அக்காவின் வேதனையைக் குறித்து வருத்தம் ஒருபுறம்! அதற்குப்பின் ஏற்படும் இன்பத்தைக் குறித்து திருப்தி ஒருபுறமாக குமிழிட்டன மனத்திரையிலே. உள்ளேயிருந்து லேடி டாக்டரின் மெல்லிய குரல் மெதுவாகக் கேட்டது. "நிலைமை மிகவும் நெருக்கடியானது, மோசமானதும்கூட; இனிமேல் இங்கே வைத்திருப்பதில் பிரயோஜனமில்லை. ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய்விடுங்கள்." அவளது வார்த்தைகள் அழுத்தமானதும், பயங்கரத்தை அறிவுறுத்துவது போலவுமிருந்தன. மீண்டும் மனதில் ஒரே குழப்பம்!

மறுநாள் ஆஸ்பத்திரியிலிருந்து விஷயம் தெரிந்தது. பெண் குழந்தை. பிறந்த இரண்டு நிமிஷங்களில் இறந்துவிட்டது!....!....? அவ்வளவுதான். என் இதய வீணையின் ஜீவ நரம்பு படாரென்று அறுந்தது! நான் கட்டிய மனக்கோட்டைகள் இடிந்து சுக்குநூறாகி தரைமட்டமாகியது! அன்றுதான் புதிதாகப் போடப்பட்ட மெர்க்குரி விளக்கு என்னை பரிகசிப்பது போன்று பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. நான் எந்த இன்பத்தைக் குறித்து ஏங்கினேனோ! எந்தக் குறை தீர்ந்துவிடுகிறதென்று கூத்திட்டேனோ? எந்தப் பேற்றைக் குறித்து பெருமிதமடைந்தேனோ, எதைப்பற்றி காலமெல்லாம் பகற்கனவுகள் கண்டேனோ! அதற்கெல்லாம் மூலகாரணமாயிருந்த அந்தக் குழந்தை யாரும் எதிர்ப்பாராவிதமாக என் கையிலிருந்து நழுவிவிட்டது. வெறிபிடித்தவள் போல் நின்றநிலையிலேயே ஆஸ்பத்திரிக்கு ஓடினேன். அங்கு சாவுகிடங்கில் "உலகம் இவ்வளவுதான்" என்று உபதேசிக்கும் யோகியைப்போல் கிடந்தது. மறுபடியும் எங்களுக்குள்ளே ஒரே சூன்யம் நிலவியது! என் மனம் நிலை காணாத நதியில் மூழ்கித் தவித்தது.

★ ★ ★

காலதேவன் தன் தேரை வெகு வேகமாக ஓட்டினான். மறுபடியும் சரளா கருதரித்தாள். இம்முறை எங்கள் எல்

லோர் மனதிலும் ஏக்கம் பிரதிபலித்தது. என்னவாகுமோ? என்ற கவலை மிகுந்திருந்தது. முன்முறைக்கு நேர் எதிராக வரப்போகும் நாட்களைக் குறித்து பீதி அடைந்தோம். வரவர சரளாவின் மனதில் கடந்துபோன நாட்களின் துன்ப நினைவுகள் நிழலாடின. கிலி பிடித்தவள் போல் அழுவாள் சரளா. வீட்டிற்கு வருவோரும் போவோரும் பலவாறு பேசிவிட்டு எல்லாம் கடவுள் நல்லதுதான் செய்வார், விசாரப் படாதேயுங்கள் என்று தீர்க்கத் தரிசனம் கூறிவிட்டு போனார்கள். "என்னமோம்மா! அந்தக் குழந்தைதான் அவள் உயிருக்கே உலை வைக்கப் பார்த்தது. எல்லாம் போராத காலம். இந்த முறையாவது நல்லபடியாகட்டும்! ஆமாம், இது எத்தனையாவது மாசம்" இப்படி சொல்லி தங்கள் அனுதாபத்தை தெரிவித்தார்கள் சில மாஜி சுமங்கலிகள்.

நாள் நெருங்கியதும் முன்னெச்சரிக்கையாக ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்தோம். அனேகமாக இரண்டு நாட்களில் பிரசவிக்கலாம் என்று அங்கு உள்ளோர் தெரிவித்தனர். அன்று புதன்கிழமை. சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறு ஏதோ பத்திரிகை ஒன்றை படித்துக்கொண்டிருந்தேன். தூக்கம் வரும்போலிருந்தது. அதை பலவந்தமாக தடுக்க படிப்பில் கவனம் செலுத்தினேன். துவிச்சக்கர வண்டியின் மணியோசை கேட்டது. என் அத்திம்பேர் வந்தார். அவர் முகம் பேயறைந்ததுபோலிருந்தது. விழிக்கிடையில் தண்ணீர் தேங்கி நின்றது. "இந்த முறையும் என் ஆசை பாழ்தானா?" என்றேன். ஆம் என்பதற்கடையாளமாக அவர் தலையாட்டினார். "ஹா!" என்று அலறிய நான் கனவு கலைந்து ஒரு துள்ளு துள்ளி எழுந்தேன்.

என் முகமெல்லாம் குப்பென்று வியர்த்தது. "உன்னை சித்தி என்றழைக்க ஒரு சின்ன கண்ணம்மா பிறந்திருக்கிறாள்" என்று திக்கித் திணறி....துக்கத்தினால் அல்ல, சந்தோஷத்தினால் கூறினாள் என் அம்மா! பிறகு....இருளும் ஒளியும் கலந்த மனோகரமான நேரத்தில் ஒரு நாள் "பாம் பாம்" என்ற ஹார்ன் சத்தத்துடன் வண்டி எங்கள் வீட்டு வாசலில் நின்றது. நான் தயாராக கரைத்து வைத்திருந்த ஆலத்தியை எடுத்துக்கொண்டு வாசலுக்குச் சென்றேன். காற்றில் அசைந்தாடும் பூங்கொடியென வண்டியிலிருந்து

இறங்கினுள் அக்கா. அவள் கையில் தேய்ந்து மறைந்து போன என் கனவெல்லாம், என் கற்பனைகளெல்லாம் திரண்டு ஒரு உருவாய் வந்ததேபோன்று அழகிய சிசு சிணுங்கிற்று. உள்ளம் நிறைந்த உவகையோடு மெற்குரி விளக்கின் வெளிச்சத்தில் மங்கள ஆலத்தி கரைத்துக் கொட்டினேன். எங்கிருந்தோ "டும், டும்" என்ற மேள சத்தம் கேட்கவே வீல் என்று அழுதது குழந்தை.

"ஆனுல்....அந்தோ! வீடு வந்த மறுநாள் திடீரென்று அக்கா ஜன்னி கண்டு கண்ணை மூடினுள். எதிர்பாராத பேரிடி என் தலையில் விழுந்தது போலிருந்தது இந்த சம்பவம். என் நெஞ்சு துக்கத்தால் விம்மியது. என்னவோ அக்கா இறந்ததிலிருந்து எனக்கு அவள் குழந்தையைக் கண்டாலே வெறுப்புத்தான் மேலிட்டது. அக்காவைக் கொன்ற எமன் என்று சபித்தேன் அதை. ஆனுல்! பின்னுல் நான் செய்தது தவறு என்று என் மனச்சாட்சி அறிவுறுத்தியது. அவள் ஞாபகார்த்தமாக அது ஒன்றுவது இருக்கிறதே என்று யாவரும் குழந்தை கிரிஜாவின் மேல் அத்யந்த பாசம் வைத்தோம்........"

★ ★ ★

"சில்லென்ற சின்னஞ்சிறு கரங்கள் என் கண்களைப் பொத்தவே நான் கனவுலகிலிருந்து விழித்துக்கொண்டேன். குழந்தை கிரிஜா தண்ணென்ற மிருதுக் கரங்களால் என் கண்களைப் பொத்தினுள். அவள் பின்னுல் என் அக்கா சிரித்தவாறே நின்றுக் கொண்டிருந்தாள். "நீ சொன்னதெல்லாம் சரிதான்! ஆனுல் கடைசியில் செய்ததுதான் மிகவும் அநியாயம்! உன் கதை ரஸனைக்காக என்னை அநியாயமாகக் கொன்றுவிட்டாயே? அது சரியா?" என்றுள். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அப்போதுதான் கவனித்தேன். நான் மேஜைமீது வைத்திருந்த இந்தக் கதை அக்காவின் கைக்குப் போயிருக்கிறதென்று....நான் வேறு வகையின்றி அசட்டுச் சிரிப்பு சிரித்து மழுப்பினேன். ஏதோ புரிந்துவிட்டவள் போல் குழந்தையும் சிரித்தாள்!

சக்திசாதனங்களின் நன்மையும் தீமையும்

[ஸ்ரீமதி சுந்தரம்மாள் ராகவாச்சாரி]

சென்ற ஐம்பது அறுபது வருஷங்களில் புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டு அனுஷ்டானத்திற்கும் உபயோகத் திற்கும் கொண்டு வரப்பட்டிருக்கிற இயந்திர சக்திசாதனங் களை உலக மக்கள் நல்வழியில் உபயோகித்துப் பயனடைகிறார் களா என்கிற கேள்விக்குப் பதில் "ஆமாம்; இல்லை" என்றே சொல்லவேண்டியதாயிருக்கிறது. பிரகிருதியிலுள்ள தத்துவ மர்மங்களையறிந்து நமதாக்கிப் பயன்படுத்திக் கொள்வதால், மனிதருக்கு நலனும் பெருமையுமே கிட்டும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் அனுஷ்டானத்தில் பார்க்கும் போது பலத்த வெடிகுண்டுகளென்ன, அணுகுண்டுகளென்ன, விஷத்தன்மை யுள்ள ஆவிப்புகைகளென்ன, ஆகாயமார்க்கமாகப் பறந்து சென்று எதிர்பாராத உயிர்ச்சேதம் பொருட்சேதம் விளைவிக் கும் 'வீ' 2 முதலிய விமானகுண்டுகளென்ன, இவையெல் லாம் ஜனசமூக நன்மையை நாடிப் பிரயோகிக்கப் படுபவைக ளெனச் சொல்லமுடியுமா? உள்ளிட்டதகன ஜ்வாலையந்திரங் கள் (இன்டர்னல் கம்பஸ்சன் இஞ்ஜின்), வாயுப்பீரிட்டத்தால் கனவேகத்துடன் தூண்டிச்செலுத்தப்படும் ஆகாயகப்பல் களின் இயந்திரங்கள் (jet engines), இன்னும் சமீபத்தில் முடிவுற்ற மாபெரும் போரில் கையாளப்பட்ட பலவகைச் சக்தியந்திரங்களும் எவ்வளவு வலியுடையவை! நற்பெருங் காரியங்கள் பலவற்றையும் சிறு பொழுதில் இயக்கி முடிக்க வல்லவை.

கனத்த வெடிகுண்டுகள் பாறைகளைத் தகர்த்துப் பிளக் கவும், சமுத்திரத்தில் சுவர்கள் அலைதாங்கிகள் முதலியவை கட்டவும், இன்னும் பல நற்காரியங்களியற்றவும் உபயோகப் படத்தக்கவை. அணுகுண்டு ஜப்பானில் இயற்றிய நாசச் செயல்களை அறியாதவர் யார்? ஆனால் அதே சக்தியினால் இயற்றக்கூடிய நன்மைபயக்கும் காரியங்கள் கணக்கற்றவை. சென்ற இரண்டு வருஷங்களாக ஐக்கிய நாடுகளிலும், இங்கிலாந்து, ருஷியா முதலிய தேசங்களிலும் இவ்வணுகுண்

டைப்பற்றிய சர்ச்சைகளும், ஆராய்ச்சிகளும், வெவ்வேறு துறைகளில் நடத்தப்பட்டு வருகின்றன. ஒரு நாட்டவர் நடத்தும் ஆராய்ச்சிகளை மற்றவர்கட்குப் பகிரங்கப் படுத்தாது இரகசியமாக வைத்துக்கொள்ளவும் பிரயத்தினங்கள் நடக்கின்றன. அணுகுண்டு, உலகத்தையே ஒரு நொடியில் இருந்தவிடந்தெரியாது நாசமாக்கவல்லதென விஞ்ஞானிகள் சொல்லக் கேட்கிறோம். ஆனல் நலம் பெருகுவதற்கான வழிகளை மட்டும் ஆராய்ச்சி செய்கிறார்கள் என்று நாம் நல்லெண்ணம் கொள்வோம்.

"விஷத்தன்மையுள்ள ஆவிப்புகைகள், (குளோரீன் கியாஸ், முறையே கடுகுப்புகை, கண்ணீர்பெருக்கும் புகை, கந்தகப் புகை முதலியன) முறையே புதுத்துணிகளை வெளுக்கவைக்கவும், குடிஜலத்திலுள்ள அணுக்கிருமிகளைக் கொல்லவும், பயிர்களை யழிக்கும் பூச்சிகளேயும், உணவுதானியங்களைத் துளைத்து நாசமாக்கும் வண்டுகளையும் கொன்று நீக்கவும் உபயோகப்படுபவை.

ஆகாயக் கப்பல்களைத்தூண்டிச் செலுத்தும் யந்திரங்கள், அவ்விமானங்களில் ஜனங்களையும், தபால்களையும் அதிவிரைவில் எடுத்துச் செல்லவும், ஆபத்து நிலையிலுள்ள வியாதியஸ்தர்களுக்குத் தேவையான வைத்தியர்களை நொடிப்பொழுதில் கொண்டுவந்து சேர்க்கவும், தேவையான சாதனங்கள். நீருக்குள் மூழ்கிச் செல்லும் 'சப்மெரின்'கள் (ஆழிமூழ்கிகள்) யுத்தகாலத்தில் கடலோடும் கப்பல்களை வெடி போட்டு நாசமாக்கி வந்தது யாவருமறிந்த விஷயம். ஆனல் அதே ஆழிமூழ்கிகளைக் கொண்டே கடலின் வெகு ஆழப்பிரதேசங்களுக்குப் போய் சோதனையாராய்ச்சிகள் நடத்தி மனிதருடைய விஷயஞானத்தை அதிகப்படுத்துதல் சாத்தியமாகும்.

பண்டைக்காலத்து மாட்டுவண்டிகளை விட பன்மடங்கு வேகத்துடன் செல்லக்கூடிய மோட்டார் வண்டிகள் நன்மையுண்டாக்கும் துறைகளில் உபயோகப் படுத்தக்கூடிய சக்தி சாதனங்களாகும். அவைகளையே கொண்டு கோரயுத்தம் புரிவதும் சாத்தியமென்று சென்ற போரில் விளக்கிக்காண்பித்தனரன்றோ!

நடநத மாபெரும் யுத்தத்தில் மேற்கூறிய சக்தி சாதனங்களைக்கொண்டு எத்தனை கோடி ரூபாய் விலையுள்ள வீடு,

வாசல், நிலபுலன்கள், கோயில்கள், ரயில்வே பாதைகள், விலை மதிக்கொணுத ஞாபகச்சின்னங்கள், இன்னும் எத்தனை லக்ஷக் கணக்கான ஜனங்கள், கால்நடை, உணவுப் பதார்த்தங்கள், நாசமாக்கப்பட்டன என்பதை சற்று நிதானமாகக் கவனித்தலவசியம். எவ்வளவு ஆயிரங்கப்பல்கள் (அவைகளேற்றிச் சென்ற துருப்புகள், மாலுமிகள், சரக்குகள் உள்பட) சமுத்திரத்தில் உடைத்து அமிழ்த்தப் பட்டன! எத்தனை பட்டணங்களும், நகரங்களும் இருந்த இடந்தெரியாமல் ஆகாயவிமானங்களிலிருந்து வீசப்பெற்ற குண்டுகளால், நாசமாக்கப் பெற்று மறைந்தன என்பதையும் சிந்தித்தல் அவசியம்.

உலகப்போக்கும், ருஷிய ஐரோப்பிய தற்கால நிலையும், சமாதான முடிவு விரைவில் நிறைவேறுமல் செய்து வருகிறதைப் பார்த்தால், மற்றுமோர் யுத்தமும் வருமோ என நடுக்குறச் செய்கிறது. அப்படியான விபத்து நேர்ந்தால் உலகமே முழுவதும் சக்தி சாதனங்களின் கொடுமைகளால் அழிந்து போகுமென்பதில் சந்தேகமில்லை. சக்திசாதனவலிவை மனிதன் கையில் ஒப்படைப்பது உசிதமா என்ற கேள்விக்கு இச்சமயம் பலரும் உவந்தளிக்கக்கூடிய பதில் "இல்லவே இல்லை" என்பது மட்டுமில்லாமல் ஜனசமூகத்தின் நன்மையில் ஈடுபடவேண்டில் பொதுவாக மனித இயற்கை விசேஷ மாறுதலடைவதுடன் சாத்விக குணம், சகோதரத்துவம், சதாசாரம், சுசீலம், . தருமகுணம் இவை மேலோங்கிப் பொலியவேண்டும். சக்திசாதனங்களை சமூக மேம்பாட்டுக்கும், உணவுப் பொருள்களைப் பெருக்கச்செய்வதற்கும், ஜனங்களின் சுகாதாரம், பொருளாதாரம் இந்நிலைகளை விருத்தியடையச் செய்வதற்கும் விஞ்ஞானக்கலைகளின் அபிவிருத்திக்கும் ஏற்றவாறு பிரயோகப்படுத்தக் கற்றுக் கொண்டு பொதுஜன க்ஷேமத்தைக் கோரி நடப்பதையே கைப்பிடித்து, மற்றொன்றை மறந்து விடுவதே சிறந்த முறையாகும். உலகிலுள்ள ஜனங்கள் எல்லாரும் இவ்வுயரிய சித்தாந்தத்தை யனுஷ்டித்தால், மஹாத்மா காந்தியடிகள் இடைவிடாது போதித்து வந்த அஹிம்ஸா தர்மத்தின் பயனை சித்தித்து ராம ராஜ்யம் உலகம் முழுவதும் பரிமளித்துப் பேறளிக்கும். சக்தி சாதனங்களும் மேன்மேலும் அதிகரித்து நலம் பயக்கும்.

குடும்ப வாழ்க்கை

—பண்டைய வழக்கம்

[ஸ்ரீமதி ஜானகி கிருஷ்ணன்]

"போது மென்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்றபடி உள்ளத்தைக் கொண்டு திருப்தியுடன் வாழ்ந்தார்கள் நம் முன்னோர்கள். அதனாற்றான் இம்மானிலத்தில் மனிதப் பிறவியும் வேண்டியதுதான் என்று அவர்கள் தர்மத்தைக் காப்பாற்றுவதே வாழ்க்கையின் பலனாக கருதினார்கள். இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்ற சாதனமாக மானிடப்பிறவி சிலாகிக்கப் பட்டுள்ளது. பகுத்தறிவுடன் கூடிய மனிதர்களின் முக்கிய கடமை பிறருக்காக வாழ்வதேயாகும். தனக்காக மட்டுந்தான் என்ற சுயநல மனப்பான்மை சரியானதன்று. மனிதர்கள் இறந்த பின்பும் அவர்களைச் சேர்ந்த விஷயம் என்பது "நல்லோர்" "தீயோர்" என்ற இரண்டு சொற்கள் தான். "தோன்றிற் புகழோடு தோன்றுக." எனவே மனிதப் பிறவிக்கு சிறப்பு எதுவெனில் புகழே. ஏனெனில் மனிதனுடைய உடல் அழிந்த பின்னும் புகழ் அழியாத தன்மையாலேதான் இல்லற தர்மத்தை ஒழுங்காக பரிபாலித்து நற்பயனை அடைய முடியும் என்பது பெரியோர்கள் வாக்கு.

தர்மத்தைக் காப்பாற்றி பேரும் புகழும் அடைவதே சிறந்த மார்க்கம். அத்தகைய புகழை தாம் மட்டும் நிலைநாட்டாது தம்மை சேர்ந்தார்க்கும் பரவவேண்டுமென விரும்புவது நல்லோர் தன்மை. காக்கையின் சிறந்தகுணமான இது, நல்லார் மாட்டும் உளதாகும். ஒரு பழத்தை அடைந்தாலும் பலர்க்கும் பகிர்ந்து கொடுப்பது இவர் தன்மை. தான் மட்டும் அநுபவிப்பது கீழோர் தன்மை. சுயநலத்தையே கருதும் இத்தன்மை மேல்நாட்டார் கண்ணே காணப்பட்டு இப்போது நம்மையும் அக்குணம் தன் வயமாக்கிவிட்டது. குழாம், கூட்டுக் குடும்பம் என்ற இவை போன்ற ஏற்பாட்டை விரும்பி வந்தது நம் நாடு பண்டைய காலத்தில். பெரியோர் சொல் பலர் கேட்டல் என்னும் பெருமை வாய்ந்திருந்தது இப்பாரத நாடு. புஜபலம் பெரிதா? பந்து பலம் பெரிதா என்ற கேள்விக்கு விடை ஸ்ரீராமபிரான் நடையில் காட்டியுள்ளார். புஜபலம் யாவற்றையும், அஸ்திர சஸ்திரங்களையும் முதல் நாள் போரில் இழந்து கடன்

பட்டார் நெஞ்சம்போல் கலங்கி நின்ற இராவணனை 'இன்று போய் நாளைவா' என்று கருணைக்கடலாகிய இராமன் கூறியது யாது மாட்டு என நினைப்பின், இவன் சென்று பந்துக்களின் பலத்தை நாடின் அவர்கள் இவனுக்கு புத்தி போதிப்பர் என் பதேயாம்.

எங்கள் சேனை பெருத்தது என்பது பந்துக்கள் கூட்டத்தைக் குறிக்கும் இராவணாதிகள், துரியோதனாதிகள் என்ற சொற்கள் அவர்கள் குடும்பத்தைக் குறிப்பது போல், எரனுகுளம் இராமஸாமி கூட்டம், செங்கோட்டை இராமையாசேரம், பாளையங் கோட்டை பத்மநாபன் கூட்டத்தார் என்று திருநெல்வேலிக்கும் அதற்கடுத்த பிரதேசங்களிலும், குடும்பத்து பெயரைக் குறித்தே பேசுவது வழக்கம். அதுபோல் ஆந்திர தேசத்தார் "மீ இன்டி பேரேமி" என்று ஒருவருக் கொருவர் கேட்டுக் கொள்வதும், "ஓஹோ! தாங்கள் மண்டலம் கும்பலைச் சேர்ந்தவரா! ராம சுப்ரமண்யம் சேரமா? மகாவிசேஷ மாச்சு. உங்கள் தாத்தா பெயர் சொன்னால் தெரியாதவர் இந்த நகரத்திலேயே கிடையாதே" என்று சொல்வார்கள். இதற்கு காரணம் நம் முன்னோர் ஒன்று கூடி குழுமி வாழ்ந்ததின் பயன்தான்.

உலக முழுவதும் பரவியுள்ள பரமாத்மா ஒவ்வோர் ஜீவனுக்குள்ளும் குடிகொண்டுள்ளார் என்பதும், ஆன்ம கோடிகள் மனதில் குடி கொண்டுள்ள பரமாத்மா உடலை விட்டு கடவுளுடன் கலக்க சதாபிரயத்தனிக்கிறது என்பதும் ஹிந்துக்களின் நம்பிக்கை. உலகில் உள்ளவரை தருமத்தைக் காப்பாற்றி கடமையினின்று தவறாமல் இல்லறத்தை செவ் வனே நடத்தி நற்கதியடையவே முன்னோர்கள் கடைபிடித்த வழி. இருக்கிறவரை எல்லாருடன் கூடி வாழ்ந்து பந்து வர்க் கங்களை தாங்கி உதவி செய்து புகழும் பேருமாக வாழ்வதே பண்டைய சிறந்த மார்க்கம். சாயுஜ்ய பதவியையடைய ஒவ் வொரு மனிதனும் தன் முயற்சியால் மட்டுமே அடையக்கூடிய தாயினும் அதற்கு சாதனம் நாம் செய்யும் தருமம் எனப்படும் நற்கருமத்திலேயே இருக்கிறது. இவ்வுலக வாழ்வின் அற்ப சுகத்தை எல்லாருடனும் சேர்ந்து பகிர்ந்து அனுபவிப்பது சுலபமே. நான், எனது, என்பதைவிட நாம், எமது என்று சொல்வது எவ்வளவு பெருமை வாய்ந்ததாயிருக்கிறது

படிப்போ, புத்தியோ அதன் பலனால் சம்பாதித்த ஐசுவர்யமோ, அப்பொருளால் அடையக்கூடிய உலக சுகமோ யாவும் ஒரே பான்மையாயும், அளவாகவும் பகிர்ந்து கொடுக்கப்படவில்லை. சிவிகை ஏறுபவன் ஒருவன், தாங்கிச் செல்பவன் மற்றொருவன்; அதிரூபவான் ஒருவன், குரூபி பின்னொருவன்; தமையன் சங்கீத காலநிதி என்றால் அவன் தம்பி அதற்கு நேர்விரோதமாக ஞான சூன்யமாகிறான்! இவ்விதம் உள்ளது மாயா உலகம். அநியாயமா? அல்லவே அல்ல. நமது மதம் இதற்கு இடங் கொடுக்குமா? எல்லாம் வினைப்பயன். தினை விதைத்தவன் தினை அறுக்கிறான். வினை விதைத்தவன் வினை அறுக்கிறான். அவனவன் செய்த பாப புண்யங்களுக் கேற்றவாறு சுகதுக்கம் ஏற்படுகிறது. நல்ல பதவியில் இருப்பவர்கள் பலருக்கும் கொடுத்து உதவிசெய்து தானும் இன்புறுதல் நன்று. உண்டசுகம் உண்டவனுக்கே தெரியும். கண்டசுகம் (கடவுளை) கண்டவனுக்கே தெரியும்.

ஒருவர் ஆயிரமாயிரமாக பொருள் திரட்டி ஏக குடும்பியாய், குடும்பத் தலைவனாகிய பிதாவின் கையில் பொருளை சேர்ப்பித்து, உடன்பிறந்தார், பெற்றோர்கள், யாவரையும் கூட வைத்து உண்டு, உடுத்தி அநுபவித்தல் எத்தனை சுகம். தந்தைக்கும் பெருமையாயிருக்கும். மேடு பள்ளங்களை நிரப்பி ஒழுங்காக்கி யாவருக்கும் பலனைக் கொடுக்கும் மழை ஜலம் போல், ஏராளமாக தலைவன் பொருள் கூட்டி தன்னைச் சார்ந்தோர் யாவருக்கும் பக்ஷபாதமின்றி அளிக்கும் குணமே குணமாகும்.

கோடி சீமானா யிருந்தாலும் சமையல் முதலிய குடும்ப காரியம் வீட்டு ஸ்திரிகள் செய்வார்களே யன்றி வேலையாட்கள் வைக்கும் வழக்கமே கிடையாது. விளையும் தானியங்களை சேகரித்து ஆண்டுமுடிய பத்திரமாக சேமித்து, விருந்தினர்களை உபசரித்து, அனைவரும் ஒற்றுமையாக குடும்ப நிர்வாகம் செய்து, சந்தோஷமாகவும் சீரும் சிறப்புமான வாழ்க்கையை ஏக குடும்பமாக இருந்து வாழ்ந்தனர். சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை என்றும், அதுவே பலம் என்றும், நலம் என்றும் கருதினர்.

சுகாதாரக் கல்வி

(த. ந. ஸ்ரீ. ராகவாச்சாரி)

> ஆண், பெண் இருவருக்கும் ஒரே மாதிரி கல்வி இருக்கக் கூடாது. பெண் கல்வியை மாற்றி அமைக்க வேண்டும். 'பெண் கல்வி திட்டம்' என்ற தலைப்பில் ஒரு தர்க்கத்தை அடுத்தத் திலகத்திலிருந்து ஆரம்பிப்போம். அதில் கலந்துகொள்ள எல்லா வாசர்களுக்கும் உரிமையுண்டு. சுகாதாரக் கல்வி முறையைப் பற்றி இந்த இதழில் கவனிப்போம்.

நமது நாட்டில் ஆங்கிலேயர் ராஜ்யபாரம் வகித்து நடத்திய பல வருஷங்களிலும் நமது பெண்கள், பிள்ளைகள் எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி, மத்தியதரக்கல்வி, உயர்தரக்கல்வி, தொழில் முறைகட்கான கல்வி ஆகிய பல கல்வி முறைகளை அவர்களது ஆட்சியின் சவுகரியங்களுக்கேற்றவாறு திட்டஞ் செய்து பயில்வித்தனர். இத்தகைய பலவித கல்விகளையும் பயின்று மாணக்கர்கள் படிப்பு முடிந்து திருப்புகையில் சுகாதார முறைகளுக்கு முரணான பழக்கவழக்கங்களைச் செவ்வனே கற்றும், கடைப்பிடித்தும், தேக சவுக்கிய நிலை குன்றியும் வீடு சேர்வதை நாம் பார்த்திருக்கிறோம். பெண்களுக்கேற்ற பிரத்தியேகக் கல்வி முறைகள் நிருமாணிக்கப் படவில்லை. காலையில் ஒன்பது மணி சுமாருக்கும் மாலையில் ஐந்து அடித்தவுடனும் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று திரும்பும் சிறுமியர்களது நீட்டிய இரு கரங்களின் மேல் அடுக்கப்பெற்ற புஸ்தகங்கள், நோட் புஸ்தகங்கள், முழங்கையில் தொங்கும் சோற்று மூட்டை, இடது உள்ளங்கையில் வைத்து விரல்களால் பிடித்துக் கொள்ளப்பெற்ற மைக்கூடு, இவைகளைத் தூக்கக் முடியாமலும் அடுக்கப்பெற்ற புத்தகக் குவியல் முன்னே எதிரில் வருபவர்களைப் பார்க்கமுடியாது கண்களில் பாதியை மூடியிருக்கும் இந்தக் காட்சி சாதாரணமாக சென்னை நகரில் மட்டுமல்ல, மாகாணத்தில் பள்ளிக்கூடமிருக்கும் இடங்கள் எல்லாவற்றிலுமே காணப்படும் காட்சி. பள்ளிக்கூடத்திற்குள் சென்று வகுப்பின் மேஜையின்மேல் இச்சுமைகளை இறக்கிப் பல நிமிஷங்கள் வரையில் அப்பெண்களின் கைகள் மரத்துப்போயும், நோவெடுத்தது குறையாமலும் இருக்கும். இது என்ன படிப்போ தெரியவில்லை. பிரதிதினமும் இக்குழந்தைகள் வீடு சேர்ந்ததும், மறுநாள் பள்ளிக்கூடம் போனவுடன் உபாத்தியாடரிடம் காட்டவேண்டிய வீட்டு அப்பியாசங்கள் கணக்கற்றவை. பூகோள தேசப்படங்கள் என்ன, கணக்குகள் என்ன, அஸ்ஸைன்மெண்ட் அப்பியாசங்கள் என்ன, தையல் வேலை என்ன, சித்திரப்படக் குறிப்புகள் என்ன, அடே

யப்பா! குழந்தைகளின் இயல்பான தேகசக்தி, மனோசக்திகளுக்கு வெகு அதிகமானவை என்று நான் திடமாகச் சொல்லுவேன்.

சுகாதாரநிலை குழந்தைகளுக்கு எப்படியிருக்கிறது என்பதையும், சுகாதாரப் பழக்கவழக்கங்களையே பள்ளிக்கூடங்களிலும் கையாளும்படி செய்விக்கவேண்டிய பொறுப்பும் தங்களுக்கு உரியது என்பதையும்பற்றி உபாத்தியாயர்களும் பள்ளிக்கூடப் பொறுப்பாளிகளும் கவனித்து நடக்கவேண்டியது அவசியம். அவ்விதம் எல்லாப் பள்ளிக்கூடங்களிலுல் நடக்கிறதா என்பதுதான் கேள்வி. இல்லை என்பது எனது மதிப்பு.

சுகாதாரக் கல்வியும் சரி, மாணவரது தேகநிலையைப்பற்றிய பரிசோதனைகளும் சரி, ஆரம்பப் பாடசாலைகளிலும் அதற்கும் முந்திய **கிண்டர்கார்டன்** பள்ளிக்கூடங்களிலுமே ஆரம்பித்து நடத்தப்படவேண்டும். இரண்டு வயதுக்குமேல் ஆறு வயது வரையிலுள்ள பிராயமே, நன்னெறி நடத்தல், சுகாதார முறைகள் பழகுதல், இவைகட்கு வெகு சிலாக்கியமான பருவமென மேல்நாட்டுப் பயிற்சியாளரும், சுகாதார நிபுணர்களும் ஆராய்ச்சிகளாலும், அனுபவ சித்தத்தாலும் கண்டுபிடித்து சுகர்தாரக் கல்விமுறைகளை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் 'கிண்டர்கார்டன்' வகுப்பிலேயே தொடங்கி அனுஷ்டித்து வரும்படி திட்டம் செய்து இருக்கிறார்கள். அமெரிக்கா கண்டத்தின் ஐக்கிய நாட்டவர்களது சுகாதாரக் கல்வி முறை எல்லோராலும் புகழ்ந்து பாராட்டப்படுகிறது. பொதுஜன நலனும், நாட்டின் அபிவிருத்தி க்ஷேமமும், சிறு குழந்தைகளின் தேக சௌக்கிய நிலையை சதா கவனித்து, நற்பழக்கங்களை யவர்கட்கு புகட்டி வந்தால் மட்டும்தான் ஓங்கி நிலைநிற்கும் என்பது அவர்களது திடநம்பிக்கையாகும். இளம்பிராயத்திலேதான், சுகாதாரப் பழக்கவழக்கங்களும், அவைகள் வேரூன்றி நிலைக்கக்கூடிய மனோரதமும், விவேகமும் குழந்தைகளுக்கு ஏற்படுமாம். ஏழு எட்டு வயதுக்குமேல் நற்பழக்கக்களைக் கற்றுக் கொள்வதும் கெட்ட பழக்கங்களை விடுவதும் சிரம சாத்தியமான காரியம். மேலே கூறிய நற்பருவகாலத்தில் (2 முதல் ஆறு வயது முடிய) குழந்தைகளைப் பெற்றோரும், கல்வி பயிற்றுவோரும் தக்கவாறு கவனித்து நல்வழியில் செலுத்தினால் அக்குழந்தைகள் "நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமு"மென ஆரோக்கிய சரீர வளர்ச்சியடைந்து மேம்பாடடைவார்கள். கவனியாது விடப்பட்ட குழந்தைகள் போஷாக்குக் குறைவினாலும், சரியான ஆகாரங்களை வேளா வேளையில் சாப்பிடாததாலும், அழுக்கு, மண், குப்பைகளுள்ள இடங்களிலுங்கூட விளையாடுவதாலும், கெட்டப் பழக்கங்களைக் கையாடுவதாலும் **ரிக்கெட்ஸ்** (கணச்சூடு என்று சாதாரணமாய் நாம் சொல்லுகிற நோய்) காசநோய்கான ஆஸ்பதமான சுவாச கோசங்களைப் பற்றிய சிறு நோய்கள் இவைகட்குட்படுவார்கள். ஆகவே சரிவரக் குழந்தைகள் வளர்ந்து, நல்ல பழக்கங்களையே பழகி வருவதற்கு அவசியமான நிபந்தனைகளும்

12932

சந்தர்ப்பங்களும், என்னவெனில் அவர்களுக்குத் தேவையான அளவுக்கு அதிகமாகவே சுத்தமான காற்று, சூரியவெளிச்சம், விளையாட்டுகள், போதிய தக்க உணவு இவைகளைச் சரிவர பராமரித்து அவர்கட்குப் பயன்படச்செய்யக்கூடியன ஸ்தாபனங்களும், ஸ்தாபனக்காரிய பொறுப்பாளிகளும்தான். பத்து பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட பள்ளிக்கூட மாணவர் மாணவிகள் பலரிடம் காணப்படும் பல சரீரக் குறைபாடுகளும், குரூப விகாரங்களும், அங்கச் சீர்கேடுகளும், இளம்பிராயத்திலே கவனக் குறைவினால் ஏற்பட்டவை.

இவைகளை அப்பால் திருத்தியமைக்கப் பிரயத்தனப்படுவதைக் காட்டிலும் முன்ஜாக்கிரதையுடன் இளம்பருவத்தில் நல்வழியில் வளர்த்துக் கவனிப்பது மேலல்லவா? முள்ளால் போவதைக் கோடாரி கொண்டல்லவோ வெட்டவேண்டி வருகிறது?

நமது நாட்டில் சில வருஷங்களாகத்தான் சுகாதாரக் கல்வியைப்பற்றி ஒரு உணர்ச்சி ஏற்பட்டு அதன் நிமித்தம் சில மாகாணங்களில் பள்ளிக்கூட மாணவர்களை வைத்தியர்களைக் கொண்டு வருஷத்திற்கொரு முறையோ, இருமுறையோ பரிசோதிக்கச் செய்யும் ஒரு ஏற்பாடு சில பள்ளிக்கூடங்களில் நமது மகாணத்தில் கையாளப்பட்டு வந்து, அதுவும் பிறகு பலவிடங்களில் நின்றுவிட்டது. இவ்வேற்பாட்டில் விசேஷ நன்மை எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஏற்பட்டிருக்கவும் முடியாது. ஏனெனில், "இந்தப் பையனுக்குப் பற்கள் சரியாயில்லை. சொத்தைப் பல் இரண்டு இருக்கிறது. இன்னொரு பையனுக்குக் கண்பார்வை சரியில்லை. இந்தப் பெண்ணுக்குக் கணச்சூட்டால் சுவாசாசயம் சரிவர வேலை செய்யவில்லை" என்றெல்லாம் டாக்டர் பரிசோதித்து எழுதிவைக்கிறார். இது என்ன பிரயோஜனம்? மாணவ மாணவிகளின் பெற்றோர்களில் பெரும்பாலர் இந்த டாக்டர் அறிக்கையைப் பொருட்படுத்துவதில்லை. கவனிப்பதுமில்லை. கவனித்தாலும் நிவர்த்திக்கப் போதிய பணமும் கையில் இருப்பதில்லை. மாணவ மாணவியரிடம் கண்ட தேக ஆரோக்கியக் குறைபாடுகளை உடனே நிவர்த்திக்கவேண்டிய ஏற்பாடுகளும் கூடவே இருந்தாலல்லது டாக்டர் பரீக்ஷை செய்தென்ன பயன்? டாக்டருக்குப் பள்ளிக்கூடத்திலிருந்து கொடுக்கிற பணச்செலவு வீண்தானன்றோ? மேல்நாட்டு முறைகளைப் பற்றியும், அவைகளில் நமது நாட்டிற்கும், நமது ஐதிகப்பாங்குகட்கும், நமது சிக்கன முறைகட்கும் ஏற்றவாறு எவ்வெவைகளைக் கையாள வேண்டும் என்பதைப் பற்றியும் சற்று விவரமாக அடுத்த கட்டுரையில் எடுத்துரைப்பேன். நமது தற்போதையக் கல்வி முறைகள் ஆண், பெண் இருவர்கட்கும் ஒரே மாதிரியிருப்பது சரியல்ல; பெண்களுக்குகந்ததாகவும், அவர்களது மனோநிலை, பகுத்தறிவு, விவேகம், கடமைகள் இவைகட்கேற்றவாறும் பெண் கல்வி மாற்றியமைத்தல் நன்று.

பெண்களின் சமூக அந்தஸ்து

(தராசு)

சரித்திரத்தைச் சரியான கோணத்திலிருந்து ஆராய்ந்து பார்ப்போமேயாளுல், ஆண்களைப்போலவே பெண்களும் சரித்திரத்துக்கு ஆதாரமாக இருந்திருக்கிருர்கள் என்ற உண்மை புலப்படும். பெண்களை மூலப்பொருள்களாகவும், ஆண்களை பண்பட்ட பொருளாகவும் கூறலாமென மெகாலே என்ற ஆறிஞர் கூறியுள்ளார். மனித சமூகத்தில் பாதி ஜனத்தொகைப் பெண்களாகவே இருக்கும்போது, இவர்களுடைய சமூக அந்தஸ்து தாழ்மையுற்றிருப்பதானது மனிதனுடைய நாகரீகத்தைக் கேவலப்படுத்துவதுபோல் தோன்றுகிறது.

நாகரீகத்தில் சிறந்தவர்கள் ஆண்கள்தான் என்றும், அவர்களுக்குப் பின்தான் பெண்கள் நாகரீகத்தை அறிந்தார்கள் என்றும் சிலர் வாதாடுகிருர்கள். இந்த ஒரு காரணத்தைக் கொண்டே சரித்திர ஆராய்ச்சியாளர்கள் பெண்களுக்கு ஒரு முக்கிய ஸ்தானம் கொடுக்க விரும்பவில்லை என்று தோன்றுகிறது. மணம் செய்யும் முறை, ஒழுக்கநிலை முதலியவற்றைப் பற்றி பேசும்போது சில சந்தர்ப்பங்களில் அரைமனதுடன் பெண்களுக்கு பெருமையளிக்க முற்படுவார்கள் ஆண்கள். ஆண்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டதைப்போல் பெண்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யாததுதான் சில குறைபாடுகளுக்குக் காரணமாக அமைத்துவிட்டது. இது உலகம் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும். ஆண்களின் சரித்திரம் என்று கூறும்போது அதில் பெண்களின் சரித்திரமும் கலந்துதானிருக்கவேண்டும்; இக்காரணத்தை ஏனே புலவர்கள் மறுக்கிருர்கள். இருவரும் மனித சிருஷ்டிதானே. இருவருக்கும் வாழ்க்கை ஒரே வழிதானே, என்ற இயற்கை விஷயங்கள்கூட தாமாகவே விலகிக் கொண்டு விட்டனவாவென்று ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது.

பண்டைக் காலத்தில், அதாவது வெகு காலத்திற்கு முன்பு மனிதன் மரத்தின் நிழலிலும், குகைகளிலும், ஆற்ளோரங்களிலும் வாழ்ந்தபோதும், காட்டு மிருகங்களுடன் போராடியபோதும் ஆண் பெண் இருவரும் ஒன்ருகவே இருந்ததாக சரித்திரம் கூறுகின்றது. ஆனல் காலவேகமானது கடுமையாக முன்னேறும்போது மனித சமூகமானது வளர்ச்சியடைந்து விவசாயம் போன்ற தொழிலும் அன்னியருடன் போர் தொடுப்பது, கூட்டம் கூட்டமாக பொதுவழிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதுபோன்ற சிறிய நாகரீகங்கள் தோன்றியபோதும் ஆண், பெண் ஆகிய இருவரின் சரித்திரமும் இரண்டாகப் பிரிந்ததென்று கூறவேண்டியிருக்கிறது.

இந்தக்காலம் முதல் பெண்களின் சம அந்தஸ்து வாயளவிலேயே நின்றுவிட்டதாகக் கூறவேண்டும். ஆண், பெண் இருவரின் சரித்திரமும் தனியாகப் பிரிந்ததற்கு நான்கு முக்ய காரணங்களை குறிப்பிட முடியும். 1. பால், வேற்றுமை, 2. யுத்த எண்ணம், 3. பொருளாதார சக்திகள், 4. பொதுப்படையான தத்துவங்கள் என்று கூறவேண்டியிருக்கிறது.

சரீரசம்பந்தமான வேற்றுமைகளைக் கவனிக்கும்போது ஆணை விட பெண் பலஹீனமுடையவள் என்று கூறுவது உண்மையே. தாய்மை என்ற இயற்கைப் பெரும்பொறுப்பு பெண்களுக்கு இருப்பதன் காரணமாகவே இருபாலருக்கும் தனித்தனியான பழக்கவழக்கங்கள் ஏற்பட்டுள்ளன. மனித சமூகமானது வளர்ச்சியடையும் காலத்தில் பல சக்திகளோடும் பல இனத்தாரோடும் போராடவேண்டியிருந்தது. இந்தப் போராட்டங்கள் யாவும் பெண்களின் அந்தஸ்துக்கு பாதகமாகவே அமைந்துவிட்டன. இதனால் பெண்களின் மனோபாவமானது போராட்டத்தை விரும்பவில்லை. இத்துடன் தேக வலிவின்மையும் ஒன்றுசேரும்போது பெண்கள் வெற்றிப் பொருள்களாக கருதப்பட்டுவிட்டாகள். ஆண்களின் போக்கானது போராட்டத்தையே விரும்பியபடியால் பெண்களின் நிலைமை தாழ்ந்துவிட்டது. இதை உலகத்தின் பொதுப்படையாகக் கூறவேண்டும்.

உலகத்தில் தோன்றிய இரு மஹாயுத்தங்களும் பெண் சமூகத்திற்கு ஓரளவு உயர்வு தேடிக் கொடுத்ததென்று சொல்லவேண்டும். பெரும்பாலான ஆண்கள் யுத்தத்தில் ஈடுபட்டதினாலும், நடுத்தரக் குடும்பங்களின் பொருளாதாரத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள யுத்தம் உதவி புரிந்ததாலும், பெண்களின் சமூக முன்னேற்றம் அவசியமாயிற்று. இந்த சமயத்தில் ஆண்களும் சிறிதளவு உதவி புரிந்தார்கள். தொழில்களில் ஈடுபடுவதில் பெண்கள் குறைவான ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு, அதிகமான உழைப்பைக் கொடுக்க முன்வந்ததானது, ஆண்களை ஆக்கிரமிப்பானவராகச் செய்து விட்டது. பெண்களின் பலவீனத்தை ஆண்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள், பொதுப்படையான தத்துவங்களில் சட்டம், ஒழுக்கம், சொத்துரிமை ஆகியவற்றில் பெண்களின் அந்தஸ்து குறைந்துவிட்டதென்று கூறவேண்டும். பண்டைய காலத்திலிருந்து இடைக்காலம் வரையில் பெண்கள் தாழ்வுற்றிருந்தார்கள் என்பது சரித்திரங்கண்ட உண்மையாகும்.

ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எகிப்து தேசத்தில் ஆண்களைப்போலவே பெண்களும் எல்லாத் துறையிலும் சம அந்தஸ்து பெற்றிருந்திருக்கிறார்கள். பெண்கள் மணமானவராயிருந்தாலும், அல்லது மணமாகாதவராயிருந்தாலும் சொத்துரிமையில் விசேஷ அந்தஸ்து அளிக்கப்பட்டிருக்கிறது. விபசாரம் செய்த ஆண், பெண் இருபாலரும் நீரில் மூழ்கடிக்கப்பட்டார்கள் என்ற சரித்திரமே சம அந்தஸ்தை நன்கு விளக்குகின்றது. மூவாயிரம் வருஷங்களுக்கு

முன்புகூட கிரீஸ் தேசத்தில் பெண்களுக்கு சம உரிமை யளிக்கப்பட்டிருக்கிறது. அதன் பிறகு காலத்தின் கோலத்துக்குத் தக்கபடி பெண்களுக்குண்டான உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டுள்ளன. மக்களின் பாதுகாப்பில்கூட எவ்வித உரிமையும் பெண்களுக்குக் கொடுக்க கிரேக்கர் விரும்பாத காலமும் இருந்திருக்கிறது. இந்த விவரத்தை கிரீஸ் சரித்திரம் கூறியபோதிலும், பெண்களை மேன்மையாக மதிக்கவேண்டியது நாகரீக கிரேக்க மக்களின் கடமையென்பதையும் கூறத்தவறவில்லை. ரோம சாம்ராஜ்யத்தில் பெண்களுக்கு சட்டபூர்வமாக எல்லா உரிமைகளும் அளிக்கபட்டிருந்தன. ரோம் ஸெனட்டில் ஸோயேமியா என்ற பெண்மணி அங்கத்தினராக இருந்து பல சட்டங்களை இயற்ற பேருதவி புரிந்துள்ளார் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். ரோம ராஜியத்தின் பிற்காலத்தில் பெண்களின் அந்தஸ்து குறைந்துவிட்டது. பாரதக் கண்டத்தைப் பொறுத்தவரையில், வேத காலத்திலும் பெண்களுக்கு ஆண்களைப்போல் எல்லா உரிமைகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. புராண காலத்தில் பெண்களுக்குரிய ஸ்தானத்தைக் கொடுக்க அக்காலத்தவர்கள் விரும்பவில்லை என்பதும் ஒரு உண்மையாகும். புராதனப் பெருமை வாய்ந்த சீன தேசத்தில்கூட பெண்களின் அந்தஸ்து படிப்படியாகக் குறைந்துவிட்டதெனக் கூறவேண்டும்.

இடைக்காலத்தில் இந்தியா முதலிய கீழ்திசை நாடுகளில் இல்லறத்தைக் குறைகூறியும், துறவறத்தைப் பெருமைப்படுத்தியும் பேசலானார்கள். இந்த இயக்கம் மேனாடுகளில்கூட பரவ ஆரம்பித்ததென்று தெரியவருகிறது, மனிதர்களுக்கு பிரம்மசர்யம் மிக முக்யமென்றும் அது கெடுவதற்கு பெண்கள்தான் காரணமென்றும் கூறியதின் பயனாய் பெண்கள் பல அநீதிகளுக்குட்படவேண்டியதாயிற்று. மேனாடுகளிலுள்ள மடங்களில் பாதிரிகளாக வர விரும்புவோர் பிரம்மசாரிகளாக இருக்கவேண்டுமென்றும், அது தான் மனிதனின் முன்னேற்றத்திற்குத் தக்க பாதை யென்றும் பறைசாற்றப்பட்டன. பெண்களெல்லாம் சைத்தானின் சிருஷ்டிகள் என்று தூற்ற முற்பட்டுவிட்டார்கள். இதன் காரணமாக பெண்களும் பலவந்தமாக பிரம்மசர்ய விரதத்தை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. பிரம்மசர்ய விரதத்தில் ஒழுங்காக நடந்து கொண்டவர்களை மடங்களில் அனுமதிப்பதென்று தீர்மானம் செய்தார்கள். இந்த முன்னேற்றம்தான் ஆண் பெண்களின் குடும்ப வாழ்க்கையை புனருத்தாரணம் செய்ததென்று கூறவேண்டும்.

கி.பி. 1200 முதல் 1500 வரையில் பெண்களிடம் கொண்ட காதலுக்காக மணம்புரிந்து கொண்டவர்கள் யுத்தகளத்திற்குக் கூட செல்ல நேர்ந்தது. யுத்தகளத்தினின்று தங்களுடைய கணவரின் வருகைக்காக பல பெண்கள் காத்திருந்ததாக காவியங்கள் கூறுவதிலிருந்து, பெண்கள் தாழ்மையாகக் கருதப்பட்டதற்குக் கணவர்கள் பிரிந்து சென்றதும் ஒரு காரணமாய் விட்ட

தென்று கூறவேண்டும். இந்த விசித்ரப் போக்கினால் பெண்களுக்கு பல நன்மைகள் தோன்றியதாக ரஸ்கின் கூறுகின்றார். பல தீமைகள் ஏற்பட்டதென்று நாம் முடிவுசெய்ய வேண்டியிருக்கிறது. பலவிதமான தீமைகள் சூழ்ந்து கொண்டபின் பெண்கள் நிலை எவ்வாறிருந்ததென்று கூறுவதற்குத் தனியாக ஒரு புத்தகம் எழுதலாம். நாகரீகத்தில் சிக்குண்ட ஆண்களும், பெண்களும் முன்னேறினார்கள். ஆனால் நாகரீகத்தின் மூலம் பல பெண்கள் வஞ்சிக்கப்பட்டார்கள் என்று கூறவேண்டும்.

பிரஞ்சு தேசத்தில் நடந்த கலகத்திற்குப் பிறகுதான் பெற்றோர்களின் சுதந்திர இயக்கம் உருவாக முடிந்தது. சுதந்திரம், சமத்வம், சகோதரத்வம் போன்ற கொள்கைகள் பெண்களின் விஷயத்திலும் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்று பெற்றோர்கள் போராடினார்கள். இப்போராட்டம் முற்றிலும் வெற்றியளிக்காமல் போனதற்குக் காரணம் தொழிற்புரட்சிதான். பெரிய தொழிற்சாலைகளை நிறுவுவதில் பிரியம் கொண்டவர்களின் முயற்சியினால் பெண்கள் மேற்கொண்டிருந்த சிறு குடிசைத்தொழில்கள் நசிக்கவாரம்பித்தன. இதன் காரணமாகவே பெண்களும் இயந்திர தொழிற்சாலையில் இடம்பெறவாரம்பித்தார்கள். பெண்களிடமுள்ள பலவீனத்தை ஆதாரமாகக் கொண்டு முதலாளிகள் குறைந்த கூலியைக் கொடுத்து அதிக ஊழியத்தைப் பெற்று வந்தனர். இத்தகைய பரிதாப நிலையிலிருந்து பெண்களைக் கை தூக்கி விடுவதற்கு, செல்வாகுள்ள சில பெண்கள் முன்வரவே பெண்மக்களின் சுதந்திர இயக்கம் வலுபெற்றது.

சுதந்தர இயக்கமானது வெற்றிபெற்று வரும்போதே அரசியலிலும் பெண்மக்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். பண்டைய காலத்தில் சம அந்தஸ்து பெற்று வந்த பெண்கள், இடைக்காலத்தில் தாழ்வடைந்த போதிலும், சமீபகாலம் முதற்கொண்டு பெண்களுக்கு சம உரிமை அளிக்க சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. இப்பெரிய இயக்கத்தில் ஆண்களும், ஈடுபட்டுள்ளார்கள் என்று கூற முடிந்தாலும், போதியளவு ஆண்கள் ஈடுபடவில்லையென்று சொல்ல வேண்டும். இதற்குக் காரணம் வறட்டு கௌரவம்தான்; இந்த மூட எண்ணத்தை கைவிட்டால்தான் வருங்காலத்தில் மனித சமூகமானது சரியான முறையில் முன்னேற முடியும்.

பெண்களுக்கு சம அந்தஸ்து கொடுக்கப்படுகிறதென்று கூறும் அரசாங்கம், பெண்களுக்கு அளிக்கும் சமத்வம் சரியானதாவென்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆண்களைப் போலவே பெண்களுக்கும் பஸ்கண்டக்டர் உத்யோகம் கொடுப்பதானது சம அந்தஸ்தை குறிப்பதாகக் கூற முடியாது. பெண் சமூகத்தினரைப் புண்படுத்துவது போலாகும். இத்தகைய சீர்திருத்தங்களைச் செய்வதில் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுமென்பது உண்மையாகையால், சமூகத்தில் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம அந்தஸ்து கொடுப்பதற்கு பலவிதமான வழிகள் இருக்கின்றன.

நாய் சொன்ன கதை

ஆர். கண்ணன் (வயது 11)

வேலம்பட்டி என்னும் ஊரில் அழகப்ப செட்டியார் என்று ஒருவரிருந்தார். அவருக்கு இரண்டு பிள்ளைகளுண்டு. ஒருவன் பெயர் ராமு, மற்றவன் பெயர் கோபு. அவர்கள் ஒருநாள் ஒரு சோலை வழியாய்ப் போய்க்கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு கருப்பு நாய் அவர்கள் பின்னால் ஓடி வந்தது.

கோபுவுக்கு நாயைக் கண்டால் பிடிக்காது. அதனால், அவன் ஓர் கல்லை எடுத்து நாயை அடித்தான். அதைக்கண்ட நாய், "என்னை அடிக்காதிருப்பீர்களானால், நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லுவேன்," என்றது. அவர்கள் நாய்க்கு ரொட்டித் துண்டு, பழம் முதலியவற்றைக் கொடுத்து, "கதை சொல்லு" என்றார்கள்.

கீழ்கண்ட கதையை நாய் சொல்லிற்று.

என் தகப்பனார், ஒரு பணக்காரர். அவர் பெயர் வேலுசாமி செட்டியார். ஒருநாள் நான் இச்சோலை வழியாகப் போய்க்கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் ஒரு முனிவர் போய்க்கொண்டிருந்தார். நான் அவர்மேல், கல்லெறிந்தேன். அவர் கோபங்கொண்டு, என்னை நாயாகும்படி சபித்து விட்டார்.

நான் அழுதுகொண்டே, "சுவாமீ! நான் அறியாமையினால் செய்த பிழையை மன்னித்து, இச்சாபம் நீங்கும் வழியைச் சொல்லவேண்டும்" என்றேன்.

அவர், "உன்னுடைய கதையை யார் கேட்கிறாரோ, அவரிடம், மூன்று குட்டு வாங்கு, அப்பொழுது உன் சுயவுருவை யடைவாய்" என்றார்.

"ஆதலால், இப்பொழுது என் கதையை கேட்டீர்கள். நீங்கள் என் தலையில் மூன்று குட்டு குட்டுங்கள்" என்றது.

உடனே, கோபு அதன் தலையில் மூன்று குட்டு குட்டினன். நாய் மறைந்தது. சுகமாய் தூங்கிக்கொண்டிருந்த ராமு, "அ....ம்....மா! என்னை கோபு குட்டுகிறான்" என்று சொல்லிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தான்.

குழந்தைகளே! விடுவியுங்கள் பார்க்கலாம்!

1. முழுவதும் ஒரு மரத்தின் பெயராகும்.
நடு எழுத்தை நீக்கினல் ஒரு வள்ளல்.
முதல் எழுத்தை நீக்கினல் விளக்கின் ஒரு பாகம்.
மூன்றெழுத்தாலாகிய இச்சொல்லைக் கண்டுபிடியுங்கள்.

2. முதல் பாகம் இலக்குமி தேவியைக் குறிக்கும்.
2ம் பாகம் ஒரு வேடனைக் குறிக்கும்.
3ம் பாகம் புதுமையைக் குறிக்கும்.
4ம் பாகம் ஊர்.
முழுவதும் ஓர் விஷ்ணு ஸ்தலம்.

3. இது மன்னாதி மன்னர் வசிக்குமிடம்.
மூன்றாவது எழுத்தையும் நான்காவது எழுத்தையும் நீக்கிவிட்டால் ஊர்ந்து செல்லும் ஒரு பிராணி.
முதல் எழுத்தும் கடை எழுத்தும் சேர்ந்தால் தண்ணீரை அடைக்கும் ஒரு சாதனம்.

4. பிடித்தால் விடாது.
நடு எழுத்தை நீக்கினல் ஒரு தின்னும் பதார்த்தம்.
மூன்றெழுத்தாலாகிய இது என்ன?

5. நான்கு எழுத்தினை உடையது.
சமையலில் உதவும் ஒரு சாதனம்.
3ம் எழுத்தை நீக்கினல் ஒரு காட்டு மிருகம்.
முதல், கடை, எழுத்துக்கள் உடலில் ஏற்படும் ஓர் வியாதி
2ம் எழுத்தை நீக்கினல் ஓர் ஊரின் பெயர்.

6. முதற் பாகம் ஓர் நாட்டின் இரட்சகன்.
2ம் பாகம் ஓர் கடவுள்.
3ம் பாகம் பூசாரியில் பூவைக்காணோம்.
முழுவதும் சேர்ந்தால் ஓர் மாபெரும் தலைவர்.

போனல் போகின்றது. முதலில் காணப்படும் சொல்லை நான் விடுவித்துக் காட்டுகிறேன். மற்றவைகளை நீங்களே செய்யுங்கள் பார்க்கலாம்.

இச் சொல் 'பாதிரி' என்பதாகும். எவ்வாறெனில் 'பாதிரி' எனுஞ்சொல் ஓர் மரத்தைக் குறிக்கும்: நடு எழுத்தாகிய 'தி'யை நீக்கினல் 'பாரி' என்ற வள்ளலைக் குறிக்கும். முதல் எழுத்தாகிய 'பா'வை நீக்கினல் விளக்கில் காணப்படும் 'திரி'யைக் குறிக்கும்.

குறிப்பு:—இவைகளின் விடைகளை மற்றொரு பக்கத்தில் தேடிப்பாருங்கள்.

'மலர் மகள்'

காலத்தின் கோலம்

காலம் ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. அதைப்பற்றி நாம் சிந்திப்பதில்லை. அது நம்மை என்ன பாடு படுத்துகிறது என்பதை கீழே பாருங்கள் :—

சிறு குழந்தைகளைப் பாலர்களாகவும், பாலர்களை குமாரர்களாகவும், குமாரர்களை கிழவர்களாகவும் செய்கிறது. கல்லைப் போன்ற உடலை வில்லைப்போல வளைக்கின்றது. கன்னங் கரேரென்றிருந்த மயிரை வெள்ளை வெளேரெனச் செய்கின்றது. காந்தி மேனியை ஓந்தி மேனியாக்கி, சுந்தர மேனியை அந்தரமாக்கி, மீன்விழியை ஊன்விழியாக்கி, சிதேவி போன்றிருந்தவளை மூதேவி போலாக்குகிறது.

—ஒரு மேல்நாட்டுப் பத்திரிகையிலிருந்து.

குழந்தை உள்ளங் கள்ளமறியாது

பள்ளிக்கூடத்திற்கு நாழியாகிவிட்டது. பையன் குடல் தெறிக்க ஓடிக்கொண்டிருந்தான்.

"அழகிய சிறுவனே! எங்கேடா கண்ணு! இத்தனை அவசரம்" என்னும் அன்பு ததும்பும் சொற்கள் அவனைச் சட்டென்று நிறுத்தின. அவன் ஒரு சாணைக்காரன். அவனருகில் ஒரு கூரே இல்லாத கோடாரி கிடந்தது.

"என் அருமைச் செல்வமே உன் முகத்தில் வியர்வை எப்படி ஒழுகுகிறதடா. எங்கே, இப்படி நிழலில் வா"

சிறுவன் திகைத்துப்போனான். அவனிடம் எவரும் இப்படி அன்பொழுகப் பேசியதில்லை. அவன் தகப்பன் "பள்ளிக்கூடம் போக நாழிகையாயிற்று, இன்னும் விளையாடிக் கொண்டிருக்கிறாயா?" என்று தலையில் 'நறுக்'கென்று குட்டியது இன்னும் வலித்துக்கொண்டேயிருந்தது.

"சாப்பிட என்னேரம். சனியனே, சுருக்கத் தின்னூட்டு பள்ளிக்கூடத்துக்கு ஒழியேன்" என்று சிற்றன்னை இறைந்தது அவன் குழந்தை இருதயத்தில் இன்னும் குத்திக் கொண்டேயிருந்தது. அந்தப் பள்ளிக்கூடத்தில்தானென்ன சுகமுண்டா? நொண்டி வாத்தியார் மகா கிராதகன். அடித் தொடையைப் பிடித்து நிமிண்ட ஆரம்பித்தால் இரத்தம் ஒழுகினால்கூட விடமாட்டான்.

"பள்ளிக்கூடத்துக்கு நாழியாய்விட்டது, போகவேண்டும்" என்றான்.

"அந்தப் பள்ளிக்கூடம்தான் தினந்தோறும் இருக்கிறதே. இந்தச் சக்கரத்தைச் சுற்றிப் பார். 'கிறு கிறு,' என்ன தமாஷ்" என்றான் சாணைக்காரன்.

பையன் சக்கரத்தை சுழற்றினான். சாணைக்காரன் கோடாரியைக் கூர்மை செய்துகொண்டே தேனொழுகப் பேசிக்கொண்டிருந்தான்! கைகள் கொப்பளித்தன. ஆனால் பையனால் சாணைக்காரனின் இன்சொல்லின் தளையிலிருந்து விடுவித்துக்கொள்ள முடியவில்லை.

கோடாரி கூராயிற்று. உடனே சாணை பிடிப்போன் முகம் கடுத்தது. "தடிக்கழுதை, பள்ளிக்கூடத்துக்கு நாழிகை ஆகவில்லையா. இன்னும் விளையாடிக்கொண்டிருக்கிறாயா, ஓடு இல்லாவிட்டரல் வாத்தியாரிடம் நானே இழுத்துக் கொண்டு போவேன்."

பையன் ஒருகணம் விழித்தான். மறுநிமிடம் சாணை பிடிப்பவன் கையை ஓங்கவே ஓட்டம் பிடித்தான்.

விடைகள்

2. ஸ்ரீ வில்லிபுத்தூர்.
3. அரண்மனை.
4. அட்டை.
5. கரண்டி,
6. ராஜகோபாலச்சாரியார்.

"ஆத்ம ஜோதி"

அரிய செந்தமிழ் மாதப் பத்திரிகை

கௌரவ ஆசிரியர்: க. இராமசந்திரன்
பதிப்பாசிரியர்: நா. முத்தையா

உயர்ந்த கருத்துக்களைத் தாங்கி உலக மாந்தரை உய்விக்கும் ஒரே லக்ஷியத்தை உடைய இப்பத்திரிகை மனதுக்குச் சாந்தியளித்து ஒருமையை வளர்த்து, அழியா உயர் வாழ்வில் மனதைச் செலுத்த உத்தமமான வழிகாட்டி.

வருடச் சந்தா ரூபாய் 3/-

கிடைக்குமிடம்: 79/6, டோலஸ்பாகே ரோட்,
காவல்பிட்டி, சிலோன்.

குற்றவாளியின் உள்ளம்

(ஸ்ரீமதி ராஜம் நரஸிம்மன்)

"வசந்தா"

"ஏம்மா"

"இந்த மாஸம் வந்த 'குங்குமம்' எங்கேடி?"

"மாடியிலே அப்பா ஆபீஸ் ரூமிலே இருக்கம்மா"

பார்வதி மாடிப்படி ஏறி ஆபீஸ் ரூமிற்குள் நுழைந்தாள். உள்ளே ஒரே இருட்டு. மின்ஸார விளக்கை ஏற்ற, கதவுக்குப் பின்னால் இருக்கும் 'ஸ்விட்சை'ப் போட்டாள். 'பளிச்' என்று வெளிச்சம் தோன்றிற்று. மறுகணம் 'பட்' என்ற சப்தத்துடன் 'பல்பு' 'ப்யூஸ்' ஆகிவிட்டது.

பார்வதியின் உள்ளம் பயத்தால் 'படபட'வென்று அடித்துக்கொண்டது. 'அவர்' வந்தால் என்ன சொல்வாரோ? 'பல்பு' வாங்கிப் போட்டு, இரண்டு நாட்கள்கூட ஆகவில்லையே.

பார்வதியின் மனதில் ஒரு யோசனை தோன்றிற்று. யாரும் பார்க்காமல் இருக்கும்போதே அவ்விடத்தை விட்டு மெதுவாக நழுவிவிட்டால்........அறையினின்றும் வெளியே வந்தாள். நல்லவேளை, கூடத்தில் யாருமில்லை. ஓசைப்படாமல் மாடிப்படி இறங்கி பின்கட்டிற்குப் போய்விட்டாள். அப்போதுதான் அவளுக்கு மூச்சு சரிவர வந்தது.

இரவு ஒன்பது மணி இருக்கும். ரகுபதி சர்மா 'கிளப்'பிலிருந்து வீடு திரும்பி வந்தார். வழக்கம்போல வீட்டில் 'கலகலப்பே' இல்லை. கூச்சலும் கும்மாளமும் நிறைந்திருக்க வேண்டியிருக்க நிசப்தமல்லவோ நிலவுகிறது.

"என்னடீ வஸந்தா, என்ன சமாச்சாரம்?" என்று கேட்டார் சர்மா சந்தேகத்துடன்.

"ஒண்ணுமில்லையப்பா. வந்து.....உ.....ம்.....ஆபீஸ் ரூம் 'பல்பு' 'ப்யூஸ்' ஆகிவிட்டது...."

"என்ன, 'ப்யூஸ்' ஆகிவிட்டதா? நேற்றைக்கு முன்

தினம் தானேடீ வாங்கிப் போட்டேன். யாருடைய வேலை இது?''

"எனக்குத் தெரியாது அப்பா ஒண்ணும்''.

"எல்லாம் இந்த கோபுதான் செய்திருப்பான். படவாப் பயல், போனதடவை கூட அவனால்தான் 'பல்பு' 'ப்யூஸ்' ஆனது'',

"நான் ஒண்ணும் செய்யல்லை அப்பா. மத்தியானம் வெளியிலே போனவன் சற்று நேரத்திற்கு முன்னேதான் திரும்பி வந்தேன். வந்ததும் வராததுமாக வஸந்தா விஷயத்தை என்கிட்டே சொன்னாள்''.

"யாரைக் கேட்டாலும் 'எனக்குத் தெரியாது'தான் பதில். பின்னே எப்படித்தான் அது 'ப்யூஸ்' ஆச்சோ. மூன்று ரூபாய் தெண்டம். அது சரி, 'ப்யூஸ்' ஆனதை யார் முதலில் பார்த்துச் சொன்னது?''

அதுவரை உள்ளே இருந்த சந்துரு அவ்விடம் வந்து "நான்தானப்பா பார்த்துச் சொன்னேன். கொஞ்சம் 'டைப்' அடிக்கலாம்னு மாடிக்குப் போய் 'லைட்' போட்டேன். எரியவில்லை. 'டார்ச் லைட்' போட்டுண்டு போய் பார்த்தேன். 'பல்பு; 'ப்யூஸ்' ஆய்க்கிடந்தது'' என்றான்.

"என்னடீ, உனக்கு ஏதாவது தெரியுமா'' என்று கேட்டார் சர்மா அச்சமயம் அவ்விடம் வந்த பார்வதியை.

பார்வதிக்கு 'திக்' என்றது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு "எனக்கென்ன தெரியும். சமையலறை உண்டு நானுண்டு. இப்போ சந்துரு சொன்னதை கேட்டீர்களோன்னோ. அவனுடைய வேலையாகத்தானிருக்கும் எல்லாம்'' என்றாள்.

"அநியாயமாய் என்மேலே பழி போடாதே அம்மா, 'பல்பு ப்யூஸ்' ஆறதுன்னா, 'ஸ்விட்ச்' போட்டதும் பற்றிண்டு 'பட்'னு அணையும். நான் 'ஸ்விட்ச்' போட்டபோதுதான் எரியவே இல்லையே'' என்றான் சந்துரு.

"இப்போ எனக்கு ஞாபகம் வரது அப்பா. ஏழு மணிக்கு நான் எதிராத்து திண்ணையிலே உட்கார்ந்திருந்

தப்போ, மாடி விளக்கு பற்றிண்டு உடனே அண்ணஞ்சதை ஜன்னல் வழியா பார்த்தேன்'' என்றாள் கடைக்குட்டி காமு.

"எனக்கும் இப்போ ஞாபகம் வரது. கடிகாரம் ஏழு மணி அடிச்சிண்டிருந்தப்போ, அம்மா 'குங்குமம்' எங்கேன்னு கேட்டாள். ஆபீஸ் ரூமிலே இருக்குன்னு சொன்னேன்'' என்றாள் வஸந்தா.

"தேவலையே, என்மேலேயே பழி போடவா பார்க்கிறீர்கள்? அலமாரியிலிருந்து 'டார்ச்சு' லைட்டு எடுத்திண்டு போய் தேடிப் பார்த்தேன். கிடைக்கவில்லை 'குங்குமம்'. பேசாமல் திரும்பி வந்துவிட்டேனுக்கும். அன்னிக்கு கோபு பல்பை 'ப்யூஸ்' செய்துவிட்டதிற்கு நீங்கள் சத்தம் போட்டதிலிருந்து, எலெக்டிரிக் லைட் போடுவதையே விட்டுவிட்டேன்'' என்றாள் பார்வதி தைரியமாக.

"டார்ச் லைட்டா? அலமாரியை நான் பூட்டி மத்தியானத்திலிருந்து சாவியை என் சட்டைப்பையிலல்லவா வைத்திண்டிருக்கேன். நீ எப்படி 'டார்ச் லைட்' எடுத்திருக்க முடியும்'' என்றான் சந்துரு.

பார்வதிக்கு இடிவிழுந்தது போலாய்விட்டது. தேகம் 'குப்' என வியர்த்தது. "இந்தப் பிசாசுகள் இப்படி என் வயிற்றெறிச்சலை கிளப்புகிறதுகள். நீங்கள் வேடிக்கை பார்த்திண்டிருக்கேளே'' என்றாள் சர்மாவிடம் அழாக்குறையாக.

சர்மாவின் மனம் இளகிவிட்டது. "கழுதைகளா பரீக்ஷைக்கு இன்னும் ஒரு வாரம்கூட இல்லை. படிக்காமல் கொட்டமடிக்கிறீர்களா'' என்று ஒரு அதட்டு போட்டார்.

'கப்சிப்' என்று எல்லோரும் அடங்கி, அவ்விடம் விட்டகன்றனர். கூடத்தில் சர்மாவும் பார்வதியும் மட்டுமே இருந்தனர். சர்மா பார்வதியின் அருகில் சென்று "அசடே, குற்றத்தை முதலிலேயே ஒப்புக்கொண்டிருந்தால், இத்தனை தூரத்திற்கு வந்திருக்காதே. ஒரு பொய் சொல்லப்போய் அதை மறைக்க எத்தனை பொய் சொல்ல வேண்டியிருந்தது'' என்றார். அவருடைய குரலில் இரக்கமும் அனுதாபமும் தொனித்தன. பார்வதியின் கண்களில் நீர் மல்கின.

அவனிப் பூந்தோட்டத்து ஞானி

சாது ஸ்ரீ முருகதாஸ்

உலகம் என்பது எல்லாம் நிறைந்தது. இது ஓர் அழகிய பூந்தோட்டம். பலர் வருவார், போவார், இருப்பார், பலவித காட்சிகளும் பல இடங்களில் பலவிதமாக அனுபவிக்கப்படும். வருவார் போவார் நிலைக்குத்தக்க பல ஆச்சரியமான விஷயங்களும், வெறுக்கத் தக்கவைகளும், இங்கே இருக்கும்.

தோட்டத்தில் யார் யாருக்கு எந்த இடத்தில் எதை அனுபவிக்க அனுமதிச் சீட்டு உண்டோ, அந்த சீட்டுப்படி அங்குள்ள காவலாளி கொண்டு காட்டி அனுபவிக்கச் செய்வான். மாறு செய்தவர், மீறி நடப்பவர், சீட்டு இல்லாமல் உரிமையற்ற பொருள்களை அனுபவிக்க ஆசை கொள்பவர்கள் ஆகியவர்களை தண்டிக்கும் உரிமையும் இக் காவலாளிக்கு உண்டு.

எதையும் வெறுக்கவோ, அன்புகொண்டு எடுக்கவோ, சலன புத்தியோ, இன்றி எல்லா வற்றிற்கும் தலைவனும், முதலாளியுமான தோட்ட அதிகாரியிடம் அசைக்க முடியாத நட்புக்கொள்ளத் தெரிந்தவர்கள் காவலாளியிடம் தனக்குத் தோட்டத்தில் தேவையானதொன்றுமில்லை, தலைவனையே காணவேண்டும், என்பதை தெரிவித்தால், தலைவனிடம் சேர்க்கப்படுவார். அவன் (தலைவன்) எல்லா காட்சிகளையும் காணவும், தனக்கும், நமக்கும், பேதமற்ற உறவையும் தந்து, பற்றற்று, அனுபவ ஆசையற்று போகும்படி அத்தோட்டத்தின்உண்மை நிலையை விளக்கி, வீண் ஆசையும், ஏமாற்றமும், மயக்கமுமின்றி ஆனந்தமாக தன்னுடன் வாழ வைப்பான்.

''யாமொதிய கல்வியும், எம்மறிவும்,
தாமேபெற, வேலவர் தந்ததினால்
பூமேறு மயல்போயற மெய்ப்புணர்வீர்
நாமேல் நடவீர், நடவீர் இனியே''

என்ற தத்துவத்தைத் துறந்தவர் அவனித் தோட்டத்துள்ளே ஒன்றையும் அனுபவிக்க முடியாது. கஷ்டப்பட்டு திண்டாடுவார்கள். திருப்தி நிறை உள்ளத்துடன் ஒன்றிலும் பற்றின்றி, ''எல்லாம் அவன் செயல், யாதும் அவன் பொருள்'' என்று ஆசையற்று, அவனுக்காக, அவன் தந்ததில் வாழ்பவர், உலகம் எந்த நிலையில் மாறினும், மாறுத இன்பப் படுவார்கள், என்ற மேற்கண்ட மேலான தத்துவங்களை உணர்ந்து ஒன்றிலுங் குற்றங் காணுது நிந்தை செய்

யாது, வாழ்பவனே ஞானி. "காமாலை கண்ணுக்குப் பார்த்ததெல்லாம் மஞ்சள். கருணை பண்பு கொண்ட கண்ணில் காண்பதெல்லாங் கடவுள்" என்பது ஓர் வாக்கு.

மனிதன் இந்திரியங்களுக்குத் தலைவனான மனத்தை அலங்காரத்துக்கு அடிமைப்படுத்தாது அன்புக்கு அடிமைப்படுத்தி, எங்கும் நிறைந்த அன்பை யுண்டு அதற்கு இந்திரிங்களை சேவை செய்யப் பழக்கினால், கை, சொல், பார்வை, நுகர்வு, கேள்வி ஆகிய ஐந்து இந்திரியங்களின் செய்கை வாயிலாக வெளிக்கிளம்பும் ஆசை அவனிப் பூந்தோட்டத்தை நோக்கிப் பாய்ந்து இன்பதுன்பம் இறப்பு பிறப்புக்களுக்கு ஏதுவான வினைகளை செய்யாமல் அவனி எங்கும் எல்லாவற்றையும் இயக்கிவரும் அன்பு தத்துவத்தால் விழுங்கப் பட்டு எங்கும் அன்பையே காண்பான். அன்புத் தத்துவத்தை முருகனைக் கொண்ட அருணகிரியார் மனத்துக்கு அவனிப் பூந் தோட்டத்தில் மற்ற வேற்றுமைகள் ஒழிந்து வினையொழிந்து வாழ

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய் மனமே ஒழிவாய் ஒழியாய்
மெய் வாய் விழி நாசி யொடு செவியாம்
ஐவாய் வழி செல்லும் அவா வினையே.

(ஒழிவாய் உய்வாய்)

என்று உபதேசிக்கிறார்.

இப்படி ஆன்றோர்களின் அனுபவம் நிறைந்த மொழிகளை அறிந்து, தெளிந்து, இருந்து, உணர்ந்து, அன்பு மயமாக வெளிப் படும் ஆண்டவனுக்கப்பட்ட தத்துவத்தால் விழுங்கப்படும்போது, அவனது இந்திரியங்கள் எங்கெங்கும் அன்பையே கண்டு அவனிப் பூந்தோட்டத்திலிருந்தாலும் எவ்விதமான சலனமும் இன்றி இன்ப னாக வாழ்வான். இவ்வவனிப் பூந்தோட்ட ஞானித்தான் பேதங் களாலும், ஹிம்சைகளாலும் சுயநலத்தாலும், கோபாதிகளாலும், ஆசைகளாலும் கர்வத்தாலும் சூழப்பட்டு எழத் தெரியாது துக்க முறும் மக்கள் எல்லாம் ஒழித்து அன்பு, சேவை, சமத்துவம், த்யாகம் என்பதன்மூலம் அமைதிக் கோவில் கட்டி ஆனந்தமாக அதில் கடவுளாக தாமே உட்கார்ந்து வாழ முடியும்.

வாழ்க அவனிப் பூந்தோட்ட ஞானி—அவனால்
வாழ்க அன்பு நிறைந்து மக்கள்.

கீழ்கண்ட பாடல் அவனிப் பூந்தோட்டத்தில் வாழும் ஞானியைப் பற்றிச் சொல்லுகிறது :

1. காதுகளில் தூய்மையே கேட்டறியான் ஞானி
நாதன் அன்பு நாமமது நிறைந்து இருப்பதாலே.

2. வீண் காக்ஷி கண்டறியான் வேதம்புகழ் ஞானி
ஆண்டவன் தானே கண்ணில் துணையானதாலே.

3. நேசமான பரமிந்தனை தானறியான் ஞானி
ஈசன் நாமமுண்டு இச்சையற்றதாலே.

4. நாசி கொண்டு வாசகங்களை வேண்டாதுண்மை ஞானி
பாசமற்றுப் பரமன்தாளே நுகர்ந்திருப்பதாலே.

5. கைகளாலே இன்பமன்றி செய்தறியான் ஞானி
அய்யனையே அர்ச்சித்தும் அன்பு கொண்டதாலே.

6. கால்கள்தானே தீயவிடம் நாடா உண்மை ஞானி
கோயில் சுற்றி அன்பருடன் கூடிச் சென்றதாலே,

7. தேகமென்னும் உலகவேட்கை வேண்டாத ஞானி
போகமெல்லாம் ஏகனிடம் கொண்ட உண்மையாலே.

8. உறங்கும் போதும் துர்மோகம் கண்டறியான் ஞானி
மறக்காமல் (எப்பொழுதும்) அன்புப்பணிசெய்துவாழ்வதாலே

9. கண்டவுடன் துன்பமெல்லாம் நடுக்கியோடும் ஞானி
ஆண்டவனே இன்பன் என்ற எண்ணங் கொண்டதாலே

10. லஞ்சம் வஞ்சம் எல்லாமின்றி இன்புருவான் ஞானி
கொஞ்சமும் சந்தேகமின்றி அன்பில் வாழ்வதாலே.

11. காடுமலை சுற்றமாட்டான் வீட்டிலிருப்பான் ஞானி
நாடுமிடமெங்கும் அம்மை நாட்யம் காண்பதாலே.

12. அன்பைத் தவிர அறியானிந்த அஹிம்சையுள்ள ஞானி
இன்பமாக நாமும் வாழ எண்ணங்கொண்டால் போதும்.

13. இங்கும் சாந்தி எங்கும் சாந்தி மங்கும் மாயை எல்லாம்
மக்களமாம் பராசக்தி அருளால் வாழ்க ஞானி.

இம்மேலான ஞானியில், ஒருவரான எந்தை காந்தி மகாத்மா என்றும் நமக்கு ஆசியளித்து, அன்பு தந்து, அமைதியில் வைப்பாராக.

அடிசிற் கினியாளே யன்புடையாளே
படிசொற் தவறுத பாவாய்-அடிவருடில்
பின் தூங்கி முன்னெழுந்த பேதையே
போதையோ என்றூங்கு மென்கண்ணீரா.

—திருவள்ளுவர்.

சரளாவின் பொக்கிஷம்

ஸ்ரீமதி செம்பகமணி.

> ஆயிரம் ரூபாய்க்குப் பித்தளைப் பாத்திங்கள், இரண்டாயிரம் ரூபாய்க்கு வெள்ளிப் பாத்திரங்கள், நகை, துணி பட்டுப் புடவை இத்தியாதி விஷயங்களில் பத்தாயிரம் செலவு செய்து திருநெல்வேலியில் பிறந்து, வளர்ந்த பெண்ணை டில்லியிலிருக்கும் மாப் பிள்ளையிடம் குடித்தனம் செய்ய அனுப்புகிறார்கள் பெற்றோர்கள் பொறுமை, சாந்தம் அன்பென்னும் பொக்கிஷங்களை கொஞ்சமாகிலும் தன் பெண்ணோடு அனுப்புகிறார்களா ?

"வா! சரளா! வா! புக்ககம் போகிறுயாக்கும். இனி உன் தெரிசனம் கிடைப்பதே துர்லபம் தான்" என்று அன்புடன், புதுப்புடவை சரசர வென சப்தமிட நாணிக் கொண்டு உள்ளே நுழைந்த சரளாவை வரவேற்ருள் சாந்தா.

"சரளா! படித்த பெண்ணுன உனக்கு நான் என்ன சொல்ல இருக்கிறது. ஆனுலும் படித்த பெண்ணுன பானுவின் வாழ்க்கை உனக்கு நல்ல உதவியாக இருக்கும்" என்ருள் சாந்தா.

"என்ன உங்கள் சிநேகிதி பானுவையா சொல்கிறீர்கள்" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் சரளா.

"ஆம், பானு என் பள்ளித் தோழி. அவளுக்கு எப்பொழுதுமே படிப்பதிலும் தன் சிநேகிதிகளுடன் அளவளாவுவதிலும் தனி ஆனந்தம். ஏன் எதிலும் உன்மாதிரிதான் அவள். இந்த வழக்கம் தான் அவள் வாழ்க்கையில் கசப்பை உண்டாக்கியது" என்ற பீடிகையுடன் ஆரம்பித்த சாந்தா பானுவின் வாழ்க்கையை மேலும் தொடர்ந்து சொல்லலானுள்.

"பானுவுக்கு ஒரு நல்ல இடத்தில் மணமாயிற்று. அவள் கணவர் எம். ஏ. படித்தவர். இவளுக்கேற்றுப் போல் அவரும். புஸ்தகம் படிப்பதில் ஆழ்ந்து விடுவார். அவருக்கு சென்னையில் ஒரு கம்பெனியில் உதவி மானேஜர் வேலை. ஞாயிற்றுக்கிழமை தோறும் பானுவை, சங்கீதக் கச்சேரிகளுக்கும், பிச்சுக்கும் அழைத்துப்போக தவற மாட்டார். அடிக்கடி புஸ்தகங்கள் வாங்கி வருவார். அவைகளைப் படித்து விட்டு இருவரும் வெகு நேரம் அதில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களைப் பற்றி தர்க்கிப் பார்கள். மேலும் பானுவைப் பார்க்க அடிக்கடி அவள் கலாசாலைத் தோழிகள் பலர் வருவர். அவர்களுடன் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருப்பாள்."

"பானுவின் மாமியார் பழைய காலத்து மனுஷி. அவளுக்கு பானுவிடம் அன்பு இல்லையென்று அர்த்தமல்ல. இருந்தாலும் மற்றவர்களிடம் இவளைப் பற்றி 'என்ன படிப்பு வேண்டியிருக்கு. நாவலையும், கீவலையும் படிப்பது, பிறகு ஆம்படையானோடு தர்க்கிப்பது. கண்ட சிநேகிதிகளையெல்லாம் வீட்டுக்கு கூட்டிவந்து அரட்டையடிப்பது. இதெல்லாம் யாருக்கு வேண்டியிருக்கு. பெண் என்றால் அமுசு அடங்க இருக்க வேண்டாமா' என்று அங்கலாய்த்துக் கொள்ளுவாள்."

"பானுவின் கணவனுக்கு தன் தாய் சொல்வது தவறு என்று தெரியும். இருந்தாலும் பானுவிடம் 'கொஞ்சம் நீ தான் விட்டுக் கொடேன், கொஞ்ச நாள் போனால் அவள் இதற்கெல்லாம் ஒன்றும் ஆக்ஷேபிக்க மாட்டாள்' என்று சொல்லுவார். அவள் கொஞ்சமாவது இடம் கொடுத்தால் தானே. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக தன் தாய்க்காக அவர் பானுவை வெளியே அழைத்துப் போவது புஸ்தகங்கள் வாங்கி வருவது முதலியவைகளை நிறுத்திவிட்டார்."

"பானுவுக்கு மாமியின் இந்த அடக்குமுறை அர்த்த மற்றதாகப் பட்டது. இதற்குத் தான் பணிவதா என்று எண்ணினாள். யாராக இருந்தாலென்ன. தப்பு தப்புதானே. பட்டிக் காட்டுப் பெண்களைப் போல, மாமியார் காலினால் உதைத்தாலும், ஆஹா! பாத தூளி என்று கண்களில் ஒற்றிக் கொண்டு பரவசமடையும் அந்த மூடக் கூட்டத்தில் தானும் சேருவதா என்று பொருமினாள் பானு."

"இப்பொழுதெல்லாம் பானுவின் மாமியாரின் குணமறிந்து அவள் சிநேகிதிகள் ஒருவரும் வீட்டிற்கு வருவதில்லை. ஒரு நாள் பானு பொழுது போகாமல் சாயங்கிரம் தன் வீட்டு வாசல் திண்ணையில் நின்று கொண்டிருந்தாள். அப்பொழுது எதேச்சையாக அவ்வழியே சென்று கொண்டிருந்த தன் கலாசாலைத் தோழி மோகனாவைக் கண்டாள். அவளும் பானுவைப் பார்த்து விட்டு அங்குவந்தாள். இருவரும் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தனர். பானுவின் மாமியாருக்கு மூஞ்சியில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. கடைசியில் மோகனா விடைபெற்றுப் போகும் பொழுது, பானுவை கட்டாயம் வருகிற ஞாயிறன்று அவள் வீட்டுக்கு வருமாறு அழைத்தாள்."

"ஞாயிற்றுக் கிழமையும் வந்தது. மோகனா அதற்குள் வேலைக்காரி மூலம் தவருமல் வருமாறு ஒரு கடிதம் வேறு கொடுத்தனுப்பி விட்டாள். பானுவின் கணவனும் அன்று சீக்கிரமாகவே வெளியே கிளம்பி விட்டார். பானு எப்படியும் மோகனாவின் வீட்டிற்குச் செல்வதெனத் தீர்மானித்தாள். அவள் மாமி நிச்சயம் அனுமதிக்க மாட்டாளென்று தெரியும். ஆகையால் மாலை 5 மணி சுமாருக்கு பக்கத்து வீட்டுக்குப் போய் வருவதாகச் சொல்லிக் கொண்டு, தன் மாமியின் பதிலையும் எதிர் பார்க்காமல் கிளம்பி விட்டாள்."

"பானு அன்று மோகனாவுடன் வெகு நேரம் பேசிக் கொண்

டிருந்தாள். பேச்சு வாக்கில் தன் மாமியின் அடக்கு முறையை எடுத்துச் சொல்லி, அதை எப்படித் தகர்த்தெறிவதென யோஜனை கேட்டாள். அதற்கு மோகனா, பயந்த மாதிரி காட்டிக் கொண்டால் மாமியார்கள் தலைக்கு மேல் ஏறு வார்களென்றும், அதற்கு நாம் இடம் கொடுக்கவே கூடாது என்றாள். மோகனாவின் மாமியாரும் முதலில் அப்படித் தானிருந்தாளாம். இப்பொழுது தங்கக்கம்பியாகி விட்டாளாம். மாமியாரிடம் நடந்து கொள்ள வேண்டிய விதமே வேறு என்று உபதேசித்தாள் மோகனா."

"இவைகளினாலெல்லாம் பானுவின் மனம் உறம் பெற்றது. இதே வழியைக் கையாண்டு மோகனா தன் வாழ்க்கையில் சுதந்திரம் பெற்றிருக்கிறாள். கண்கூடாகக் காணும் இந்த உண்மையைக் கூடவா அறிந்து கொள்ள அவளது படித்த மூளைக்குச் சக்தியில்லை!"

"அன்று மோகனாவிடம் விடை பெற்றுக் கொண்டு வருவதற்குள் வெகு நேரமாகிவிட்டது. பானுவுக்கு மனதிற்குள் பயம் தான். தன் மாமியும், கணவரும் என்ன சொல்லுவார்களோ, இன்று ஒரு பெரியசண்டை தான் நடக்கப்போகிறது என்று அவள் மனம் திக் திக் கென்று அடித்துக் கொண்டது. மனதைத்திடம் செய்து கொண்டு பானு வீட்டினுள் நுழைந்தாள்."

"உள் நுழைந்த பானு மீது அவள் மாமி சீறி எழுந்தாள். 'பக்கத்து வீட்டுக்குப் போய் வர இவ்வளவு நாழியா? ஏன் என்னிடம் பொய் சொல்ல வேண்டும். குஷாலாக சிநேகிதர்கள் வீட்டில் வம்படித்து விட்டு இரவு 10 மணிக்குத்தான் வருவேன். சமைத்து வை என்றால் குறைந்தா போய் விடும்' என்று கத்தினாள்."

"பானுவுக்கு கோபம் கட்டு மீறியது. 8 மணி தானாகிறது. சமைத்துப் போட அப்படியொன்றும் நாழியாகிவிட வில்லையென்றும், அப்படி வேண்டாததற்கெல்லாம் குறை கூறினால் வாழ்க்கை நடத்துவதே கஷ்டம் தானென்றும் ஏதேதோ கூறினாள்."

"உடன் அவள் மாமி, தான் இருப்பதால், பானு குடித்தனம் செய்ய முடியவில்லை யென்று கூறினாளென்று பெரிதாக ஆர்ப்பாட்டம் செய்ய முடிவில் ஆரம்பித்து விட்டாள். அச்சமயம் பானுவின் கணவர் வந்து விஷய மறிந்து தன் தாயைச் சமாதானம் செய்தார். பானுவுக்கு நல்ல வசவுகிடைத்தது."

'பானுவின் கணவர் தன் தாயிடம் புஸ்தகம் படிப் பதிலும், சிநேகிதைகளுடன் பேசிக் கொண்டிருப்பதிலும் தவறு இல்லை யென்றும் வீணாக மனதைப் புண்படுத்திக் கொள்ள வேண்டாமென்றும் சொன்னார். அதற்கு பானுவின் மாமி 'நீயும் பெண்டாட்டியோடு சேர்ந்து கொண்டு விட்டாயா? எப்படியும் போங்கள். எனக்கு என் இந்த பாடு' என்று கோபித்துக் கொண்டு, மறு நாளே எவ்வளவு

சொல்லியும் கேளாமல் திருச்சியிலுள்ள தன் தங்கை வீட்டுக்குப் போய்விட்டாள்.''

"பானுவுக்கு முதலில், பெரிய பாரம் நீங்கியது போலிருந்தது. எதற்கெடுத்தாலும் குறை கூற அவள் மாமி இல்லேயல்லவா? அவள் கணவன் கோபமும் இரண்டு நாளில் சாந்தமாகி விட்டது. தனக்கு பூர்ண சுதந்திரம் இடைத்து விட்டதாக எண்ணினாள். ஆனால் தன் மனதில் நிம்மதியில்லை என்பதைத் தெரிந்து கொள்ள அவளுக்கு வெகு நாளாகவில்லை.''

"மாமியார் கூட இல்லாதது பானுவுக்கு நன்கு தெரிய ஆரம்பித்தது. ஒவ்வொரு சின்ன காரியமும் அவளில்லாமல் செய்ய முடியாது போல் தோன்றியது. என்ன தான் பானுவின் மீது கோபமிருந்தாலும், தினந்தோறும் மாலேயில் கையில் எண்ணெயும் சீப்பும் எடுத்துக் கொண்டு ஜடை பின்ன உட்கார்ந்து விடுவாளே. பூக்காரன் வந்தால் எவ்வளவு பூ வாங்குவாள். இப்படிப் பட்ட மாமியாருடன் குடித்தனம் செய்ய கொடுத்து வைக்காத பாவியாகி விட்டோமே என்று பானுவின் மனம் ஏங்கியது.''

"நாட்கள் ஓடி வாரத்தைப் பிடித்தன. வரவர பானுவின் தவறு அவளுக்கு மலேயாகத் தோன்ற ஆரம்பித்தது. அவள் மாமியார் பழைய காலத்து மனுஷி. ஏன் அவள் தாயாரும் அப்படித்தானே! நாட்டுப் பெண்ணும் தன்னேப் போலிருக்க வேண்டுமென்று நினேத்தது அவள் மாமியின் தவறு?''

"இந்த தவறுக்கு ஒரு எல்லேயைத் தேடத்தான் வேண்டுமென்று தீர்மானித்து, பானு தன் மாமியிடம் சென்று மன்னிப்புக் கேட்டு அழைத்து வர முடிவு செய்தாள். இதை அவள் தன் கணவனிடம் சொன்ன பொழுது அவர் இடி இடி யென்று சிரித்தார். அவள் கணவர் மறு நாள் இரவு கட்டாயம் பானுவை திருச்சிக்கு அழைத்து போவதாகச் சொன்ன பிறகு தான் அவள் மனம் சாந்தியடைந்தது.''

"மறு நாள் காலேயில் கதவைத் தட்டும் சப்தம்கேட்டு வாசற் கதவைத்திறந்த பானு ஸ்தம்பித்து விட்டாள். அவள் பின்னுலேயே வந்த அவள் கணவரும் உள்ளே நுழைந்த தன் தாயை ஆச்சரியத்தோடு 'உன்னேத் தேடி கோபத்தை சாந்தப் படுத்தி அழைத்து வரக்கிளம்பிக் கொண்டிருக்கிருள் உன் நாட்டுப் பெண். அதற்குள் நீயே வந்து விட்டாயே ஒரு கடிதம் போட்டிருந்தால் ஸ்டேஷனுக்கு வந்திருக்கமாட்டேனு' என்றுர்.''

"இதை யெல்லாம் விட பானுவின் மாமி கூறினது தான் அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. பானுவின் இளைய மாமியார் பெண் சாரதா திருச்சியில் இண்டர் படிக்கிருள். அவள் பண்ணுகிற தளுக்கும், மினுக்கும், தஸ்புஸ் என்று இங்கிலீஷில் எல்லோரிடமும் பேசுவதையும், தினம் வீட்டிற்குப் பத்து சிநேகிதி

களைக் கூட்டிவந்து கொம்மாளம் அடிப்பதையும் கண்டு பானுவின் மாமி திகைத்து விட்டாளாம். இவைகளை யெல்லாம் பார்த்த பிறகு, பானுவின் மனதை அநாவசியமாகப் புண்படுத்தினோமே என்று அவளுக்குப் பட்டதாம். மேலும் பானு இல்லாமல் அவளால் இருக்கவே முடியவில்லையாம்.''

''இப்பொழுதெல்லாம் பானுவின் மாமியே தன் பிள்ளையைப் புஸ்தகங்கள் வாங்கி வரும் படி நச்சரிக்கிறாள். பானுவுக்கு தன் மாமியாருக்குப் புஸ்தகங்கள் படித்துக் காட்டுவதற்கே நேரம் போதுவதில்லை. பானுவின் சிநேகிதிகள் யார் வந்தாலும் அவர்களுடன் இன்முகத்துடன் பேசிக் கொண்டிருக்கிறாள். பானுவும் இப்பொழுது அதிகமாக தன் தோழிகள் வீட்டில் வந்து பார்க்கும் படி வைத்துக் கொள்வதில்லை. தன் மாமியின் மனம் கோணமல் நடந்து கொள்வதிலேயே அவள் முழு கவனமுமிருக்கிறது.''

''சரளா! நீ புக்ககம் போகும் பொழுது நான் உனக்குக் கொடுக்கக் கூடிய பொக்கிஷம் என் பானுவின் வாழ்க்கையைத் தவிர வேறென்ன இருக்கிறது. எது நேர்ந்த போதிலும் பொறுமையோடு இரு. எல்லோரிடமும் நல்லவளென்ற பெயரெடு'' என்று கூறி முடித்தாள் சாந்தா.

''நீங்கள் இன்று எனக்கு அளித்த பொக்கிஷமான பானுவின் வாழ்க்கைச் சாரம் எனக் கொரு நல்ல உபதேசமாகும். உங்கள் வார்த்தைகள் என்றும் என் மனதை விட்டு அகலா'' என்று சொல்லி நமஸ்கரித்தாள் சரளா.

''இந்தா குங்குமம் எடுத்துக் கொள். மங்களத்திற்கு அறிகுறியான இது என்றும் உன் வாழ்க்கையில் மங்களத்தையே கொடுக்கட்டும்'' என்று கூறிக் கொண்டே குங்குமத்தை கொடுத்தாள் சாந்தா.

கல்வி யென்பது மூளையில் விஷயங்களைத் திணிப்பதன்று. அப்படித் திணிக்குங் கல்வி ஜீரணிக்காத உணவைப்போல் துன்பமே தரும். உணவு இரத்தமாக மாறி உடலை வளர்த்துவது போல் கல்வி மனதுடன் கலந்து வாழ்க்கையில் பயன்படவேண்டும்.

கடிதங்கள்

(1)

அன்புள்ள சரோ,

உனக்கு எனது நல் வாழ்த்துக்கள். உனது ஆர்வமும் உணர்ச்சியும் நிறைந்த கடிதம் கிடைத்தது. உண்மையாகவே இன்றையப் பெண்களின் மனோபாவம் உனது கடிதத்தில் பெரும்பான்மையும் பிரதிபலிக்கிறது. உனது உணர்வு அலைகளை கடிதத்தின் மூலம் அள்ளிக் கொட்டியிருக்கிறாய்! மனக்கடலில் மாறி மாறி எழும் உணர்வலைகள்!

இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் வாழும் இன்றையப் பெரும்பான்மை மனோபாவம் உன்னை ஒத்தே இருக்கிறது. நாட்கள் செல்லச் செல்ல, காலம் மனிதனை உண்மையினின்று வெகு தூரத்துக்கு அப்பால் இழுத்துச் செல்கிறதோ என்று கூட நினைக்க வேண்டியிருக்கிறது. பெண்களுக்கு சமூகப் பொருளாதாரச் சமத்துவம் வேண்டுகிறாய்! உன் களங்கமற்ற இதயத்தைப் போற்றுகிறேன். ஆனால் உனது அறியாமைக்காகவும், பலஹீனத்துக்காகவும் அனுதாபப்படுவது மட்டுமல்ல, வருந்துகிறேன். ஒன்றின் பெயரால் பிறிதொன்று செய்வது இன்று சாதாரணமாகி வருகிறது. சரோ, நீ வருங்காலச் சந்ததிகட்குத் தாய். உனது பொறுப்பு மகத்தானது. மறக்காதே.

பெண்கட்குச் சமத்துவம் தேவை என்பது மறுக்க முடியாததொன்றாகி விட்டது. ஆகவே அந்தப் பிரச்சனை மீது சர்ச்சைக்கு இடமே இல்லை. ஆனால் 'சமத்துவம் எந்த உருவில்' என்பதுதான் கருத்து. வேற்றுமையைக் கிளறி விட்டிருக்கிறது. விருப்பு, வெறுப்பற்று, பொதுநலன் கருதும் உள்ளத்தோடு உனக்குக் கூறுகிறேன் கேள்.

ஐக்கியநாடுகள் பொதுச்சபையின் கிளையாகிய மனித அடிப்படை உரிமைக் கமிட்டியில் திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட் பேசியதை உனக்கு ஞாபகப்படுத்துகிறேன். சமூகத்தில் பெண்களின் உரிமையும், பங்கும் என்பது பற்றி விவாதம் நடந்தபொழுது, மேற்கத்திய நாட்டவர் பலர் (ஆண்

கள்) பெண்களுக்கு எல்லாத் துறைகளிலும் சமத்துவம் வழங்க வேண்டும் என்று தடபுடலாகப் பேசினர். மேல்நாட்டுப் பெண் பிரதிநிதிகள் தங்களுக்கு சமத்துவமும் அதிக உரிமையும் அளிக்க வேண்டுமென்று பேசினர். ஆனால் "ஆண்கள் பெண்களுக்கு உரிமையும் சமத்துவமும் அளிப்போமென்று சொல்வதோ, பெண்கள் ஆண்களைப் பார்த்து உரிமைகள் வேண்டுமென்று கேட்பதோ கொஞ்சமும் அர்த்தமற்றது. பெண்களின் உரிமையோ அல்லது சமத்துவமோ ஆண்களின் பையில் இல்லை. பெண்களின் உரிமை ஆண்களின் சட்டைப் பையில் இருப்பதாக ஆண்களோ, பெண்களோ நினைப்பது வெறும் கேலிக்கூத்து" என்று அடித்துப் பேசினார் பண்டிதர்.

திருமதி பண்டிதரின் கூற்றிலே நீ தெரிந்து கொள்ள வேண்டிய மகத்தான உண்மை இருக்கிறது. பெண்களின் இன்றைய நிலைக்கு அவர்களின் தாழ்வு மனப்பான்மை (Inferiority Complex) ஒரு முக்கிய காரணம். "பெருமையும் சிறுமையும் தான் தர வருமே" என்ற முது மொழி மிகுந்த கருத்துடையது. வாழ்க்கை வண்டியை ஆண், பெண் என்ற இருவருமே சேர்ந்து இழுத்தாக வேண்டுமென்பது இயற்கை நியதி. ஜோடிக் கண்களிலோ, கைகளிலோ ஒன்றைவிட ஒன்று மேலானதெனப் பிரித்தல் சாத்தியமா? வாழ்க்கையை அகம் புறம் என இரு பெரும் பிரிவுகளாக்கி, அகத் தலைமையைப் பெண்ணுக்கும், புறத்தலைமையை ஆணுக்கும் இயற்கை அளித்திருக்கிறது. ஒருவரிடம் இல்லாத அம்சங்கள் மற்றவரிடம் இருக்கின்றன. இரு அம்சங்களின் கலப்பே வாழ்க்கை. உனது விடுமுறை நாட்களிலே நீ எங்கள் கிராமத்துக்கு வருவாயானால் ஒரு வள்ளியும் ஒரு முருகனும் எப்படி அன்பின் அடிப்படையில் வாழ்க்கையின் பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டு வாழ்கிறார்கள் என்பதை உனக்கு நிதர்சனமாகக் காட்ட முடியும்.

இந்தியாவின் ஜனத் தொகையில் பாதிப்பேராகிய பெண்கள் மற்றப் பாதிப்பேராகிய ஆண்களின் உழைப்பிலே ஊதியமடைகிறார்கள் இன்று. இதனால் ஆண்களுக்கு மிதமிஞ்சிய உழைப்பு ஏற்படுகிறது. முடிவு சுமுகமற்ற தாம்பத்ய வாழ்க்கை! நலிந்த சமுதாயம்! ஆனால் எங்கள் வள்ளியும் முருகனும் இதற்கு விதிவிலக்கு. ஓடி உழைத்து, அலுத்து வரும் கணவனுக்கு, உண்ண, உடுக்க, உறங்க வசதி செய்வாள்

வள்ளி. அதுமட்டுமல்ல, விவசாயம், குடும்ப நிர்வாகம் இவற்றில் முருகனுக்கிணையான பங்கும் கொள்வாள். அவர் களது வாழ்வு இலட்சிய வாழ்வு.

சங்ககாலம், பெண்மையின் சிகரம் எனலாம். வீரம், புலமை இவற்றில் பெண்டிர் சளைத்தாரில்லை. சமத்துவம் வேண்டும் எனக் கெஞ்சியதில்லை. ஆண், பெண், இவர் களினியல்புக் கேற்ப இயற்கை விதித்திருக்கும் நியதிகளை உணர வேண்டும். இல்லம் ஆள்பவள் பெண். உடலுழைப் பும், ஓட்டமும் ஆணின் பங்கு. இங்கு ஏற்றந்தாழ்வுக்கு இடமே இல்லை.

ஆண்களுக்கான துறையில் அவர்களோடு போட்டி போடுவதுதான் சமத்துவம் என்ற தவறான மனப்போக்கு இன்றையப் பெண்கள் பலரிடை நிலவி வருவது மிகவும் வருந்தத் தக்கது. ஆண்களோடு போட்டியிடும் பெண்கள் மனப்பான்மை இன்று மேல் நாடுகளில் மேலோங்கி நிற் கிறது. இத்தவறான மனப்பான்மையின் பிரதிபலனே இன் றைய மேலைநாட்டின் அமைதியற்ற சமூகமும் அதன் நிலை யும் என்பது அறிஞர் முடிவு. மேல்நாடுகளின் தாம்பத்ய வாழ்க்கையின் சீர்கேடான நிலைமையைப்பற்றி பின்னால் உனக்கு விவரமாகச் சொல்லுகிறேன்.

சரோ, நீ பிறந்த தமிழ் மண்ணுக்காக நீ என்றென் றும் பெருமைப்பட வேண்டும். வாழ்க்கையின் அடிப்படை யான இயல்புகளை நம் முன்னோர் நன்கு அறிந்திருந்தனர். ஆகவே கட்டுக்குலையாத இலட்சிய வாழ்வுக்கேற்ற பாதையை வகுத்தனர். எந்த மொழியில், எந்த நாட்டில் இதுவரை ஆண், பெண் உறவுக்கென், இலக்கியமும், இலக்கணமும் உள? உன் தமிழ் அறிவு உலகிலே ஈடு இணை அற்றது. காலப்போக்கிலே நீயே அறிந்து கொள்வாய். சமயம் வாய்க் கும்போதெல்லாம் நான் உனக்கெழுதுவேன். உன்னை ஒரு இலட்சியப் பெண்ணாகப் பார்க்க வேண்டுமென்பது எனது ஆசை.

“உரிமைக்காக அலையாதே. கடமையைச் செய். உரிமை தானே வரும்” என்ற விவேகானந்தரின் வீர வாசகங் களை உனக்கு நினைவூட்டுகிறேன். “மனம் போல வாழ்வு”

என்ற உரையில் மிகப்பெரிய மானஸீகத் தத்துவம் புதை யுண்டிருக்கிறது. ஆண் உணவு. நீ உப்பாக இரு. உண வுக்கு உப்பு தேவை. வாழ்க்கையை வாழ செய்ய நீ உன் கடன் செய்ய வேண்டும். அர்த்தமற்ற கோட்பாடு களுக்கு இரையாகிவிடாதே எச்சரிக்கையாக இரு. விடு முறையில் அவசியம் வா.

"பித்தன்"

வாய்ப் புண் :

ஜபல்பூர் சகோதரி ஸ்ரீ விசாலாக்ஷி தனக்கு அடிக்கடி வாயில் புண் வருவதாகச் சொல்லி சிகிச்சை கேட்டுள்ள தற்குத் தாம் தந்துள்ள பதில் மிகவும் பொருத்தமானதே. ஆயினும் அடிக்கடி என்று சொல்லியிருப்பதால், ஸ்ப்ரூ (Sprue) என்று டாக்டர்கள் சொல்லும் இரத்தக் குறைவு, ஜீரணக் குறைவுகளால் ஏற்படக்கூடிய வாய்ப் புண்ணாயு மிருக்கலாமோ என்று நினைத்தேன். அப்படியானால் அதற்கு சாதாரணமாக இங்கிலீஷ் வைத்திய முறையைக் கையாளும் டாக்டர்கள் 'லிவர்', விடமின் பி இரண்டும் ஊசி மூலமாய் குத்தியும் நிக்கோடினிக் ஆஸிட் (பிலோனின்) மாத்திரை கள் தினம் இரண்டுவேளை (வேளைக்கு 2 வீழுக்காடு) உள் ளுக்கு சாப்பிடும்படிக்கும் சொல்லுகிறார்கள். இச்சிகிச்சை யினால் பலர் குணப்பட்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஜப்பல்பூரில் உள்ள டாக்டர்களிடம் காட்டி சிகிச்சை செய்து கொள்வதே அடிக்கடி வரும் புண்களைத் தடுப்பதற்கான உயர்ந்த முறை என்று வணக்கத்துடன் சொல்லுகிறேன்.

—சுந்தராம்மாள்.

ஈரல் குலைக்கட்டி [கல்லீரலும், மண்ணீரலும்]

'கல்பனு'

Infant mortality என்று சொல்லுகிறார்களே, அதாவது குழந்தைகளின் மரண எண்ணிக்கை இந்தியாவில் நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறது என்பதுதான்.

இதற்கு முதலாவதான காரணம் வறுமையே ஆகும். அன்றாடம் அரை வயிற்றுச் சாப்பாட்டிற்குப் பாடுபடும் மக்களுக்கு குழந்தையை போஷிக்க எங்கிருந்து பணம் கிடைக்கப் போகிறது ?

இளம் வயதில் விவாகம் செய்வதும் ஒரு காரணம் வலுவில்லாத குழந்தைகள் பிறக்கிறது. சிறு பெண்களுக்கு, குழந்தைத் தன்மை மாறாத பெண்களுக்குக் குழந்தைகள் பிறந்தால் அவர்கள் எங்ஙனம் கவனித்துக்கொள்வார்கள் என்று யோஜித்து பாருங்களேன்?

வயிற்றில் கட்டி என்கிறார்களே அது உண்மையில் கட்டி யல்ல கல்லீரலும், மண்ணீரலும் வீங்கிக்கொள்வதுதான்.

முதலில் கல்லீரல் என்ன என்று பார்ப்போம். கல்லீரல் என்றால்: அதாவது Liver நமது உடலிலுள்ள சுரப்பிகளுக் கெல்லாம் பெரியது (Biggest gland) சுமார் 4 பவுண்டு எடை உள்ளது. கல்லீரல் வலது புறத்தில் இருக்கிறது: ஆகாரத்தி லிருந்து ரத்தத்தின் மூலம் செல்லும் சத்தில் தேவையானது போக மிச்சம் கல்லீரலில் சேமித்து வைக்கப்படுகிறது. கல் லீரலில் பித்த நீர் (Bile) உண்டாகிறது. உடலுக்கு சர்க்கரை தேவை. Starch என்று சொல்லப்படும் சத்தை வாயிலுள்ள உமிழ் நீர் சர்க்கரையாக மாற்றுகிறது. ஆனால் உடலுக்கு எப் பொழுதும் தேவையாயிருக்கும் சர்க்கரை உணவு உண்டவுடன் கல்லீரலுக்கு வரும். தேவையானது போக அதிகமிருப்பதை கல்லீரலிலுள்ள உயிரணுக்கள் 'க்ளை போஜன்' என்கிற கரை யாத சர்க்கரையாக மாற்றி தன்னுள் வைத்துக்கொண்டு, உட லுக்குத் தேவையான சமயத்தில் கொடுத்துக்கொண்டிருக்கும். மேலும் கல்லீரலின் உயிரணுக்கள் சரியாக வேலை செய்யா

விடில் சர்க்கரை மூத்திரத்தோடு வெளியாய் (Diabetes) நீர் இழிவு என்னும் நோய் உண்டாகிறது. கல்லீரலின் உயிரணுக்கள் மண்ணீரலிலிருந்து வடிவாய்க் குழாய் (Hepatic veins) வழியாகக் கொண்டு வரப்பட்ட இறந்துபோன செவ்வுடலிகளைக் (Red blood corpuscles) கொண்டு பித்த நீரை உண்டு பண்ணுகிறது. கொழுப்பு சம்பந்தமானவைகளைச் சமைக்க இந்நீர் உதவுகிறது. பித்த நீர் குடலில் செல்லாமல் தடைப்பட்டுவிட்டால் மஞ்சள் காமாலை என்னும் (Jaundice) நோய் தோன்றுகிறது.

(Spleen) மண்ணீரல்; இது கருநீலமான அவயவம். வட்டமானது. நடுவில் 5'' நீளமுள்ளது. இடதுபுறத்தில் இரைப்பையின் இடது பக்கத்திலுள்ளது. பூச்சிக்கூடு போல கட்டப்பட்டுள்ளது. இந்தக் கூடுகளுக்கு மத்தியில் கூழ் போன்ற ரத்தப் பசை நிறைந்திருக்கிறது. இது 3 நிமிஷத்திற்கொரு முறை பருத்தும் சிறுத்தும் விடுகிறது. உணவு உண்டு சுமார் 5 மணி நேரத்திற்குப் பிறகு நன்றாகப் பருத்து பிறகு சிறியதாகி விடுகிறது. செவ்வுடலிகள் (Red blood corpuscles) இறந்தும், புதுப்பிக்கப்பட்டும் வருகின்றன. நிணநீரணுக்கள் (Lymphe cytes) இங்கு உற்பத்தியாகின்றன. இவை குளிர் காய்ச்சல் உண்டானால் அவைகளின் நுண்ணங்களைக் கொல்லும்.

மண்ணீரல் இடது புறத்தில் விலா எலும்புக்குக் கீழ் வரை சில குழந்தைகளுக்குப் பெருத்துவிடும். Spleen வீக்கத்தினால் தான் ஜுரம் வரும். பெரியவர்களுக்கு வீங்கினால் மலேரியா போன்ற குளிர் காய்ச்சலும் காலா அஸார் (kala azar) போன்ற பயங்கரமான வியாதிகளும் வரும். மண்ணீரல் தனது உருவத்தைப்போல் இரண்டு அல்லது மூன்று பங்கு கூடப் பெருத்துவிடும். பெருத்தால்கூடப் பரவாயில்லை. கல்லைப்போன்று கடினமையானால்தான் சிரமம். குழந்தைகளுக்கு விட்டு விட்டு ஜுரம் வரும். ஒவ்வொரு முறை ஜுரம் வரும்பொழுதும், மண்ணீரல் பெரியதாகிக் கொள்ளும்.

கல்லீரல், மண்ணீரலைப்போல் அவ்வளவாக வீங்காதென்றாலும், அது அபாயகரமானது. வயிற்றின் வலது புறம் கல்லைப்போன்றிருக்கும். வீக்கம் அதிகமானால் கல்லீரலில் உண்டாகும் பித்த நீர் சிறு குடலுள் கலந்து காமாலை

(Jundice) வேறு வந்து விடும். கண் மஞ்சளாகிவிடும். வெளியாகும் நீர் மஞ்சளாகி விடும். இதுவே காமாலையின் குறிகள்.

குழந்தையைத் தூக்கினால் கனப்பதும் சரியா ஆகாரம் உட்கொள்ளாததுமே கட்டிக்கு அறிகுறிகள். கட்டி வந்த குழந்தைகளில் சுமார் 30 சதவிகிதம் தான் பிழைக்கிறார்கள். கட்டி வந்த குழந்தைகளுக்குத் தோள் பட்டை சுருங்கிவிடும். வயிறு மட்டும் தனியாக கனக்கும். கட்டிக்கு எத்தனையோ மருந்துகள் வந்திருக்கின்றன. அவைகளில் குணம் இருக்கிறது. ஆனால் பல நாட்களுக்குக் கொடுக்கப் படவேண்டும். ஆனால் மேற் கூறிய 30 சதவிகிதக் குழந்தைகள்தான் பிழைக்கிறார்கள்.

குழந்தைகளுக்கு பாதி வெண்ணெய் அகற்றியபாலைத் தான் கொடுக்கவேண்டும். சாதாரணப் பாலிலுள்ள வெண்ணெய் கொழுப்பு (Fat) லிவர் சரியாக வேலை செய்யாததால் ஜீரணிக்கப்படமாட்டாது.

புதுவித துணி!

இங்கிலாந்து கம்பர்லாந்திலுள்ள ஒரு ஸ்தாபனம் சுமார் இரண்டு வருடகால ஆராய்ச்சிக்குப்பின் தயாரித்துவரும் துணி ஸ்திரிகளின் வேலையை குறிப்பிடத்தக்க அளவு குறைத்து விடுவதாக அறிவிக்கப்படுகிறது. இத்துணியிலிருந்து தயாரிக்கப்படும் ரவிக்கைகள், சட்டைகள், குழந்தைகளுக்கான டிராயர்கள் ஆகியவைகளை துவைத்த பிறகு 'பெட்டி' போடவேண்டிய அவசியம் இருக்காதாம். இத்துணியின் விலையும் மிக மலிவானது. அத்துடன் பட்டைவிட உறுதியானது.

வாயழகு

[அழகி]

தொன்று தொட்டு நம் நாட்டில் உதடுகள் அழகில் முதல் ஸ்தானம் பெற்று வந்திருக்கின்றன. கவிஞர் 'பவழவாய்', 'பவழம் போன்ற உதடுகள்' என்று வர்ணிப்பது ஒருபுற மிருக்க பெண்மக்களுக்குத் தாம்பூலம் வழங்கும் வழக்கம் அவர்கள் வாயழகை முக்கியமாகக் கருதியே யல்லவா?

ஒரு மங்கையின் எழிலை விளம்பரப்படுத்துவது அவள் புன்னகைதான். இதற்கு அதரங்களும், பற்களும் ஒத் துழைக்க வேண்டும். உதடுகளுக்குத் தாம்பூல ரசத்தால் சிவப்பேற்படுத்த விரும்பாத பெண்கள் சாயத்தைப் பூசி பார் வையை அவற்றின் மீது திருப்புகிறார்கள். பின்னால் கூறப் பட்டவர்களெல்லாம் ஒருத்தியைப் பார்த்து மற்றொருத்தி காப்பியடிக்கின்றார்களே யன்றி சுயமாக தன்னுடைய தேவையை அறிந்து தனக்குகந்த அழகு முறைகளைக் கையாளு வதில்லை. இதனால் அவர்களுடைய செயற்கை அழகு அவர் களை அலங்கோலப் படுத்தி நகைப்பிற்கிடமாக்கி விடுகிறது.

இப்பொழுதெல்லாம் மூடு பனி நாட்கள். அதனால் உதடுகளில் வெடிப்பேற்படலாம். காலையில் எழுந்ததும் கொஞ்சம் வெண்ணெயோ, நெய்யோ இரண்டு உதடுகள் மேலும் பூசினால் வெடிப்பு குணமாகிவிடும்.

'முத்து வரிசையை நிகர்த்த பற்கள்' என ஆசிரியர்கள் வர்ணிப்பதற்கு அவர்கள் அத்தகைய பற்களைப் பார்த்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் கண்ட மங்கையர்கள் நவீன பற் பூச்சுகளையும், அதரப் பூச்சுகளையும் உபயோகிக்கவில்லை என்பது நிச்சயம்.

அடுத்த திலகத்தில்: தையல், சிறுவர்களுக்கு விடு கதைகள், ஆனந்தாஸ்ரமம், ஹிந்து சட்டம் முதலிய விசேஷ கட்டுரைகளைக் காணலாம்.

தேள் கடி சிகிச்சை

குமாரி சியாமளா

இப்பொழுது ஊசி மூலம் மருந்தை உட்செலுத்திக் கொள்வது சர்வ சாதாரணமாகி விட்டது. ஆகார சத்துக்கள்கூட ஊசியால் குத்தி உட்செலுத்தப்படுகிறது. கிராமாந்தர மக்களுக்குக் கூட சுக்கு, மிளகு, திப்பிலி போன்ற சுய நாட்டுப் பொருள்களில் நம்பிக்கை குறைந்து இந்த இயற்கைக்கு விரோதமான சிகிச்சையில் நம்பிக்கை அதிகமாயிருக்கிறது. இதே ரீதியில் போனால் சில தலைமுறைகளுக்குப் பிறகு வாய்க்கு வேலை யில்லாமலேயே போய்விடக் கூடும். மனிதக் குடலும் குறுகி இப்பொழுது குடல் அனுபந்தம் இருப்பதைப் போல உபயோகமற்ற வியாதிகளுக்கு உபகரணமான அவயமாக மாறி விடக் கூடும்.

மனித வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்த சைத்தானின் தூண்டுகோலால் மனிதன் இயற்கை விதிகளைப் புறக்கணிக்கிறான். ஆனால் இயற்கையின் நியதிகளை மாற்றவோ விலக்கவோ முடியாதவை.

ஒரு சிறு முள் காலில் தைத்து விடுகிறது. உடனே சரீரத்தின் பல பாகங்களுக்கும் செய்தி பரவி விடுகிறது. கண்ணும், கை விரல்களும் முனைந்து முள்ளை அகற்ற முயல்கின்றன. அவற்றால் முடியாவிட்டால், தேகத்தின் பிரத்தியேகமான சக்திகள் தீவிர முயற்சியில் ஈடுபடுகின்றன. ஒரு சீக்கட்டி உண்டாகி சீழுடன் முள்ளும் வெளியேற்றப் படுகின்றது.

சரீரத்தின் இயற்கைக்குப் புறம்பான எதையும் சரீரத்திற்குள் வைத்திருக்க ஒரு விநாடி கூட முடியாது. சிசுவுக்கு பூர்ணவளர்ச்சி ஏற்பட்டவுடன் தாயின் உடலில் அதற்கு இடமில்லை. எவ்வழியேனும் வெளிப் போந்துவிடல் வேண்டும். அப்படி முடியாவிட்டால் சாகவாவது வேண்டுமேயன்றி, வழியேற்படும் வரையில் கர்ப்பப் பைக்குள் இருக்க முடியாது.

இந்த தத்துவத்திற்கு ஊசியால் உட் செலுத்தப் படும் மருந்துகள் விலக்கல்ல. சரீரத்தின் தேவை முழுவதையும்

கூடல் மூலமாகப் பெறவே சரீரத்தின் பல உருப்புக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆகாரத்தோடு உட்செல்ல வேண்டிய வைடமின் பி (B) சத்து ஊசி மூலம் இரத்தத்தில் சேர்க்கப் பட்டால் உடனடியாக குணம் தெரியலாம். ஆனால் அது சரீரத்தில் தங்க இயற்கை இடம் கொடாது. இவ்வாறு ஊசி மூலம் உட் செலுத்தப்பட்ட ஆகாரங்களை அப்புறப் படுத்தும் முயற்சியில் வேறு புதிய வியாதிகள் உண்டாகவும் இடமேற்பட்டு விடுகிறது.

சென்னை இந்திய வைத்தியக் கல்லூரியில் சொற்பொழி வாற்றியபோது நமது பிரதமர் சித்த வைத்திய முறைகளை சிலாகித்துப் பேசினார். அவருடைய சொற்பொழிவு தமிழாக்கப் பட்டு ஒவ்வொரு கிராம வாசிக்கும் கேட்க வசதி உண்டாக்கப் படவேண்டும்.

நகரவாசிகள் தேள்கடிச் சிகிச்சை மோகத்தில் நரக வாச மனுபவிக்கட்டும். நமது கிராம வாசிகளாவது நமது புராதன முறைகளைக் கை விடாது ஆரோக்கிய திடகாத்திரர்களாக வாழ அனுமதிக்க வேண்டியது சுதந்தர இந்திய அரசாங்கத்தின் கடமைகளில் ஒன்றாகும்.

மாதுளை

சாதாரணமாக மாதுளம் பிஞ்சும், பழ ஓடும் சீத பேதிக்கு உபயோகிக்கப்படுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மாதுளையின் ஒவ்வொரு பாகமும் சக்திவாய்ந்த ஒளஷதமாகும்.

மாதுளங் கொழுந்து ஒரு பிடி, மிளகு பத்து இவை இரண்டையும் ஜலம் விடாமல் மெல்லியதாக அரைத்து மாதவிடாய் கழிந்த நான்காம் நாளிலிருந்து சுண்டைக்கா யளவு மூன்று உருண்டைகள் செய்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் மலடு நீங்கும்.

நாடா பூச்சி (tape worm)யை ஒழிக்க ஒரு பலம் மாதுளை மரப்பட்டையை எடுத்து நான்கு மடங்கு ஜலம் சேர்த்துக் காய்ச்சி கஷாயம் செய்து அதில் சர்க்கரை, தேன் அல்லது ஆமணக்கெண்ணெய் சேர்த்து கொடுக்க வேண்டும். பூச்சியின் தலை வெளிவரும் வரை கொடுக்க வேண்டும்.

பழத்தின் விதைகளைக் கசக்கிப்பிழிந்த ரசம் தாகத்தைத் தணித்து குளிர்ச்சியைக் கொடுக்கிறது. எலுமிச்சம் பழம், புளி முதலிய புளிப்பு பதார்த்தங்களை விலக்கி விட்டாலும் மாதுளை புளிப்பைச் சேர்த்துக் கொள்ளலாம்.

மாதுளையின் துவர்ப்பு காரணமாக அது பல வியாதிகளுக்கு உபயோகப் படுகிறது. வலிப்பு, மூலம், பற்களில் ரத்தம் வடிதல், அருசி, வாயில் துர்க்கந்தம், அஜீர்ணம் போன்ற வியாதிகளுக்குக் கைகண்ட ஔஷதம்.

மாதுளை பிஞ்சை துவையலாகவும், பொடியாகவும் சாப்பிடுவதற்காக உபயோகப்படுத்தலாம்.

பச்சைமிளகாய், உப்பு, பெருங்காயம், பச்சை கொத்தமல்லி, புளி முதலியவைகளுடன் இரண்டு மாதுளைப் பிஞ்சுகளையும் சேர்த்து துவையலாக அரைத்து அன்னத்துடன் நெய் கலந்து பிசைந்து சாப்பிட்டால் அஜீர்ணம் நீங்கும். வாய்க்கும் ஆரோக்யமாயிருக்கும்.

மாதுளை விதைகளைக் காயவைத்து இடித்து சலித்து பற்பொடியாக உபயோகிக்கலாம்.

மிளகாய் வற்றல், கொத்தமல்லி விதை, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, பெருங்காயம் முதலியவைகளை வருத்துக் கொள்ளவும். கருகப்பிலை, மாதுளை பிஞ்சுகள் நான்கு, உப்பு, புளி, மு.தலியவைகளுடன் வருத்த சாமான்களையும் சேர்த்து இடித்து வைத்துக் கொண்டால் வெகு நாட்களுக்கு ருசி கெடாமல் உபயோகப் படுத்தலாம்.

பெண்கள் பார்லிமெண்ட்

ப்ரசன்ன மாயிருக்கும் அங்கத்தினர்கள்: ஸ்ரீமதிகள் கதிஜா பேகம், லலிதா சுப்ரமண்யம், கமலா தாமோதரம், ஜானகி துரைசாமி அய்யங்கார், மனோரமா நாயுடு, ஜாஸ்மின் மிஸ்டிரி, காமேஸ்வரி, நளினி, விசாலாக்ஷி

விசாலாக்ஷி: இன்று கூடியிருப்பவர்களுக்கு புது அங்கத்தினர்களை அறிமுகப் படுத்த அனுமதிக்கோருகிறேன். ஸ்ரீமதி ஜாஸ்மின் மிஸ்டிரி பார்ஸி ஜாதியைச் சேர்ந்தவர். தமிழ் மொழியும் கொஞ்சம் தெரியும். கொச்சையாகப் பேசுவார். அதனால் பரவாயில்லை. எம்மதமும் நமக்கு சம்மதம். அவர் நமது பார்லிமெண்டில் கலந்து சொல்வதினால் நமக்கு எவ்வளவோ அனுகூலங்கள் உண்டு. பார்ஸி தேசத்தாரின் கலாசாரம், தேசாச்சாரம் முதலிய விஷயங்களைப்பற்றி அறிய பிரமேய மேற்படும்.

அங்கத்தினர்கள் எல்லோரும்: ஆம், ஆம்

விசாலாக்ஷி: குமாரி நளினியும், குமாரி காமேஸ்வரியுங்கூட புது அங்கத்தினர்கள். காலேஜ் மாணவிகளாயிருந்தாலும் வருங்கால தாய்மார்களாகவோ, தாய் நாட்டு சேவகிகளாகவோ தான் இருந்தாக வேண்டும். அதனால் அவர்களுக்கும் நமக்கும் ஒரு தொடர்பு ஏற்பட்டதைப் பற்றி எனது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கமலா தாமோதரம்: என்னால் இன்று மீட்டிங்குக்கு வரமுடியுமென்று நினைக்கவில்லை. இந்த ‘டெஸ்ட் மாட்ச்’ நடந்ததே, அதற்கு என் பையன் விடியற் காலையிலேயே எழுந்து டிக்கட்டுக்காக வெகு நேரம் கால் கடுக்க நின்று ஒரு டிக்கட்டை வாங்கிக்கொண்டு அந்த கிரிக் கெட் பந்தாட்டத்தைப் பார்க்கப் போனதால் வேளாவேளைக்கு ஆகாராதிகள் இல்லாமையினால் உடல் நலம் பாதிக்கப் பட்டு விட்டது. ஒரு நாளைக்கு வயிற்று

வலி என்கிறான். மற்றொரு நாளைக்கு சுரமென்கிறான். போனவாரம் பம்பாயில் நடந்ததே. அதை, நேரில் பார்ப்பது போல் ஆரவாரித்துக்கொண்டு ரேடியோவில் கேட்டு ஆனந்தித்துக் கொண்டிருந்தான்.

ஜாஸ்மின் மிஸ்டிரி: உங்கள் பையன் சென்னையில் பார்த்ததைப் பற்றி சொல்கிறீங்க. நாற்பத்தைந்து வயசான என் கணவர் சென்னையில் கண்டது போதா தென்று ஐந்தாவது டெஸ்டை பார்க்க பம்பாயுக்கும் பறந்து போயி வந்தாரே!

ஜானகி: கையிலே ஒரு துடுப்பை எடுத்துக் கொண்டு ஒரு பந்தை அடித்தால் அதைப் பார்க்க எத்தனை ஜனங்கள் கூடி விடுகிறார்கள்! தாய்மார்களும், சிறுமிகளும், ஏன் பாட்டிமார்களும் பலபேர் வந்திருந் தார்களாமே.

காமேஸ்வரி: ஜோரான ஆட்டம், ரன்கள், விக்கட், ஜோடி, அவுட், அவுட்டில்லை டிரா, என்று நாங்கள் கத்தும் போது எங்கள் உயிர் எங்களிடமே இருக்காதே. அந்த ஆட்டத்தைப் போய் பார்த்தால் தான் அதிலிருக் கும் விருவிருப்புத் தெரியும்.

விசாலாக்ஷி: சிரிப்பும், விளையாட்டும் சிலகாலம் என்பது உண்மைதான். ஆனால் இந்த மாதிரி விளையாட் டுகளில் பெண்களுக்கு ஏன் பங்குவேண்டும். இங்கி லாந்து ஆஸ்டிரேலியா, அமெரிக்கா முதலிய தேசத்து சிதோஷ்ண ஸ்திதிக்கு இவ்விளையாட்டுகள் சரியாயிருக் கலாம். நம் தேசத்தைப் போன்ற உயிரோடேயே தகனம் செய்து விடும் போலிருக்கும் சூரிய வெப்பத் தையுடைய நாட்டில் இம்மாதிரியான விளையாட்டுகளை ஆடவைப்பது உசிதமல்ல. இரண்டரை ரூபாய் டிக்கட் வாங்க மூன்றரை மைல் தூரத்திற்கு 'க்யூ' நின்றதாம். ஆட்டங்கள் நடத்தினாலும் ஜனங்களுக்கு வசதிகள் ஏற்படுத்த வேண்டும். பத்தாயிரம் ஜனங்கள் திணறிக் கொண்டு வேடிக்கைப் பார்க்கு மிடத்தில் ஒரு லக்ஷம் ஜனங்களை அடைத்தால்..........

கதிஜாபேகம்: இப்படி அடைபட்டு, கஷ்டப்பட் டாகிலும் வேடிக்கைப் பார்த்து விட்டுத்தானே வந்தார்

கள் நம் ஜனங்கள். அதிருக்கட்டும். போன வாரம் இந்திய பார்லிமெண்டில் ஹிந்து சட்டத்தில் புரட்சிகரமான மாறுதல்களை செய்து விட்டார்களாமே.

விசாலாக்ஷி: ஹிந்து மதசட்ட தொகுப்பு மசோதாவின் மீது ஒரு ரிபோட்டு தயாரிப்பதற்காக ஒரு செலக்ட் கமிட்டி நியமிக்கப் பட்டிருந்தது. அவர்களால் தயாரிக்கப் பட்ட ரிபோர்ட்டை டாக்டர் அம்பேத்கார் ஏழாம் தேதி இந்திய பார்லிமெண்டில் சமர்ப்பித்தார்.

லலிதா சுப்ரமண்யம்: விவாகம் நடந்த போது சீரு வகையராக்கள் சரியாக செய்ய வில்லை யென்றும், சிறிய சடங்குகளான பச்சை வழிப்பது, ஊஞ்சலுக்காக புதுப் புடவையும், வேஷ்டியும் வாங்கவில்லை யென்றும் இவைகளுக்காகவும் விவாக ரத்து ஏற்படலாம்.

விசாலாக்ஷி: சடங்குகள் சரிவர நடக்கவில்லை என்பதை வியாஜியமாகக் கொண்டு ஒரு விவாகம் செல்லாது என்று கூறிவிட முடியாது. விவாகச் சடங்குகளை மேற்பார்வை யிடுவதற்காகத்தானே தேவர்களையும், கல்யாணத்திற்கு நான்கு நாட்கள் முந்தியே பெரியோர்களையும், இஷ்டமித்ர பந்து ஜனங்களையும் சாட்சிகளாக ஏற்படுத்தி திருமணம் நடக்கிறது. அதனால் தான் விவாகத்தில் ஆஜராகும் சாட்சிகள் மீது பொறுப்பை சுமத்துகிறது செலக்ட் கமிட்டி.

காமேஸ்வரி: விவாகம், விவாகரத்து மருமக்கத் தாயம், அலிய சந்தானம், குழந்தைகளுக்கு பராமரிப்பு, வாரிசு உரிமை, முதலிய விஷயங்களைப் பிறகுக் கவனிப் போம். ரிபோர்ட்டில் பெண்களுக்குச் சேரவேண்டிய சொத்தைப் பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது.

நளினி: காமேஸ்வரிக்கு அவள் அப்பா இறந்து ஒரு வருஷமாகிறது. ஏழு பிள்ளைகளும் அவள் ஒரு பெண்ணும். அவள் தகப்பனுருக்கு நிரம்ப சொத்து உண்டோல்லியோ அதனல் தான் சுயநலத்தைப் பற்றி இவ்வளவு கவலைப் படுகிருள்.

விசாலாக்ஷி: காமேஸ்வரிக்குக் கவலையே வேண்

டாம். பெண்களுக்கும் பிள்ளைகளுக்கு மிடையே பட்ச பாதமே காட்டப் போகிறதில்லை. பிள்ளைகளைப்போலவே பெண்களுக்கும் சம பங்கு வேண்டு மென்ற ஷரத்து ஒன்றைச் சேர்த்திருக்கிறார்கள்.

ஜானகி: இம்மாதிரியான ஹிந்து சட்டத்திருத் தங்களுக்கு பண்டிதர்களிடமிருந்தும், ஆசாரக்காரர் களிடமிருந்தும் பலத்த எதிர்ப்பு இருக்கும்.

விசாலாக்ஷி: எந்த விஷயத்தில் தான் எதிர்ப்பு இல்லாமலிருக்கிறது. பலமான எதிர்ப்பு இருந்ததால் தானே இன்று நாம் சுதந்திர பிரஜைகளாக சுதந்திர பூமியில் திகழ்ந்து வருகிறோம். மகாத்மாவின் சாத்வீக சுயராஜ்யப் போருக்கு எவ்வளவு அமர்க்களமாக எதிர்ப்பு இருந்தது.

மனோரமா நாயுடு: நான் சீக்கிரம் வீட்டுக்குப்போக வேண்டும். குழாயில் தண்ணீர் வர ஆரம்பித்திருக்கும். வேலைக்குப் போகவேண்டும்.

லலிதா சுப்ரமண்யம்: நன்றாக ஞாபகப் படுத்தி னீர்கள். இந்த வருண பகவானின் சோதனையைத்தான் பாருங்களேன். இந்த பருவ மழை இல்லாததினால் வந்த விளைவுதானே தேசத்தில் சோற்று பஞ்சமும், தண்ணீர் கஷ்டமும்.

விசாலாக்ஷி: கவலைப் படாதீர்கள். எல்லா கோயில் களிலும் வருண பகவானுக்கு பூஜைச் செய்யச் சொல்லி நமது மாகாண சர்க்கார் ஒரு சுற்றறிக்கை விட்டிருக் கிறார்களாம். அதோடு கங்கா நதி தீரத்தில் ஐம்பதாயிரம் ஏக்கர் தரிசு நிலம் சாகுபடி செய்யப்படுவதை நமது இந்திய பிரதமர் நேரு மேற் பார்வையிட்டார். அகதி களுக்கு கூட்டுறவு பண்ணைகளை ஹஸ்தினாபுரத்தில் ஏற் படுத்தியிருக்கிறார்கள். இப்புது நிலங்களை நிலச் சுவான் தார்களிடமிருந்து பணங்கொடுத்து வாங்கி சிந்து விலிருந்தும், பஞ்சாபிலிருந்தும் வந்திருக்கும் அகதிகளு க்குக் கொடுத்து சாகுபடி செய்ய உதவி யளிக்கப்பட்டி கிறது.

ஜானகி: இந்த அகதிகள் சர்க்காரிடமிருந்து கடன்

வாங்கு வீடு, கால் நடைகள், யந்திரங்கள் விதைகள் முதலியவைகளை வாங்கிக் கொள்கிறார்களாக்கம்.

விசாலாக்ஷி : ஆமாம், வாங்கின கடனை பல தவணைகளில் திருப்பிக் கொடுத்து விடவேண்டும். இம்மாதிரி தரிசு நிலங்களை சாகுபடி செய்வதனால் தேசத்து உணவுப் பஞ்சம் கொஞ்சங்கொஞ்சமாக திரு மென்பதில் ஐயமேயில்லை.

விவாதம் தொடர்ந்து நடை பெறுவதற்கு இடம் கொடாமல் அங்கத்தினர்கள் மனதில் குழாய் ஜலம் பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் புகுந்து கொண்டதால், கூட்டம் திடீரென்று முடிவடைந்து விட்டது

———

பல பிரசுர கர்த்தர்களின் புத்தகங்களை ஒரே சிலவில் ஒரே முறையில் எம்மிடம் பெறலாம். உங்களுக்கு தேவையான எந்த புத்தகங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் எமக்கு எழுதுங்கள். நாவல்கள், சிறு கதைத் தொகுதிகள், சரித்திரங்கள், ஆராய்ச்சி நூல்கள், இன்ப நூல்கள், திரேக சம்பந்தமான ஆராய்ச்சிகள் இன்னும் ஏராளமான தினுசுகள் பெறலாம்.

மோகன் அன்டு கம்பெனி

43 லிங்கிச் செட்டித் தெரு, சென்னை 1

பசியும் ருசியும்

[அன்னம்]

அன்னம்:—என்ன ராமேஸ்வரி. குடல் தெறிக்க ஓடி வருகிறாயே.

ராமேஸ்வரி:—ஒன்றுமில்லை மாமி. காலில் செருப்புப் போட்டுக்கொள்ளாமல் வந்து விட்டேன். மாசி மாதமாகவாத் தோன்றுகிறது? சித்திரை வைக்காசிக்கு மேல் வெயில் கொளுத்துகிறதே?

அன்னம்:—சரி வா. உள்ளே வந்து உட்கார்ந்துகொள். நான் அரி நெல்லிக்காய் நறுக்கணும். பேசிக்கொண்டே அரிந்து விடுகிறேன்.

ராமேஸ்வரி:—உங்க வீட்டிலேயும் அரிநெல்லிக்காய் வந்திருக்கிறதா? எங்கள் நாத்தனார் வீட்டில் காய்த்ததென்று நேற்று என் புருஷன் அவர்கள் வீட்டிற்கு போயிருந்தபோது கொடுத்தார்கள் என்று ஒரு கூடைக்காய் கொண்டு வந்திருக்கிறார். என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. இங்கே ஓடி வந்தேன். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்.

அன்னம்:—பச்சையாகவே கொட்டையை நீக்கி வதக்கி தொக்கு செய்யப் போகிறேன். மிளகாய் வற்றல், பெருங்

காயம், வெந்தயம் மூன்றுமாக வறுத்து உப்பு சேர்த்துப் பொடி பண்ணி வைத்திருக்கிறேன். நறுக்கிய நெல்லிக்காயை வெடித்தக் கடுகுடன் போட்டு மஞ்சள் பொடி சேர்த்து வதங்கியதும், மிளகாய்ப் பொடியைக் கலந்து, சுருண்ட வதங்கியதும் எடுத்து இறுக மூடி வைத்துக்கொண்டால் வெகு நாட்களுக்குக் கெடாமலிருக்குமே!

ராமேஸ்வரி:—ஒரு விதம் சொல்லிவிட்டீர்கள். எல்லா நெல்லிக்காயையுமா தொக்காக செய்ய முடியும்?

அன்னம்:—பச்சை நெல்லிக்காயை கல்லுரலில் போட்டு இடித்து சாறு பிழிந்து எலுமிச்சந் சாதம்போல் கடுகு, மிளகாய் வற்றல் வறுத்து, உப்பு சேர்த்துக் கலந்தால் பௌர்ணமி யன்று நிலாச் சாப்பாட்டுக்கு ஆகும்.

நெல்லிக்காயை இடிக்கும்போது கொட்டைகளைப் பொறுக்கிவிட்டு, உப்பு, மிளகாய் வற்றல், பெருங்காயம் முதலியவைகளைச் சேர்த்து, வெண்மையாக அரைத்து வடைகளாகத் தட்டி, வெய்யலில் நன்றாகக் காய்ந்ததும் எடுத்து வைத்துக் கொண்டால், அவ்வப்போது ஊறவைத்து தயிருடன் கலந்தால் பச்சடியாகும். வெறும் வாயில் தின்றாலும் நன்றாக இருக்குமே.

ராமேஸ்வரி:—கல்லுரலில் இடித்துக் கொட்டையை நீக்கி ஜாம் செய்யலாமென்றாரமே எங்க நாத்தினர்.

அன்னம்:—இடித்து வைத்துள்ள விழுதளவு சர்க்கரையைக் கம்பிப்பாகாகச் செய்து இரண்டையும் சுருண்டக் காய்ச்சி வைத்துக் கொள்வதுதான் ஜாம். வெல்லப்பாகு வைத்து செய்தால் சீக்கிரத்தில் கெட்டுவிடும். அதனால் சர்க்கரைப் பாகே வை.

ராமேஸ்வரி:—இராத்திரிக்கு துவையல் அரைக்கட்டுமா?

அன்னம்:—பெருங்காயம், மிளகாய், உளுத்தம் பருப்பு முதலியவைகளை வறுத்துக்கொண்டு, கொட்டையை நீக்கிய நெல்லிக்காயுடன் உப்பு சேர்த்து அரைத்தாயானல், வாய் ருசியில்லாதவர்கூட அரைபடி அரிசி சாதத்தை விழுங்கி விடுவார்களே!

ராமேஸ்வரி:—அடேயப்பா!

புத்தகங்கள்

ராம ராஜ்யா

(ஆசிரியர்கள்: ஸ்ரீமான்கள் கே. எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார், டாக்டர் கே. வெங்கடாசாரி, கிடைக்குமிடம்: 10, பெரிய தெரு, கும்பகோணம். மாதமிருமுறை, வருடச் சந்தா ரூ. 4½. தனி இதழ் விலை 3 அணா).

மகாத்மாவின் மூன்று குரங்குகள், பாபூஜியின் வெள்ளாடு, மகாத்மாவும் குழந்தைகளும், தராசு எழுதிய காந்தியின் லட்சியங்கள் முதலிய அரிய கட்டுரைகளுடன் ஸ்ரீமான் தங்கராஜின் 'கம்பன் கற்பனையில் ராமராஜ்யம்' என்பதில் 'சீரிய, வாழ்க்கையும், பெண்கள் கல்வியும்' என்ற கட்டுரை வெகு விருவிருப்பாக இருக்கிறது.

'சீரிய வாழ்க்கை ஒவ்வொரு வீட்டிலிருந்தே உதயமாகின்றது. அதுவும் குடும்பத்தின் அச்சாணி போன்றவரிடமிருந்தே ஆரம்பமாகின்றது. குடும்பத்தின் அச்சாணி பெண்டிரே ஆவர்!....'மனையை ஆளும் மனையாளுக்கும் அறிவு இருப்பது இன்றியமையாதது'. மெய்யான வாக்குகள். கம்பன் கண்ட ராம ராஜ்யத்தை நாமும் காண வழிகாட்டியாக "ராம ராஜ்யாவும்" இருக்குமென்பதில் ஐயமில்லை. எவ்வித சுயநலனுங்கருதாது பொது நலனுக்காக சேவை செய்ய முன் வந்துள்ள ராம ராஜ்யாவுக்கு தமிழ் நாட்டில் என் தேசம் பூராகவுமே நல்ல வரவேற்பிருக்கும்.

ஹிதபாஷிணி

ஆசிரியர்: ஸ்ரீமான் ஆர். முத்துகிருஷ்ண சாஸ்திரிகள். கிடைக்குமிடம்: மேற்கு மாடவீதி, தஞ்சாவூர். மாதவெளியீடு. வருட சந்தா ரூ. 3. தனிப்பிரதி அணா 5.)

பக்திரசம் ததும்பும் கட்டுரைகளும், ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதரின் திவ்ய சரித்திரமும், போஜனக்ரமங்கள், குழந்தைகளுக்கு ஈரல் குலைக்கட்டி வராமல் தடுப்பதற்கான வழிகள், ஸ்திரீ தர்மம் முதலிய அரிய விஷயங்களடங்கிய வெளியீடு.

ஆத்ம ஜோதி

கௌரவ ஆசிரியர் திரு. க. ராமசந்திரன். பதிப்பாசிரியர் ஸ்ரீ நா. முத்தையா. கிடைக்குமிடம்: 79/6. டொலஸ்பாகே ரோடு, நாவலப்பிட்டி, இலங்கை. வருடச் சந்தா ரூ. 3/- தனிப்பிரதி சதம் 30.)

சன்மார்க்க வழியைக் காட்டி, ஆத்மீக சக்தி, சமரசம் ஒன்றே, உலகில் சாந்தி நிலவவேண்டும் என்ற உயர்ந்த லக்ஷ்யங்களுக்காக பாடுபட முன் வந்துள்ள ஆத்ம ஜோதிக்கு தமிழர்களிடையே நல்ல வரவேற்பிருக்கும் என்று திடமாகக் கூறலாம்.

ஹிந்தி போதினி

இயற்றியவர்: ஸ்ரீமான் ஆக்கூர் அனந்தாச்சாரி. கிடைக்குமிடம்: கிட்டப்பா பிரசுராலயம், வாலாஜாபேட்டை, வடார்க்காடு ஜில்லா. விலை ரூபாய் 1-8-0-

காந்திஜியின் நிர்மாண திட்டங்களில் தேசிய பாஷையாகிய ஹிந்துஸ்தானியும் ஒரு பிரிவாகும். ஹிந்துஸ்தானி கற்பதால் நமது தமிழ் பாஷைக்குக் குறைவு ஏற்பட்டு விடுமென்பது சரியல்ல. பல பாஷைகளையும், விஷயங்களையும் கற்று நம் ஞான விருத்தியைப் பெருக்கிக் கொள்ளலாமல்லவா?

ஹிந்துஸ்தானி பாஷையை வீட்டிலிருந்து கொண்டே உபாத்தியாயர் உதவியின்றி கற்றுக்கொள்ள ஆக்கூர் அனந்தாச்சாரி இப்புத்தகத்தை இயற்றியுள்ளார். உயிரெழுத்துக்களிலிருந்து ஆரம்பித்து, சிறிய வாக்கியங்களின் மொழிபெயர்ப்புடன், உச்சரிப்புகளையும் விவரமாகக் கொடுத்திருப்பதானது பாஷையை ஆர்வத்தோடு கற்றுக்கொள்பவர்களுக்கு வெகு எளிதாயிருக்கும். சிறுவர்களுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் வெகு உபயோகமாயிருக்கும்.

வரப்பெற்றோம்

பர்மா ஷெல் கம்பனியார் அழகழகாக வெளியிட்டுள்ள காலண்டர்கள் வரப்பெற்றோம்.

கேள்வி பதில்

துஷ்டக் குழந்தைகள்

கேள்வி: ஸ்ரீமதி ராஜம், பம்பாய். எனக்கு நான்கு குழந்தைகள் இருக்கின்றன. ஐந்தாவது உண்டாயிருக்கிறேன். இந் நான்கும் செய்யும் விஷமம் சகிக்க முடியவில்லை. அவர்களை அடித்தும், கட்டிப்போட்டும், பட்டினி போட்டுங் கூடப் பார்த்துவிட்டேன். துஷ்டத்தனம் அதிகமாகிறதே தவிர, குறையவில்லை. இதற்குப் பரிகாரம் ஒன்றுமில்லையா?

பதில்: புத்திசாலிகளான குழந்தைகள் தமது கர்மேந்திரியங்களை உபயோகித்து ஆனந்தப்பட முயற்சி செய்வது பெரியவர்களுக்கு துஷ்டத்தனமாகத் தோன்றுகிறது. அவர்களைத் தண்டிப்பதால் பயனில்லை. உங்கள் குழந்தைகள் குருடர்களாகவோ செவிடர்களாகவோ இருப்பதை விரும்புவீர்களா?

நான்கு குழந்தைகளைச் சமாளிப்பது சிரமம்தான். அதோடு கர்ப்பிணியாக இருக்கும் உமக்கு 'மசக்கை' காரணமாக இன்னும் அதிக சிரமமாக இருக்கும்.

நீங்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள புத்திசாலியான பெண்ணொருத்தியை நியமித்துக் கொள்ள முடிந்தால் நலம். அதற்கு வசதி யில்லாவிட்டால் அவர்களை சிறு குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்கோ (Nursery School) அல்லது (Creche) கிரேஷேகளுக்கோ அனுப்புவதுதான் உசிதம்.

குழந்தைகளை அடித்துத் துன்புறுத்துவதனால் அவர்கள் வருங்காலத்தைப் பாழாக்குவதாகும்.

நமது அரசாங்கம் உடனடியாகக் கவனிக்க வேண்டிய விஷயம் குழந்தைகளின் பராமரிப்பாகும். அவர்கள்தான் சுதந்தர இந்தியாவின் வருங்காலப் பிரஜைகள். நமது சுதந்தரப் பொக்கிஷத்தை அனுபவிக்க வேண்டிய வாரிசுகள். அவர்கள் சரியாக வளர்க்கப் படாவிட்டால் உலோமியின்

தனத்தைத் தனயன் வீணுக்கியது போன்ற சீர்கேடான நிலமையை அடைந்து விடுவார்கள்.

தற்சமயம் பல பெண்கள் உத்தியோகத்தில் யுத்த காலத்தில் சேர்ந்தவர்கள் தாய்மார்களாக இருக்கிருர்கள். இவர்களுடைய ஊதியம் குடும்பத் தேவைக்கு அத்யாவசியமா யிருப்பதால் உத்தியோகத்தைக் கைவிட முடியாம லிருக்கிறது. இவர்கள் குழந்தைகளுக்காகவும் உம்போன்றவர்களுடைய குழந்தைகளுக்காகவும் ரஷ்யாவில் இருப்பதுபோல கிரேஷேக்களை ஏற்படுத்த வேண்டிய விஷயம் உடனடியாக அரசாங்கம் கவனிக்க வேண்டியது. மத்திய சர்க்காரின் சுகாதார இலாகா இந்தக் குறையை நிவர்த்தி செய்ய முயற்சிகளை ஆரம்பிக்குமென எதிர் பார்க்கிறேன்.

கேள்வி: ஸ்ரீமதி பொ. அ. யாழ்ப்பாணம்.

இரண்டாண்டுகட்கு முன்னம் நான் என் சகோதரி மகளை படிப்பதற்காக அழைத்து வந்தேன். இது பொறுக்காமல் என் கணவனுடைய சகோதரி தன் மகளை அனுப்பி யிருக்கிருள். என் சகோதரி மகள்மீது அவர் அடிக்கடி குறை கூறுகிருர். நானும் சும்மா விடாமல் அவர் சகோதரி மகளைக் குற்றங் கூறுவதில் சளைப்பதில்லை. இதனுல் 'குழந்தைகளில்லை' என்ற ஒரே குறையுடன் இருந்த எங்களிருவரிடையே ஓயாத சச்சரவுகளும் மனஸ்தாபங்களும் உண்டாகின்றன. எனக்கு என் சகோதரி மகள்மீது அதிக அன்பு ஏற்பட்டிருப்பதால் அவளை விட்டுப் பிரிந்திருக்க முடியாது. அவருடைய சகோதரி மகளை வீட்டைவிட்டு விரட்ட வழி என்ன?

நமது உறவினர்கள்:

பதில்: உங்களுக்கு எப்படி அன்பு ஏற்பட்டிருக்கிறதோ அப்படியே அவருக்கும் அன்புண்டாகலா மல்லவா! அந்த சுதந்தரம் கூட அவருக்கு வேண்டாமா? அன்பு தெய்வீக மானது. உங்கள் உள்ளத்திலுள்ள வேற்றுமையை அகற்றி அவர் சகோதரி குழந்தையும் உங்கள் சகோதரி குழந்தையும் உங்கள் குழந்தைகளே என பாவிக்க ஆரம்பித்தால் சச்சரவுக்கு இடமே யிராது.

அன்பு என்னும் ஆயுதம் தேவர்களையே அடிபணிய வைக்குமென்றால், உங்களுக்கு மாத்திரம் பயனற்றுப் போய் விடுமா? எல்லாக் குழந்தைகளும் தெய்வீக உருவங்கள் என்னும் உண்மையை உணர்ந்து விட்டால் வாழ்க்கையில் மட்டற்ற சுகம் வலுவில் வந்து கிட்டும். அதற்காக நீங்கள் செய்ய வேண்டியது ஒரு பெரிய தியாகம். "யான், எனது" என்பதை மறக்கவேண்டும். அவ்வளவுதான்.

நன்றி கெட்ட மகள்

கேள்வி: ஸ்ரீமதி வி. ரா. எங்களுக்கு ஒரே ஒரு பெண். அவளை வளர்த்த செல்லம் எங்களைக்கண்டு ஊரே சிரித்தது. புலிப்பால் வேண்டுமென்றால் உடனே எங்கிருந்தாவது இரண்டுபடி அளந்து கொண்டுவந்து விடுவார் அவள் அப்பா. ஐயாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கொடுத்து ஒரு எம். ஏ. பி. எல்லுக்கு கல்யாணம் செய்து கொடுத்திருக்கிறோம். அவன் பேச்சைக் கேட்டுக்கொண்டு இந்த நன்றி கெட்ட பெண் ஆடுகிற கூத்து பூதேவிக்குக்கூட பொறுக்காது. அவன் தன் வாழாவெட்டித் தங்கையின் வார்த்தையைக் கேட்டுக் கொண்டு "உங்கள் அப்பாவைக் கேட்டு மூவாயிரம் ரூபாய் வாங்கிண்டுவா," என்றான்.

என் கணவர் ஒரு பைத்தியம். உடனே வீட்டை விற்று பணத்தை அனுப்பி விட்டு குடக்கூலிக்கு இடம் பார்த்துக் கொண்டு வந்துவிட்டார். இப்பொழுது இருபது நாட்களாக படுத்த படுக்கையாயிருக்கிறார். அந்த நன்றி கெட்ட பெண்ணை அழைத்துவர என் தம்பியை அனுப்பினேன். அவள் தன் கணவன் உத்தரவு கொடுக்கவில்லை யென்று வரமாட்டேனென்று சொல்லி விட்டாளாம். இந்தப் பாவி மனிதன் "அம்மா குழந்தே, அம்மா செல்வி என்று" அலறுவது என் மனதைப் பிளக்கிறது. அந்தப் பெண்ணைப் பெற்ற வயிற்றை நொந்து கொள்வேனா அல்லது பெண் பித்துப் பிடித்து அலையும் என் கணவனை நொந்து கொள்வேனா? "அந்தப் பிசாசு நமக்குப் பிறக்கவில்லை என்று, நினைத்துக் கொள்ளுங்களேன்" என்றால் அவர் "என் மனது கேட்கவில்லையே" என்று பச்சைக் குழந்தையைப் போல் அழுகிறார். இதற்கு ஏதாவது வழி சொல்ல முடியுமா?

பதில்: நீங்கள் உங்கள் மகளைக்குறை கூறுவதும் நன்றி கெட்டவள் என்று சொல்வதும் தவறு. குழந்தைகளைப் பேணி வளர்ப்பது பெற்றோர்களுடைய கடமை. இதற்காக அவர்களுடைய நன்றியை எதிர் பார்க்கக் கூடாது. ஒரு போலீஸ்காரன் திருடனை மடக்கிப் பிடித்தால் அதற்காக அவனுக்கு நன்றி கூறுவாருண்டோ. குழந்தைகள் நம்மிடம் பட்சமாய் நடந்து கொண்டால் அதற்காக நாம் அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஏனெனில் அவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்குக் கடமைப் பட்டவர்களே யன்றி தமது பெற்றோருக்கு உதவி புரிய கடமைப் பட்டவர்களன்று. இதைப் பெற்றோர்கன் நன்றாக உணர்ந்தால் பெரும்பான்மையான குடும்ப சக்சரவுகள் ஏற்பட இடமே இராது. மாமியார் நாட்டுப் பெண் பூசல்களுக்கு பெரும்பாலும் மாமியார் இந்த தத்துவத்தை உணராதது தான்.

ஈடித் விட்வெல் என்னும் ஆங்கிலக் கவியரசி "பன்றித் தொடை யெலும்பும் இருதயமும்" (HAMBONE AND THE HEART) என ஒரு உன்னதமான கவியைப் புனைந்திருக்கிறார். அதை உமது கணவருக்குப் படித்துக் காட்டுங்கள். உடனே அவர் தாம் தம் மகளுக்குத் தமது கடமையைப் பூர்த்தி செய்து விட்டதற்காக சந்தோஷித்து "இனி அவள் தனது குடும்பத்திற்குத் தன் கடமையை செலுத்த விட்டுவிடவேண்டு" மென்னும் தீர்மானத்திற்கு வருவார். "பெண் வரவில்லையே," என்ற ஏக்கமும் அகலும்.

Printed by T.V. Ramanath at Ramanath Press, 188 Royapettah High Road, Madras 14. Edited and Published by S. Visalakshi Murali," Pachayappa's Hostel Road, Madras 10.

பாப்பா என்ன எழுதப்
போகிறாள் தெரியுமா?

பாப்பா என்ன எழுத
ரான்னு பார்க்கிறே!
அடுத்த திலகத்திலே
எழுதி முடிச்சுடுவா.
அப்போ பார்த்துக்கோ.

REGD. NO. M. 5271

KUMKUMAM

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 19 FEB 1949 MADRAS

திருப்பதி ரத்ன கிரீடம் பதித்தவர்

ஸூரஜ் மல்ஸ்

"55 வருஷங்களுக்கு முன் ஸ்தாபிதம்"

தேவஸ்தானம் கமிட்டி

திருப்பதி 26-9-48

பகவான் ஸ்ரீ வெங்கடேஸ்வரரின் ரத்ன கிரீடத்தில் திகழும் அபூர்வமான வேலைப்பாட்டை கவனிந்தபோது அதைத் தயாரித்த ஸூரஜ்மல்ஸ் கம்பெனியின் உன்னதமான வேலைத்திறமையில் தங்களுக்குள்ள பெருமதிப்பை தெரிவித்துக் கொள்வதில் திருமலை திருப்பதி தேவஸ்தானக் கமிட்டியார் மிக்க மகிழ்ச்சி யடைகின்றனர். கலையின் சிகரம் பூரணப் பொலிவுடன் விளங்கலாமென்பதற்கு இக்கிரீடமே தகுந்த சான்று.

B. வீராசாமி நாயுடு.
கமிஷனர்.

மேன்மையான நல்முத்து நவரத்தினங்கள்
நாணயமான தங்க நகை வியாபாரிகள்

313, எஸ்பிளனேட் .. மதராஸ்